"குடி அரசு" வெளியீடு நெ: 18.

# இந்தியாவின் குறைபாடுகள்.

ஆசிரியர்,

இந்தியா கவுன்சில் அங்கத்தினரும் கேம்பிரிட்ஜ் செயின்ட்
ஜான்ஸ் கல்லூரி மாஜி மாணவரும், புனா பேர்
கூசன் கல்லூரிக் கணித ஆசிரியராயும், ஷை
கல்லூரியில் தலைமையாசிரியராயு
மிருந்தவரும், பம்பாய் மாஜி
கல்வி மந்திரியுமான

டாக்டர் R. P. பராஞ்சிபை M. A. D. Sc.
அவர்கள் எழுதிய ஆங்கிலப்புத்தகத்தின் மொழிபெயர்ப்பு.

"குடி அரசு" பதிப்பகம், ஈரோடு.

1932 [அணா 8.

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு அணா 6.

# முகவுரை.

——:0:——

இந்திய நாட்டிலுள்ள சமுதாய விஷயங்களைச் சிறிது ஊடுருவிப் பரிசீலனை செய்ய முன்வரும் ஒவ்வொருவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனியே போல் வெளியாகுவன எவையெனில்—இந்திய மக்கள் ஒவ்வொரு துறையிலும் (சாஸ்திரோக்த) சட்ட திட்டங்களுக்கு மிகமிகப் பயந்து அடிமைகளாக ஏங்கியிருப்பதும், பகுத்தறிவுச் சுடரை எள்ளளவும் ஏறிட்டுப் பாராதிருப்பதுமேயாம். இவைகளே இந்நாட்டில் காணப்படும் எண்ணிறந்த கஷ்டநிஷ்டூரங்களுக்கு மூலகாரணங்கள் எனலாம்.

இன்னும், மத உலகில் சிறிது நுழைந்து ஆராய்வோமானால், மேற்குறித்த விஷயங்கள் மிகவும் தெளிவாக நன்கு புலப்படும். எத்தனையெத்தனை மதங்கள்! எத்தனையெத்தனை ஜாதி பேதங்கள்!! தவிர, செல்வாக்குமிக்க புரோகிதர்கள், குருமார்கள், மௌல்விகளென்ன? கணக்கற்ற கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் எனப்படும் பூஜாஸ்தலங்களென்ன; மாண்டார் பொருட்டு கட்டப்படும் சமாதிகளிலும், ஈமச்சடங்குகளிலும் விரயமாக்கப்படும் கோடிக்கணக்கான திரவியமென்ன; ஏதோ உண்மைத்தத்துவங்களை விளக்குவனவாகக் கூறப்படும்பிரயோசனமற்ற சிக்கலான வைதீகச் சடங்குகளில் ஏராளமாக விரயமாகும் பொருள்களென்ன—இவைகளெல்லாவற்றினாலும், இந்திய சமூகத்தை உள்ளும் புறமும் தலைவிரி கோலமாக ஆட்டிவருவது மதம் என்னும் பேய் ஒன்றே என்பதை விளக்கப்போதிய சான்றுகளாமன்றோ!

சாஸ்திர சட்டதிட்டங்களின் மேலான ஆதிக்கம், மேற் குறித்தனவற்றிலேயே யன்றி ஏனைய இந்திய சமுதாய இயக்கத்துறைகள் பலவற்றிலும் பரக்கக்காணலாம். இந்தியர்கள் கர்நாடக பழைய முறைகளையே விவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளில் இன்னும் கடைப்பிடித்தொழுகக்காரண மென்ன? அவைகள் சாஸ்திரங்களிலே ரிஷி புங்கவர்களால் விதிக்கப்பட்ட மாறாத தத்துவங்கள் என்பதாகக்கருதப்படுவதனாலேயன்றோ! தவிர, சமூகப் பழக்க வழக்கங்களில் எவை ஆதரிக்கப்படுகின்றன? நியாயம் எது? தகுதியானது எது? உபயோகமுள்ளதெது?—என்பன சிறிதாகிலும் கவனிக்கப் படுகின்றனவா? இல்லை. ஆனால், மதத்தலைவர்களாலும், சாஸ்திர புராணங்களாலும் ஆதரிக்கப்பட்ட விஷயங்கள் எவையானாலும் சரி, அவைகளே அதிசிரேஷ்டமாகக் கருதப் படுகின்றன. அரசியல் விஷயங்களிற் கூட குறிக்கப்பட்ட கொள்கைகளும், வழிகளும் நேரா? தவறா? என்பதைச் சிறிதும் சிந்தியாமல் இவர் கூறினார், அவர் கூறினார் என்று ஒரு தனிப்பட்ட மனிதனுடைய வாக்கையே பிரதானமாகக் கொண்டு நடக்கும், இந்தியருடைய மனப்பான்மை மேற்குறித்தவாறு அவர்களது அடிமைத் தன்மையையேயன்றி வேறெதைக் காண்பிக்கின்றது? மேலும், இந்திய தினசரி சமாச்சாரப் பத்திரிகைகளைப் புரட்டிப்பார்த்தால் அவற்றின் பெரும் பகுதி—சில முக்கியஸ்தர்களுடைய உபயோகமற்ற ஆர்ப்பாட்டங்களும், அனுதாபக் கூட்டங்களும், விருந்தளிப்புகளோடு கூடிய பாராட்டுக் கூட்டங்களும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சில நாயன்மார்கள், குருமார்கள் மறைந்தநாட் கொண்டாட்டங்களும். ஆதிகால வீரசூரர்களுக்கென

நடைபெறும் உற்சவங்களுமாக இருப்பதை இன்றும் காணலாம். பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தால், வருஷத்தில் எல்லா நாட்களிலும் சாஸ்திர புராண சம்பந்தமான, ஒவ்வொரு திருவிழா குறிக்கப் பட்டிருப்பதைக் காணலாம்! இவ்வித பிரயோசனமற்ற விழாக்களாலேதான் இந்திய மக்களின் முக்கிய கைத்தொழில்களும், அலுவல்களும் பிரகாசமின்றி இடர்பட்டுக் கிடக்கின்றன.

இன்னும் இந்தியாவில் கூட்டுவாழ்க்கை முறையை [Joint family system] உற்று நோக்குமிடத்து அதிலும் குறிக்கப்பட்ட அடிமைத்தனமே மேலோங்கியிருப்பதை விளக்கமாகக் காணலாம்.

மேலும், இந்தியாவிலே அரசியல் துறைகளில் ஆதிக்கம் கொண்டுள்ள மேனாட்டு உத்தியோகஸ்தர்கள், இந்திய மக்களின் இயற்கை, அடிமை மனப்பான்மையே என எண்ணி, அதையே ஆதாரமாகக் கொண்டு—உண்மையான தலைவர்கள் எவ்வாறு மனிதர்களுக்கு விஷயங்களைப் போதித்து அவர்களுடைய அறிவிற்கு எட்டும்படி செய்யவேண்டுமோ அவ்வழிகளை அறவே துறந்து—எந்நாளும் மேலோங்காதபடி அடக்கு முறையைக் கடைப்பிடித்தொழுகுவதை எங்கணும் காணலாம். படித்த கூட்டத்தார்கள் அதிகார வர்க்கத்தினரைப் பத்திரிகைகளிலும் சட்டசபைகளிலும் தாக்கிவரக்காரணம் இதுவேயாகும்.

இந்தச்சிறு புத்தகத்தின் நோக்கம் யாதெனில்:—பகுத்தறிவுக் கொள்கையைப் பரவச்செய்து அறிவுக்கொவ்வாத ஆதாரங்களின் ஆதிக்கத்திற்கு அடிமையாக இருக்கும் மனப்

பான்மையை வேரோடு அழிப்பது ஒன்றே இந்தியாவின் உண்மையான முன்னேற்றத்திற்கு நேரானவழியென்பதை உணர்த்துவதேயாகும்.

இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள மூடப்பழக்க வழக்கங்கள், இந்தியாவிலே மட்டுந்தானிருக்கின்றன என்பதாகத்தீர்மானித்துவிடவேண்டாம். மற்றத்தேசங்களிலும் இவைபோன்ற அனேக அட்டூழியங்கள் காணப்படுகின்றன. ஆனால் மற்ற தேசங்களில் இந்தியாவிலிருப்பதுபோல் கெடுதிகள் அவ்வளவு அபரிமிதமாக இல்லாமல் சற்றே குறைந்து காணப்படுகின்றதென்று மட்டுமே கூறலாம். மேனாடுகளை எடுத்துக்கொண்டோமானால்—ரோமன் கத்தோலிக் எனப்படும் கிறிஸ்துமதம் பரவியுள்ள தேசங்கள் மற்ற தேசங்களைவிடப் பின்னடைந்திருப்பதற்குக்காரணம் பொதுவாகக் கூறுமிடத்து அத்தேச மக்களின் அறிவெனும் ஜோதியை மறைத்து, அந்தமதப்பாதுகாப்பாளருடையகோஷ்டியானதுசட்டதிட்டங்களால்அம்மதஸ்தர்களைஅடிமைக்குழியில்ஆழ்த்திவைத்திருப்பதேமுக்கியகாரணமாகும். முற்போக்கில் சிறந்துமிளிரும்புராட்டெஸ்டான்ட் எனப்படும் வேறுவிதக்கிறிஸ்தவ தேசங்களிலோவெனில் மதமானது பல்வேறு பிரிவுகளாகச் சிதறுண்டிருப்பதோடு அங்குள்ள பெரும்பான்மையான மக்கள் முற்குறித்த மதப்பிரிவினைகளில் காணப்படும் எதிர்மாறான கொள்கைகளில் ஒரு சிறிதும் கவனம் செலுத்தாமல்-- ஏன்? மனப்பூர்வமாக வெறுத்தே வருகின்றனர்.

அந்நாடுகளிலேயும் அறிவியக்கத்திற்கு விரோதமான அல்லது கிறிஸ்தவத்துவம் [Christian Science] மூலா

தாரத்துவம் [Fundamentalism] எனப்படும் பல இயக்கங்களிருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் அவைகள் நமது "அறிவியக்கம்" எனும் தெளிந்த நதியை ஒருக்காலும் கலக்கிவிட முடியாதெனலாம். எனவே ஓர் பகுத்தறிவாளி [Rationalist] எவ்விதஎதிர்ப்புகளுக்கும் மறைப்புகளுக்கும், மனிதர்களுக்கே இயற்கையான தாமத குணத்தாலேற்படும் தடைகளுக்கும்—சிறிதும் இடம் கொடுத்துப் பின் வாங்காமல் தனது கொள்கைகளை எல்லாவித முறைகளிலும் கடைப்பிடித்தொழுக வேண்டியவனேயாவான்.

எது எவ்வாறிருப்பினும் சரியே, தேசிய முன்னேற்றம் மிகவும் சீர்குலைந்து பகுத்தறிவு வளர்ச்சி (Rationalism) சுத்த சூனியாக இருக்கும் நமது நாட்டின் நிலையை மட்டிலுமே நாம் முக்கியமாகக் கவனிப்போமாக. முக்கியமாக ஒன்றை மட்டும் கூறி இம் முகவுரையை முடிக்கின்றோம்.

பகுத்தறிவிற்கு மாறுபடாத களங்கமற்ற தேசீயத்தை பகுத்தறிவு இயக்கம் (Rationalism)எவ்வகையிலும் எதிர்க்காதென்பதையும், மேலும், இந்த பகுத்தறிவுக் கொள்கையானது [Rationalism] ஐக்கியமும், முன்னேற்றமும், சுயமரியாதை உணர்ச்சியையுமே நமது இந்திய தேசத்தில் தோற்றுவிக்க மிகுந்த உதவியளிக்குமென்பதையும் பன்முறையும் வற்புறுத்திக் கூறுகின்றோம்.

R. P. (ஆக்கியோன்)

——:0:——

# பிரசுரிப்போர் முன்னுரை.

——:0:——

இந்தப் புத்தகமானது, இங்கிலாந்து பிரிவிகவுன்சில் அங்கத்தினராயிருந்தவரும், கேம்பிரிட்ஜ் செண்ட் ஜான்ஸ் கல்லூரி மாணவரும், புனா, பெர்கூசன் கல்லூரிக்கணித ஆசிரியராயும், தலைமை ஆசிரியராயுமிருந்தவரும், பம்பாய் மாஜி கல்வி மந்திரியாயிருந்த வருமான டாக்டர் R. P. பராஞ்சிபை, அவர்களால் இங்கிலீசில் எழுதப்பட்டு, லண்டன் R. P. A. சங்கத்தாரால் (Watts & Co.,) வாட்ஸ் கம்பெனி மூலம் வெளியிடப்பட்டதை, R. P. A. சங்கத்தாரதுதயவுநிறைந்தசம்மதத்தின்மீது நம்மால் வெளியிடப்பட்டது. லண்டன் பகுத்தறிவு (R P A) சங்கத்தாருக்கு நமது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

குடி அரசு பதிப்பகத்தார், ஈரோடு.

# இந்தியாவின் குறைபாடுகள்.

—:0:—

## கல்வியும், மதமும்.

### முற்கால போதனுமுறை.

உலகத்தில் அறிவாளிகளாய் இருப்பவர்கள் எவரும் ஒவ்வொரு துறையிலும் முற்போக்கு ஏற்படவேண்டுமென்பதில் கவலையும், கருத்தும் உடையவர்களாக இருப்பார்களே யொழிய பிற்போக்காளர்களாக இருக்கவே மாட்டார்கள். ஆதலால் மக்கள் ஒவ்வொருவரும் தற்காலம் தாம் இருக்கும் நிலைமையையே கிரமமான நிலைமை என்றும், தமது எண்ணங்களும் நம்பிக்கைகளுமே சரியானவைகளென்றும் கருதிக்கொண்டு இராமல் அறிவுக்கும், அனுபவத்திற்கும் ஒத்துவராத விஷயங்களை தைரியமாய் புறக்கணித்து பகுத்தறிவுக்கு ஏற்றதை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். ஆனால், மனிதர்களுடைய வைதீக சம்பந்தமான (பிடிவாத) குணமானது அறிவின் சுதந்திரத்திற்குத்தடையாகவே இருந்து வருகின்றது.

அன்றியும், சிறுபிராய முதலே மக்களுக்குள் புகுத்தப்பட்டதான எவ்விதமான உணர்ச்சியும் மக்களைப் புதிய தோற்றங்களுக்குத்தக்கவாறுநடந்து கொள்ளவிடாமல், தடைப்படுத்துவதுடன் பல கஷ்டங்களுக்கும் ஆளாக்கியே தீருகின்றது. ஆதலால், குழந்தைப் பிராயத்திலிருந்தே சிறுவர்களுக்குச் சரியான மனப்பான்மை ஏற்படும் பொருட்டு எந்த விஷயத்

திற்கும் அவர்களுடைய அறிவையும், ஆராய்ச்சியையுமே பிரதானமானவையாய்க் கருதவேண்டும்; அவைகளின் மூலம் எந்த முடிவையும் அடைய இடம் கொடுத்து, தாங்களாகவே ஒரு முடிவுக்கு வரும்படியான மாதிரியில் அவர்களுக்கு விஷயங்களை போதிக்கவேண்டும், இவ்வாறு செய்தோமானால் அவர்களது பிற்கால வாழ்வில் முற்போக்கடைய வேண்டிய விஷயத்தில் எவ்வித தடையும், கஷ்டமும் ஏற்பட இடமில்லாது போய்விடும்.

ஆகவே, மேற்கண்ட இந்தக் காரணங்களால் குழந்தைகளின் கல்விமுறையானது முக்கியமானதாகக்கருதவேண்டியதென்றாகும் என்பதை அறியலாம். அதாவது கல்வி விஷயத்தில் குழந்தைகளின் மனத்தில் அவர்களால் நன்றாய் ஆராய்ந்ததும், அநுபவத்தை ஒட்டியதுமான விஷயங்களே பதியும்படியாகவும், எப்படிப்பட்ட எண்ணமானாலும், நம்பிக்கையானாலும் கட்டாயத்தின் மூலம் புகுத்தப்படாமலும், ஏற்படவிடாமலும் கவனித்துக்கல்வியின் போதனைமுறையை அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட முறைதான் சரியான போதனைமுறையாகும்.

## கல்வியில் மதம்.

ஆனால், இதற்கு நேர்மாறாக மக்களின் குழந்தைப்பருவத்திலிருந்தே "கல்விப்போதனை" என்னும் பெயரின் மூலம், படிப்பின் வழியாய் மதங்கள் வந்து அவர்கள் மனத்தில் புகுந்துகொண்டு தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், வளர்க்கவும் பாடுபடுகின்றன.

உலகத்தில் உள்ள எல்லா மதங்களிடமும் இந்தக்குணம் இருந்து தான் வருகிறது. நவ நாகரீக தேசம் என்று சொ

ல்லப்படும் இங்கிலாந்து தேசத்திலும்கூட கல்விப்போதனை யின் சீர்திருத்தமானது பள்ளிக்கூடங்களில் மத ஆதிக்கத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டு கல்வி கற்பிக்க முடியாமல் இருப்ப தோடு கிறிஸ்துவ மதத்தில் ஏற்பட்டுள்ள பல பிரிவுத்தகரா று களால் பலதடைகளும் ஏற்பட்டு வருகின்றன. உதாரணமாகச் சமீபத்தில் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்துத்தீரவேண் டிய கட்டாய வயதை இப்போது இருப்பதைவிட இன்னும் சற்று உயர்த்தவேண்டும் என்கின்ற ஒரு பிரச்சினை அங்கு கல்வி இலாகாக்காரர்களால் கொண்டுவரப்பட்ட காலத்தில், அங்குள்ள மத சம்பந்தமான பல பிரிவார்கள் அதாவது ரோ மன் கத்தோலிக் கூட்டத்தார்களும், சர்ச்சுமென், நான்கன் பர்மிஸ்ட் கூட்டத்தாரும் தங்களுக்குள் ஏற்பட்ட தகரா றுக ளினால் அப்பிரச்சினையைச்சட்டசபையில் தோற்கடித்து விட் டார்கள்.

இதற்குக்காரணம் என்னவென்றால் அதிக வயதுவரை பிள்ளைகளைப் படிக்கவைக்கவேண்டுமானால் பள்ளிக்கூடங்களில் இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் இன்னும் கொஞ்சம் அதிகமான சௌகரியங்களும், இடவசதிகளும் தேவையிருக் கும். ஆகவே, அதற்குசக்தியும்,சௌகரியமும்இல்லாதவர்கள் சக்தியும் சௌகரியமும் இருக்கின்றவர்களைக்கூட நடத்தவிடா மல் செய்து விட்டார்கள். ஏனெனில், எந்தப்பள்ளியில் அதி கப் பிள்ளைகள் படிக்க நேரிடுமோ அந்தப் பிள்ளைகளின்மீது அந்தப்பள்ளிக்குச் சம்பந்தப்பட்ட மதமே ஆதிக்கம் பெற்று விடும். ஆதலால் இந்தக்காரணத்தாலேயே அதிக வயதுவரை பிள்ளைகள் படிப்பிக்கப்படவேண்டிய சட்டத்தைத் தடுத்து விட்டார்கள். இதனால், மதத்தகராறால் பிள்ளைகளின் கல்வி

சௌகரியம் பாதிக்கப்பட்டு விட்டது என்பதோடு மதத்திற்காகவேதான் கல்வி கற்பிக்கப்படுகின்றது என்பதும் விளங்குகின்றது.

ஆகவே, கல்வியுடன் மதம் புகுத்தப்பட்டு விடுகின்றதால் கல்வி தடைப்படுவதுடன் கல்வியின் உண்மையான பயன் விளையாமலும் போய் விடுகின்றது. மதத்திற்கு முக்கிய ஸ்தானத்தை ஒப்புக்கொள்ளாதவர்களான அறிவு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் குழந்தைகளின் கல்விமுறையில் ஒவ்வொரு குழந்தையும் தன் தன் பகுத்தறிவை எப்படித்தாராளமாய் உபயோகப்படுத்தச் செய்வது என்பதில் கவலை செலுத்தி வருகிறார்கள்; அவர்கள், குழந்தைகளைத் தாங்களாகவே விஷயங்களைத் தெரிந்துகொள்ளச் செய்ய முயற்சிக்கின்றார்கள்.

## கல்வியின் நோக்கம்.

இதுபோலவே உலகில் ஒவ்வொரு தேசத்தாரும் கல்வியின் மூலம் தங்களுக்கிஷ்டமான ஒருவித நோக்கத்தையே புகுத்தப் பாடுபடுகின்றார்கள். இட்டாலி தேசத்தில் கல்வின் நோக்கம் அன்னாட்டு மக்களுக்குக் குழந்தைப்பருவத்திலேயே "பாஸிஸ்ட்டு" (Fascist) என்பதான (முதலாளித்தத்துவ) கொள்கைகளைக் கல்வியின் வழியாய்ப் புகுத்தி, அதன் மூலம் அக்கொள்கைக்கு ஆக்கந்தேடுவதையே நோக்கமாய்க் கொண்டிருக்கிறது. அதேமாதிரி ருஷியதேசத்திலும் 'பால்ஸ்விஷம்' (Bolshevism) என்னும்(தொழிலாளிகளின்ஆதிக்க) கொள்கையைமக்களுக் குள்புகுத்துவதைநோக்கமாய்க்கொண்டு கல்வி கற்பிக்கப்படுகிறது. இன்னும் பலதேசங்களிலும் "தேசியம்" என்னும் பேரால் "ஏராளமான மக்கள் சேனைகளில் சேர்ந்து

பீரங்கிக்குண்டுகளுக்கிறையாவதற்கு, குழந்தைப்பருவத்திலே யே தைரியம் உண்டாகவேண்டும்" என்ற நோக்கத்துடன் கல்வியைப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இன்னும் சில தேசங்களில் பொது ஜனங்களின் பகுத்தறிவை அலட்சியம் செய்து, அதை வளரவிடாமல் தடுத்து புரோகிதக் கூட்டத்தாரின் ஆதிக்கத்திற்குப் பலம்தேட கல்வி முறை பயன்படுத்தப்படுகிறது.

ஆகவே, இம்மாதிரியாக ஏதோ ஒரு கொள்கையைப்பிரசாரஞ் செய்வதற்கு அனுகூலமான உள் எண்ணத்தின் மீதே கல்வி கற்பிக்கப்படும் போதனுமுறையைக் கண்டிக்கவேண்டியது மிகவும் அவசியமென்றே நாம் கருதுகின்றோம்.

சிறுவர்களின் அறிவானது சுதந்தரமாகவே வளர்ச்சிபெற்று, அது நாளாவட்டத்தில் வலுவடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைத்தான் கல்வி போதிப்பதின் லக்ஷியமாய்க் கொள்ளவேண்டும்.

## பழைய முறை.

இந்தியா தேசத்தில் ஒன்றுக்கு ஒன்று முறண்பட்டதாயுள்ள பல மதங்கள் இருந்து வருவதால் மதபோதனை என்பது வெகு சிக்கலான பிரச்சினையாக இருந்துவருகின்றது.

தற்காலம் இருந்துவரும்போதனுமுறையானதுஏற்பட்டு சுமார் 75 வருஷமாகின்றது. அதற்குமுன், மக்களின் ஒரு பிரிவினராகிய வெகு சிறு வகுப்பாரேதான் கல்விகற்க முடிந்தது. அவர்களும் எழுதப்படிக்க, கணக்குக் கூட்டமாத்திரம் தான் தெரிந்தவர்களாய் இருந்தார்கள். இந்தக்காலங்களில் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படும் அநேக விஷயங்கள் அந்தக்

காலத்தில் மிகப்பலருக்கு அடியோடு தெரியவே தெரியாது. அவை அக்காலத்தில் போதிக்கப்படுவதே வெகு அருமையான காரியமாகும். ஆனால் இந்துக்களுக்குள் உயர்ந்த சாதியாரென்று சொல்லப்பட்ட வகுப்புப்பிள்ளைகள் சமஸ்கிருத பாஷையில் ஏற்பட்ட சில நூல்களை மாத்திரம் குருட்டு உருப்போட்டு மனப்பாடம் செய்து வைப்பார்கள்.

புரோகித வகுப்பைச் சேர்ந்தவர்களோ வேத சாஸ்திரங்களை அவைகளின் அர்த்தத்தைப்பற்றிய கவலையில்லாமல் அவைகளின் சப்தத்தை மாத்திரம் மனப்பாடம் செய்து வருவார்கள். இந்தவகையாக மனப்பாடம் செய்யும் [அத்தியயன] கல்வி முடிவுபெற ஒரு மாணுக்கனுக்கு 12 வருடம் பிடிக்கும்.

வைத்தியத் தொழிலில் ஈடுபட விரும்புகின்றவர்கள் ஏதாவது ஒரு சமஸ்கிருத நூலைப்படித்துவிட்டு ஒரு வைத்தியரிடமிருந்து அனுபோகப்பயிற்சி பெறவேண்டும். "வைத்திய போதன முறை" என்பதாக ஒரு தனிமுறை கிடையாததாலால் அநேக போலிவைத்தியர்கள் சுலபமாகப்புறப்பட்டு விடுவார்கள்.

சாஸ்திரிகளாகவும், வித்வான்களாகவும் இருக்க விரும்புகின்றவர்கள் ஏதாவது ஒரு குருவினிடமிருந்து புராண இதிகாசங்களைச் சமஸ்கிருத பாஷையில் பாடம் கேட்பார்கள்.

(போத)னமுறை என்பதை தனித் தனித் தொழிலுக்குத் தனித் தனி முறையாகப் பாகுபாடுசெய்து அமைக்கப் படாததால் ஒரே படிப்பையே எல்லாத் தொழிலுக்கும் உபயோகப் படுத்த நேர்ந்தது.

## நிபுணர்கள்

ஒரு சாஸ்திரி எனப்படுபவன் அவசியத்திற்கும் சமயத்திற்கும் தகுந்த வகையில் எல்லாம், அதாவது ஜாதகம் கணிக்கவும், ஜோசியம் கூறவும், நாள் பார்க்கவும், வைதீகச்சடங்குகள் செய்யும் புரோகிதனாகவும், புராணப்பிரசங்கம் செய்யும் பண்டிதனாகவும், மத சமூக பழக்கவழக்கங்களைப்பற்றிக்கூறும் நிபுணனாகவும், வியாதியஸ்தனுக்கு வைத்தியம்செய்யும் வைத்தியனாகவும், மற்றும் சகுனம், குறி, கரேகைப் பலன்கள் ஆகியவைகளைப்பற்றிச் சொல்லவும், மந்திரங்களால் அநேக காரியங்கள் செய்யவும் ஆகியவேலைகளுக்குத்தன்னை அருகதையுடைய நிபுணனாகக்காட்டிக் கொண்டு எல்லாக்காரியங்களிலும் தாராளமாய்த் தலையிட்டு வந்திருக்கிறான். இவ்வளவு சக்தியும் ஒருவனுக்கே பொருந்துவது என்பது சுலபத்தில் முடியாத காரியமாயிருந்த போதிலும்கூட, நம் நாட்டுப் பொது ஜனங்கள் படித்தவன் என்றுசொல்லப்பட்ட ஒவ்வொருவனுக்கும் இத்தனை யோக்கியதைகளும் இருக்கின்றன என்றுதான் கருதிக்கொண்டே வந்திருக்கிறார்கள்.

கிராமத்திலுள்ள மற்ற உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களும், (அதாவது கல்வி கற்க அருகதையுடையவர்கள் என்பவர்களும்) கல்விகற்பது என்பதை எழுதப்படிக்க, கணக்குக்கூட்டத்தெரிந்து கொள்வதும், மதசம்பந்தமான பிரார்த்தனைகள் செய்ய அறிந்து கொள்வதும்தான் கல்வி என்று கருதி அந்த அளவிலேயே இருந்து வந்திருக்கின்றார்கள்.

இவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு விட்டபிறகும் தங்களது கல்வியை விருத்திசெய்து கொள்ளுவது என்னும் முறை,

ஏதாவது ஒருபுராணத்தில் சற்று அதிகமான அறிவும், பழக்கமும், அதைக் குருட்டு உருப்போட்டு மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் சக்தியைப் பெறுவதும்தான் என்றுகருதி வந்திருக்கின்றார்கள்.

## தொழில்பயிற்சி.

அன்றியும் மக்களுக்கு ஏற்படவேண்டிய "பயிற்சிகள்" என்பவைகூட "மதசம்பந்தமானசடங்குகளைத் தீவிரமாகச்செய்யக்கற்றுக்கொள்வது" என்பதாகவே இருந்துவந்தது. தொழில்பயிற்சி முறைகளிலும்கூட அவனவனுக்கு ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட தொழிலில் மாத்திரம் அவனவன் தனதுபயிற்சியை உபயோகப்படுத்த முடிந்ததே தவிர வேறில்லை! மற்ற எல்லா விஷயங்களிலும் மூடநம்பிக்கைகளுடன் கண்மூடித்தனமாய் பழைய பழக்க வழக்கங்களையேதான் அவர்கள் பின்பற்றி வந்தார்கள்.

அவர்கள் தங்களுக்குத் தெரியாத எந்த விஷயத்திலும் பகுத்தறிவை உபயோகித்து ஆராய்ச்சி செய்யும் தன்மையில் ஈடுபட முயற்சிப்பதே கிடையாது.

ஸ்தலயாத்திரை என்பதற்கு மாத்திரம் அல்லாமல் வேறு எந்தக்காரியங்களை யுத்தேசித்தும் பொது ஜனங்கள் தங்கள் தங்கள் ஊரைவிட்டு வெளியூர்களுக்குப் போகின்ற வழக்கமேயில்லை. ஆகையால் அவர்களுடைய சொந்த நாட்டின் நடவடிக்கைகளைத் தவிர வேறு நாட்டின் நடவடிக்கைகளை அறிய அவர்களுக்குச் சந்தர்ப்பமே நேர்வதில்லை.

எவ்வளவு பெரிய பிரச்சினையானாலும் புராண ஆதாரங்

களைக்கொண்டும் நெடுநாளைய பழக்க வழக்கங்களைக் கொண்டுமே முடிவுசெய்து விடுவதேயல்லாமல் அறிவோடு பரிசீலனைசெய்துபார்த்து முடிவுகாணமுயற்சிப்பதே கிடையாது.

அன்றியும் புதிய முறைகளாகவும், காட்சிகளாகவும் காணப்படும்எவற்றையும் வெறுப்பதும், கண்டிப்பதும், ஒதுக்கித்தள்ளுவதுமேதான் இவர்களின் முன்னேற்றத்தின் அறிகுறியாயிருந்து வந்திருக்கின்றது.

பொதுவாகவே எல்லா வகுப்பைச் சேர்ந்த பெண் மக்களும், கீழ் வகுப்பார் என்று தாழ்த்தப்பட்டவர்களும் வெகு காலமாகவே எழுத்து வாசனை என்பதுகூட கற்பிக்கப்படாமல் மதத்தின் பேரால் தடுக்கப்பட்டே வந்திருக்கின்றார்கள். ஆகையால் பெண்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் எந்த விஷயங்களையும் ஆராய உரிமையும், சௌகரியமுமில்லாமல் இருந்தார்கள்; தங்களுக்கு மற்றவர்களால் சொல்லப்படும் அபிப்பிராயம் தவிரவேறுசொந்தமான அபிப்பிராயங்களைக் கொள்ள முடியாமலும் இருந்தார்கள்; அவர்களுக்கு எஜமானர்கள், மேற்பட்டவர்கள் என்பவர்கள் சொல்லுகின்றவைகளையெல்லாம் நம்பி தட்டிப்பேசாமல்ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு விஷயஞானம் என்பதும், ஒழுக்கம் என்பதும் புராணக்காலக்ஷேபங்கள் மூலமும், அவர்களது பெரியோர்களால் சொல்லப்படும் இதிகாசக்கதைகள் மூலமும்தான் ஏற்படவேண்டியிருந்தது.

மற்றும் பக்தி சம்பந்தமான சில புராணப்பாடல்களைப் பாடத்தெரிந்துகொள்ளுவதும், மதச்சடங்குகளில் சொல்லப்படவேண்டிய சில வாக்கியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டிய

தும் அவர்கள் கடமையென்று கருதியதால் அவற்றை மாத்திரம் தங்களுக்கு மேம்பட்டவர்கள் என்பவர்களிடமிருந்தே கற்றுவந்தார்கள்.

இவைகளைத்தவிர அவர்களுக்கு அறிவு விசாலப்படும்படியான வேறு எவ்விதமான உரிமையும், போதனமுறையும் இல்லாமலே போய்விட்டது.

ஆகவே இவர்கள் தங்களுக்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடைய அபிப்பிராயங்களின் மூலமே விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாயிருந்ததால் மூடப் பழக்கவழக்கங்களும், குருட்டுத்தனமான நம்பிக்கைகளும், பக்திகளும் தேசத்தில் வளர்ச்சி பெற இவர்கள் ஆதாரமாயிருந்து வந்தார்கள்; அன்றியும் இவர்கள் பழக்கம், வழக்கம், ஒழுக்கம், சுதந்தரம் முதலியவைகளில் எவ்வித மாறுதலும் அடையமுடியாமலும், ஒரே நிலையில் இருத்தப்பட்டு அடக்கி ஆளப்படவேண்டியவர்களாகவும் ஆகி விட்டார்கள்.

## பட்டணங்கள்.

பெரிய பெரிய பட்டணங்களில், மக்களின் வாழ்க்கை சற்றுப் பரபரப்பாய் இருந்துவந்தாலும் அவர்களுக்குத் தற்காலம் இருப்பதுபோன்ற போதனமுறைகளின்படி ஒன்றும் கற்பிக்கப்படவேயில்லை. ஒரு சிலருக்கு மாத்திரம் தொழில் முறையில் தாங்கள் சந்திக்க நேரும்வெளிநாட்டார்களிடமிருந்தும்,தாங்கள் பிரயாணம் செய்யும்வெளியூர்க்காரர்களிடமிருந்தும்எவையாவதுசிலபுதிய விஷயங்களை மட்டிலும் அறியநேர்ந்தது; என்றாலும்,பொதுவாக இந்தியாவுக்கு வெளியில் அவ்வப்போது நடைபெறும் மாறுதல்களைப்பற்றியும், புதிய அபிப்பிராயங்களைப்பற்றியும்இந்நாட்டாருக்கு ஒன்றுமே தெரிய முடியாமலிருந்தது. இந்து மதக்கொள்கைப்படி அன்னிய தேச

யாத்திரை கூட குற்றமான தாக்கப்பட்டுத் தடுக்கப்பட்டிருந்தது.

ஐரோப்பிய பாஷையை யாருமே கற்றிருக்கவில்லை. இந்தியாவில் முகமதிய ராஜ்யம் ஏற்பட்ட பிறகு அரசியல் பாஷையான அரபு, பர்ஷியன், (பாரசீகம்) முதலிய பாஷைகளைச் சில இந்துக்கள் கற்றுக்கொள்ள நேர்ந்தது; என்றாலுங் கூட அந்தக்காரணங்களாலும் மேல்நாட்டு அறிவு வளர்ச்சியைப்பற்றிய சம்பந்தம் சிறிதும் ஏற்படமுடியவில்லை.

## ராணுவக்கல்வி.

அடிக்கடி ஏற்பட்ட யுத்தங்களின் பயனாய் இராணுவப் பயிற்சிக்குப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்துங்கூட அக்கால இந்தியர்கள் கத்தி, துப்பாக்கி முதலிய யுத்த கருவிகளைத் தாங்களே செய்வதற்குச்சிறிதும் கவலை கொள்ளாமல் வெளி நாட்டாரிடமிருந்தே வாங்கி உபயோகித்து வந்தார்கள். சமீப காலம் வரையிலுங்கூட யுத்த தளவாடங்கள் ஐரோப்பியர்களிடமிருந்தே வாங்கி வரப்பட்டன. இம்மாதிரியான அநேக முக்கியகாரியங்களில் இந்தியர்கள் கொஞ்சமும் கவலையில்லாமல் இருந்து வந்தார்கள்; ஆனால் மதத்தின் பேரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாதி முதலிய பாகுபாடு வித்தியாசங்களில் மாத்திரம் மிகுந்த கவலை எடுத்து அவைகளை வெகு பத்திரமாய்க்காப்பாற்றி வந்தார்கள்.

நாளடைவில் க்ஷீணதிசை அடைந்து அழிந்துபோன இந்திய அரசர்கள் எல்லோருங்கூட இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம், அதாவது -ஜாதி பாகுபாடு வித்தியாசங்கள் ஆகியவைகளைக் காப்பாற்றி நிலைநிறுத்துவதில் மாத்திரம் அதிக கவனம் செலுத்தியே வந்திருக்கிறார்கள்.

## அன்னிய ஆட்சி.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஆரம்பமாகும் காலம்

வரை, இந்திய கல்வியாகிய மக்களின் முன்னேற்றம், அறிவு, ஒழுக்கம், சுதந்தரம் ஆகியவற்றின் போதனுமுறை இம் மாதிரியான நிலைமையில்தான் இருந்து வந்தது. இதனால்தான் இந்தியாவின் நாகரீக வளர்ச்சி, முற்போக்கு என்பவைகள் இந்தியாவுக்கு அன்னிய ஆட்சி ஏற்படுவதற்கு முன்னாலேயே தடைப்பட்டு முற்றுப்பெற்றுவிட்டது.

முகமதியர்கள் படையெடுப்புக்களின் காரணமாகவும் பல மதப்பிரிவுகள் தோன்றினவேயன்றி அனுகூலம் ஏற்படமுடியவில்லை.

பிரிட்டிஷ் ஆதிக்கம் வலுப்பட்டு, இங்கிலீஷ் பாஷையை இந்தியர்கள் கற்றுக்கொண்டதன் காரணமாகச்சிலருக்கு உத்தியோகம், அதிகாரம், பதவி முதலியவைகள் கிடைக்க வழியேற்பட்டதானுலும் அதை இந்துக்களுக்குள் உயர்ந்த ஜாதியார் என்பவர்களே பெறக்கூடியவர்களானார்கள். படிப்பதற்கு முன்வந்த உயர்ந்த ஜாதி இந்துக்கள் சர்க்காராலும் பாதிரிமார்களாலும் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களில் போய்ப் படிக்கவேண்டியவர்களானார்கள். இதன் பயனைப்சிறிதே விஷய ஞானம் பெறமுடிந்தது. ஆனால், முஸ்லீம்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள சுலபத்தில் சம்மதிக்காததால் அவர்களின் முன்னேற்றம் தடைபட்டது மாத்திரமல்லாமல் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் அடிக்கடி சச்சரவேற்பட்டுக்கொண்டும் வருகின்றது.

## மேல்நாட்டுக் கல்வி.

சுமார் 100 வருஷங்களுக்கு முன்பே அரசாங்கத்தார் மேல் நாட்டுக்கல்வியை இந்தியாவில் பரப்பும் கொள்கையைக் கைக்கொண்டார்கள். இதுஎதற்காக வென்றால், தங்கள் ஆட்சி

க்குக் கிறித்தர சிப்பந்திகளை தாராளமாகத்தயாரிக்கவேண்டும் என்னும் எண்ணத்தின் மீதேதைக்கொண்டதாகும், ஆயினும் மேல் நாட்டாரில் ஒரு சிலருக்கு இங்கிலீஷ் பாஷையின் மூலம் இந்தியாவுக்குள் மேல் நாட்டு நாகரீகத்தைப்புகுத்தவேண்டும் என்ற ஆசையும் இருந்தது.

கிறிஸ்துவப்பாதிரிமார்கள் இந்தியாவில் ஆங்கிலக்கல்வியை பரப்பப்பாடுபட்டதின் காரணமெல்லாம் கிறிஸ்துவமதத்தை அக்கல்வியின் மூலமே இந்தியர்களுக்குள் புகுத்தி விடலாமென்கின்ற நோக்கமேயாகும். ஆரம்பத்தில் இந்த நோக்கம் ஓரளவு சித்தி பெற்றது. பிறகு அது பயன் படவில்லை. தற்காலம் இந்தியாவிலுள்ள கிறிஸ்துவர்கள் தொகை 60 லக்ஷத்திற்குள்ளாகவே இருப்பது இதற்கு ஓர் உதாரணமாகும். இந்த அறுபது லக்ஷம் கிறிஸ்துவர்களும் ஆங்கிலப் படிப்பின் காரணமாகவே கிறிஸ்துவர்களானார்கள் என்று சொல்லிவிட முடியாது. இவர்களில் பெரும்பாலானவர்கள், தங்களைத் தாழ்வாய்ப்பட்டவர்களாகப் பிறர் கருதுவதாலும், பஞ்ச காலங்களில் வயிற்றுக்கொடுமையைத் தாங்கமுடியாத காரணத்தாலும், பணலக்காரணத்தாலுமே மதம்மாறிக் கிறிஸ்துவர்களானார்கள்.

## மத நடுநிலைமை.

அரசாங்கப்பள்ளிக்கூடங்களில் எல்லாம் மதநடுநிலைமை முறை கையாளப்பட்டு வந்ததென்றே சொல்லலாம். இதற்குக் காரணம் என்னவெனில் ஒரு அன்னிய அரசாங்கத்தார் உள்நாட்டு மதப்பூசல்களில் தலையிட்டால் தங்களது நிலைமை கஷ்டமானதாகிவிடும் என்பதை உத்தேசித்தே அரசாங்கத்தார் நடுநிலைமையைக் காட்டிக்கொள்ளவேண்டியவர்களானார்

கள். ஆனால் பாதிரிகளால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் எல்லாம் கிறிஸ்துவமத போதனை என்பது கட்டாயமாக பாவிக்கப்பட்டு நடத்தப்பட்டே வந்திருக்கிறது. அப்பள்ளிக்கூடங்களில்படிக்கும் இந்து, முஸ்லீம், பார்ஸி முதலிய மதப் பிள்ளைகளுக்கும் கிறிஸ்துவ வேதமாகிய "பைபில்" ஒரு பாடமாகக்கற்பிக்கப்பட்டே வந்திருக்கின்றது. இதன் பயனாக இந்துமதத்தினிடம் பிள்ளைகளுக்குப்பற்று குறைந்துபோயிருந்தாலுங்கூட கிறிஸ்துவ மதத்தில் அதிகமான பற்று ஏற்பட்டு விடவில்லை. கல்வி அபிவிருத்தியாகி, அதன் அவசியம் தெரிந்தபிறகு இந்தியர்களே பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும் ஏற்படுத்த முன்வந்துவிட்டதால் பாதிரிமார்களின் பள்ளிக்கூடங்களுக்கு உள்ள செல்வாக்கும், ஆதிக்கமும் குறைந்து போய்விட்டன. இந்தியர்களால் தனித்தும், சர்க்காரிடம் உதவிபெற்றும் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும்தான் இப்போது அதிகமாகிக்கொண்டுவருகின்றன.

இரண்டாவதாக சர்க்காராலும், ஸ்தல ஸ்தாபனங்கள் முதலிய பொது ஸ்தாபனங்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்களும் அதிகரித்து வருகின்றன. சமீப காலம் வரையிலும் தனிப்பட்ட மனிதர்களால் ஏற்படுத்தப்படும் பள்ளிக்கூடங்களில் மத போதனைகள் முக்கியமானவையாகக் கருதப்பட்டிருக்கவில்லை. மத்தியதரப்படிப்பு, மேல்தரப்படிப்பு ஆகியவைகளின் வளர்ச்சி அதிகரிக்க, அதிகரிக்க பிள்ளைகளுக்கு தேசியவளர்ச்சி சம்மந்தமாகவும், அரசியல் ஆட்சி சம்மந்தமாகவும் ஆசாபாசங்களும், உணர்ச்சிகளும் கிளம்ப ஹேதுக்கள் உண்டாயின. மற்றும் அதுபோலவே மத சம்பந்தமான நம்பிக்கைகளிலும், மூடப்பழக்க வழக்க நடவடிக்கைகளிலும் கண்மூடித்தனமாய் பின்பற்றும் குணம்சிறிது சிறிதாகக்குறைந்து,

எதையும் ஆராய்ச்சிசெய்து, விவகரித்து உண்மையை அறிய ஆவல் உண்டாகி வருகின்றது. இனித அறிந்த பழமையில் நம்பிக்கையுள்ள வைதீகர்களிடமிருந்து 'ஆங்கிலக்கல்வியானது தெய்வநம்பிக்கையற்ற கல்வி' என்பதுபோன்ற குற்றச்சாட்டுகள் கிளம்ப ஆரம்பித்தன. ஏனெனில் பழைய மூடப்பழக்க வழக்க குருட்டு நம்பிக்கை ஆகியவைகள் எல்லாம் சன்மார்க்க நீதிமுறையாகக் கருதப்பட்டு, அவைகள் முன்பு பள்ளிக்கூடப் பாடங்களோடு பிணைக்கப்பட்டிருந்ததால் இப்பொழுது அவை நீங்கியதான ஆங்கிலக்கல்வியைக்குற்றம் சொல்லவேண்டியதாய் ஆகிவிட்டது; அன்றியும் அவ்வைதீகர்கள், வாலிபர்களுடைய குணத்தையும், ஒழுக்கத்தையும் ஆங்கிலக் கல்வி நிர்மூலமாக்கி அவர்களதுபழைமையை இழிவுபடுத்துவதாகவும் கூப்பாடு போடவேண்டியவர்களாகி விட்டார்கள்.

## தேசீயம்.

சாதாரணமாகவே தேசீயமென்பது இந்நாட்டில் பழமையெல்லாம் மிக மேன்மையானதென்று வானமளாவப் பாராட்டி அவைகள் மறுபடியும் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டுமென்றுசொல்லுவதும், புதுமையெல்லாம்கெட்டவை என்று யோசனையில்லாமல் கண்மூடித்தனமாய்க்கண்டித்து அவைகளை வெறுத்துத்தள்ளுவதுமான காரியங்கள்தான் தேசீயமாய் இருந்து வந்தது.

இம்மாதிரியான பழைய மூடப்பழக்க வழக்கங்களைக் கிறிஸ்துவப்பாதிரிகள் தாக்கிக்கண்டிக்க ஆரம்பித்ததில் இருந்து, அவை முன்னிலும் அதிகமாகப்பாராட்டிப்பிரசாரம்செய்யப்பட்டு, இப்போது அவைகளை மக்கள் குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கும்படியாகச்செய்து விட்டது. சாதாரணமாய் மக்களுக்கு நியாயம் போதித்து நிலைநிறுத்த முடி

யாத அநேகவித குருட்டு நம்பிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் "தத்துவார்த்த"ங்கள் சொல்லிச் சமாதானம் செய்யப்பார்ப்பதும், அதற்கும் இசையாத விஷயங்களில் போலி 'சைன்சை' (Science) பேசிச் சரிப்படுத்தப் பார்க்கும் வேலையில்ஈடுபடவேண்டியவர்களாகி விட்டார்கள். இந்தக் காரணங்களாலேயே பழமைவிரும்பிகளான பிடிவாதக்காரர்களும், வைதீகர்களும் மத சம்பந்தமானதும், பழமைகளை ஆதரிக்கும் தேசீயசம்பந்தமானதுமான கல்வியையே புகட்டவேண்டுமென்று கூப்பாடுபோட ஆரம்பித்து வந்தார்கள்.

இக்கூப்பாடுகளின் பயனாகவே, வடக்கே பஞ்சாப் மாகாணத்தில், தயானந்தர் "ஆங்கிலோ வேதிக் காலேஜ்" என்பதாகஒன்றை லாகூரில் தோற்றுவித்தார். பிறகு இந்தக்கொள்கைகளையே அடிப்படையாகக்கொண்ட பிரம்மஞான சங்கத் தலைவர், திருமதி. பெசண்டம்மையாரால், காசியில், "சென்ட்ரல்இந்து காலேஜ்" என்றுஒருகலாசாலையும், "முகம்மதிய ஆங்கிலோ ஓரியண்டல் காலேஜ்" என்பதாக முகமதியர்களால் அலிகாரில் ஒரு கலாசாலையும் ஏற்படுத்தப்பட்டு 'வைதீகக்கொள்கைப்படி நடைபெற்று வரத்தொடங்கின. இவைமாத்திரமல்லாமல், புதிய அரசியல் உணர்ச்சி என்பதின் பயனாகவும் பல தேசீயப்பள்ளிக்கூடங்களும் ஏற்படத்தொடங்கின.

மற்றும் விளம்பர மடையாத பல பள்ளிக்கூடங்களும், மத தர்மஸ்தாபனங்களை ஒட்டிய பல பள்ளிக்கூடங்களும் இந்தியாவின் பல பாகங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. தற்காலக்கல்விமுறை எப்படியிருந்தாலும், கல்வியோடுகூட மதக்கல்வியும் போதிக்கப்படவேண்டுமென்பது மாத்திரமே அவர்களது முக்கிய நோக்கமாயிருந்தது.

ஆகவே இந்த நிலையில் பொது ஜனங்களிடமிருந்து பள்ளிக்கூடங்களில் மதத்திற்காகவென்று ஒரு தனிவகுப்பு ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரு தேவை கிளம்பியது. இவ்வாறு ஏற்பட்ட கிறிஸ்துவப் பாதிரிகள் பள்ளிக்கூடத்தில் நடந்துவந்த நடைமுறைகளுக்குக்கஷ்டம் விளைவிப்பதாய் இருந்தது.

ஏனெனில் அவற்றில் படிக்கும் மாணவர்கள் அநேகமாய் எல்லோரும் கிறிஸ்துவரல்லாதார்களாகவே இருப்பதால், கிறிஸ்துவர்கள் பள்ளிக்கூடங்களில் வேறு மதங்களுக்கு வகுப்புகள் ஏற்படுத்துவது பாதிரிகளுக்குஇஷ்டமில்லாத காரியமாயிருந்தது. பாதிரிமார்கள் முதலில் இந்தக்கொள்கையை ஆக்ஷேபித்தார்களாயினும் பிறகு இதற்கு ஒருவாறு இணங்கித் தீரவேண்டியவர்களாகிவிட்டார்கள். அதாவது எந்த இடத்திலாவது வேறு பள்ளிக்கூடங்களில்லாமல் தனியாகபாதிரிகள் பள்ளிக்கூடம் மாத்திரம் இருந்தால் அந்த இடங்களில் இந்து மத வகுப்புக்கும் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டியதாயிற்று. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் பயனாய், கல்வி இலாகாவானதுஜனப்பிரதிகள் என்கின்ற மந்திரிகளுக்கு மாற்றப்பட்டு விட்டதால் சில சமயங்களில் மதப்படிப்பைப் பற்றி சட்டசபைகளிலும் வாதங்கள் கிளம்ப ஆரம்பித்தன. இதன்பயனாய் பொதுக்கல்வி ஸ்தாபனங்களில் அவரவர்கள்இஷ்டப்பட்டால் மாத்திரம் தனிப்பட்ட கூட்டத்தார்களால் மதக்கல்வி போதிப்பதற்கு இடம் கொடுக்கப்பட்டன. என்றாலும் இந்த சௌகரியத்தை அவர்கள் சரியானபடி உபயோகித்துக்கொண்டதாகத்தெரியவில்லை; அன்றியும் அதிகாரி

களாலேயே பள்ளிக்கூடங்களில் மதக்கல்வி போதிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டு விட்டன.

## மதக்கல்வி என்றால் என்ன?

ஒருவன் ஆழ்ந்து யோசித்துப்பார்த்தால் மதக்கல்வி என்கின்ற பிரச்சினையே எவ்வளவோ கஷ்டங்களை எதிர்த்து நிற்கவேண்டியவர்களான அர்த்தமற்ற தேசீய வாதிகளின் அளவுக்கு மீறின ஆவேசமேதான் என்பது விளங்கும்.

முதலாவதாக மதசம்பந்தமான கல்வி என்றால் என்ன? கல்விஸ்தாபனங்களில் மாணாக்கர்களுக்கு மதக்கல்வியும் கொடுப்பது என்பது சாத்தியமானதா? கொடுக்கலாம் என்றால் எந்தப்பருவத்திலிருந்து, எந்த நிலையிலிருந்து மதக்கல்வியை ஆரம்பிப்பது? என்னும் கேள்விகள் முக்கியமாய்க்கவனிக்கப்படவேண்டியவைகளாகும்.

வேதாந்த ஞானம் என்று சொல்லப்படும் மத விஷயத்தை 19 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குப்போதிப்பது தகுதியற்றது என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும், மதசம்பந்தமான ஏதோ சில விஷயங்களை வேண்டுமானால் சிறுவயதில் சொல்லலாமானாலும் சரியாய்க்கிரகிக்க அவர்களுக்குச் சக்திபோதாத குழந்தைப் பருவ காலத்தில் தான் அதையும் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒரு குழந்தைக்கு "கிராமபோன்" மாதிரி அர்த்தம் தெரியாத--உண்மையை உணர முடியாத--ஏதோ சில பிரார்த்தனை வார்த்தைகளை மாத்திரம் சப்த அளவில் வேதம்-கீதை-புராணம்

முதலான பக்தி செலுத்தத்தக்க புஸ்தகங்கள் என்பவை களிலிருந்து சிலவற்றைப்பாடம் செய்யச்செய்யலாம்.

இவ்வாறு வெறும்சப்தத்தை மாத்திரம் தெரிந்துகொள் வதில்யாதொரு பலனும் இல்லை என்றும்,மற்ற வார்த்தைகளை விட இதற்கு எவ்வித விசேஷ யோக்யதையும் இல்லை என்றும் ஒரு முடிவுக்கு வந்தபிறகு,சிறு குழந்தைகள்மூளையில் பலனில் லாமல் இவைகளைப்பதியவைப்பதினால் ஏற்படும் பயன் என்ன என்பது சுலபத்தில் விளங்கக்கூடியதாய் இல்லை.

மற்றும், ஒருவிதத்தில் மதக்கல்வி என்பதின் பேரால் மேல் நாடுகளில் பைபிளிலிருந்து சில கதைகள் போதிக்கப் படுவதுபோல், நம் குழந்தைகளுக்கும் புராணங்களில் இருந் தும், ராமாயண பாரத முதலிய இதிகாசங்களில் இருந்தும் சிலகதைகள் போதிக்கப்படலாம். இந்தக்கதைகளும் பேருக்கு மாத்திரம்தான் புண்ணிய கதைகள் என்று சொல்லப்படுவ தாய் இருக்குமே ஒழிய அவற்றின் விஷயங்கள் பெரும்பாலும் பகுத்தறிவுக்கு விரோதமாகவும் மூடநம்பிக்கைக்குப் பொக்கி ஷமாகவுமேதான் இருக்கும்; அல்லாமலும் சில சமயங்களில் மனிதர்களின் முற்போக்குக்கு மாறுபாடுடையதாகவும் இருக் கும். மற்றும் எவ்வளவு மேன்மையான தத்துவங் கொண் டது என்றுசொன்னாலும், தெய்வத்தன்மை பொருந்தியது என்று சொல்வதானாலும் அதில் மலிந்துகிடக்கும் இயற்கை க்கு மாறுபட்ட லக்ஷியங்களானது எப்படியும் அக்குழந்தை களின் அறிவு வளர்ச்சியை—சிந்தனா சக்தியைக் கெடுத்தேதீரு கின்றன.

## புராண, இதிகாசங்களும் ஒழுக்கக்கல்வியும்.

புராண இதிகாச கதைகளில் கடவுள்கள், கடவுள் சக்தி பொருந்தியமனிதர்கள் என்பவர்கள் பாத்திரர்களாக வந்து நடிக்கையில் அந்நடிப்பின் தன்மையானது பொதுஜனங்களின் நடத்தைக்கும், ஒழுக்கத்திற்கும் பயன்படுவதற்கில்லாமல் அவைகளை அலட்சியப்படுத்தத்தக்கதாய் இருக்கின்றது. வளர்ச்சிபெறும் குழந்தைகளுக்கு முக்கியமாய்க் கற்பிக்கவேண்டியவெல்லாம், அவர்களுடைய சாதாரணநித்தியவாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு விஷயங்களுக்கும் அவைகளால் உண்டாகும் பலாபலன்களுக்கும் உள்ள சம்பந்தத்தைத்தெரிந்துகொள்ளத் தகுந்த சக்தி ஏற்படும்படியே கற்பிக்கப்படவேண்டும்.

ஆனால் கடவுள் சம்பந்தமான பிரார்த்தனைகளும், மதசம்பந்தமான சடங்குகளும், நித்தியகர்மானுசார ஆசார அனுஷ்டானங்களும், இயற்கையை மாற்றக்கூடியவைகளாயிருந்தாலும், அல்லது அவரவர்களுடைய சொந்த செய்கைகளின் பலாபலன்களிலிருந்து அவர்களை காப்பாற்றக்கூடிய வைகளாயிருந்தாலும், எப்படியானபோதிலும் எதற்காகக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கப்படுகின்றதோ அதற்கு இக்கதைகள் சிறிதும் பயன்படுவதாகா. ஆனால் இக்கதைகளைப் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லும்போதே இவைகளெல்லாம் கற்பனையாகச் செய்யப்பட்ட கதைகளே யொழிய வேறுவிதமான உண்மைகள் எதுவும் இவைகளில்இல்லை யென்றுவியக்தமாகச் சொல்லி, ஒரு வேடிக்கைக் கற்பனைக்கதை என்கின்ற முறையில் சொல்லிக்கொடுக்கப்படுமே யானால் அவற்றால் எவ்விததீங்கும் நேரிடாது. இப்படி இல்லாமல் அக்கதைகளைத்தொடங்கும் போதே அவை வெகுபக்தியுடனும்,

பயத்துடனும் கேட்கப்படவேண்டியதென்றும், அவைகள் எல்லாம் சிறிதும் சந்தேகப்படக்கூடாத உண்மைகள் என்றும், அவற்றையெல்லாம் அப்படியே தான் நம்பி ஆகவேண்டும் என்றும் சொல்லி நிர்ப்பந்தப்படுத்துவதோடல்லாமல், அவற்றிலிருந்து அக்குழந்தைகளுக்குத்தோன்றும் சந்தேகங்களைப்பற்றிய கேள்விகளைக்கூட கேட்கவிடாமல் அடக்கி வைப்பதானது கல்விகற்பிப்பதின் பயனையும், கற்றுக்கொடுப்பதின் நல்லமுறையையும், தலைகீழாக மாற்றிவிடுகின்றது. பிள்ளைகளுக்கு மதசம்பந்தமான நம்பிக்கைகளுக்கேற்ற அறிவானது அவசியம் என்று கருதப்பட்டால் அக்குழந்தைகள் அக்கம்பக்கத்திலுள்ள மக்களிடம் இருந்து தாமாகவே தெரிந்து கொள்ளுவதைவிட அவர்களை வளர்ப்பவர்களால் அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியுமா என்பது யோசிக்கத்தக்கதாகும் ஆனால் மத விஷயங்களைச் கற்றுக்கொள்வதற்குச் சரியானமுறை எது என்றால், ஒவ்வொருவரும் தாங்களாகவே தங்களது அறிவை தாராளமாய்ப் பயன்படுத்த யோசித்து முடிவு காணக்கூடிய சக்தி வந்த பிறகு மதக்கல்வியில் தலையிடச் செய்வதேயாகும். அப்பொழுதுதான் அம்மதக்கல்வியின் பயன் வாழ்க்கைக்கு கெடுதி செய்யாமலும், அறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் பயன் படுவதாகவும் இருக்கும்.

"மதத்திற்கும்,ஒழுக்கத்திற்கும்உள்ள சம்பந்தம்" என்று சொல்லப்படுவதைப்பற்றி மற்றொரு தலைப்பில் விவரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்; மதக்கல்வியானது மக்களுடைய ஒழுக்கத்திற்கு அவசியமான கல்வி என்று வாதிக்கப்படுகின்றது. மதசம்பந்தமான உண்மைகளை ஒப்புக்கொள்

ளாதவர்கள்கூட சில சமயங்களில் மதக்கல்வி ஒழுக்கத்திற்கு அவசியமானதென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் "பிள்ளைகளுக்கு ஒழுக்கம் கற்பிக்கப்படுகின்ற விதம்" என்பதில் நமது அபிப்பிராயம் என்னவென்றால், சரித்திர சமபந்தமான உண்மைகளையும், உலகத்தின் பல்வேறு தேசங்களில் வசித்து வரும் மக்களின் நடவடிக்கைகளையும் அறியும்படி செய்வதும், மற்றும் அக்குழந்தைகளின் மனப்போக்கு எதில் தானாய் செல்லுகின்றதோ அதில் அவர்களை விட்டுப்பிடிப்பதும், அவர்கள் அறியவேண்டும் என்று ஆசைப்படும் விஷயங்களை உண்மையாகவே சிறிதும் ஒளியாமல் தாராளமாய் எடுத்துச் சொல்லுவதும், அவர்கள் நடந்து கொள்ளும் விஷயங்களிலெல்லாம் நியாயமாயும், நடுநிலைமையாயும் நடந்து கொள்ளவேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றும்படியாகவும், அவர்கள் பிரவேசிக்க எண்ணும் விஷயங்களின் பலன்களை அனுபவத்தில் உணருகின்ற மாதிரியாகவும் கற்பிக்கப்பட்டால் குழந்தைகளுக்கு அவசியம நல்லொழுக்கம் என்பதும, நல்வாழ்க்கை என்பதும் பிடிபட்டே தீரும் என்று கருதுகின்றோம்.

மற்றும், கல்வி, ஒழுக்கம் ஆகியவைகளின் போதனையானது உபாத்தியாயர்கள், தங்களது அன்பினால் விஷயங்களைக் குழந்தைகளின் மனத்தில் தானாகத்தோன்றும்படியும் அவரவர்களாகவே, "ஒழுக்கத்தின் மூலமும், மற்றவர்களிடம் நடந்துகொள்ளுவதன் மூலமுமே மனிதன் மதிக்கப்படக்கூடும்" என்பதை அனுபவங்களால் உணரும்படியும் செய்யவேண்டும். மற்றும ஒழுக்கம், மத உணர்ச்சி முதலியவைகளைப் போதிப்பதின் மூலம் அவைகளை அறியச் செய்வதைவிட, அவர்கள் வேடிக்கை நேரங்களிலும், விளையாட்டு நேரங்களிலும் காணும்

காட்சிகளாலும், தாங்களாகவே பேச்சுவார்த்தைகள் நடத்தும் வாதப் பிரதிவாதங்களாலும், எதேச்சையாய்ப் பார்க்க நேரும் சம்பவங்களாலும் அறிந்துகொள்ளுமாறு செய்வதே மிகுதியும பலன் கொடுக்கத்தக்கதாகும். அப்படியில்லாமல், உபாத்தியாயரிடத்திலுள்ள பயத்தினாலும், அவர் செய்யும் நிர்பந்தத்தினாலும் புகுத்தப்படும் விஷயம் தக்க பலனைக் கொடுப்பது அரிதாகிவிடும்.

சாதாரணமாக, வளர்ச்சிபெறும்குழந்தைகளுக்கு ஒருவித தூண்டுதல் உணர்ச்சியே அடிப்படையாய் இருக்கின்றது, ஆகையால் அவை பல விஷயங்களையும் உணர ஆசைப்பட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்களையும், பெரியோர்களையும் பார்த்துப் பல கேள்விகள் கேட்க ஆரம்பிக்கின்றன. அவைகளின் கேள்விகளுக்கு விடை அளிக்கும் விஷயம் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துச் செய்யவேண்டியதாகும். ஏனெனில், அவ்விடைகளே அவர்களின் மனத்தில் பதியக்கூடியதாதலால் அவை ஆவல்கொண்டு கேட்கும் சமயத்தில் அவைகளுக்கு அளிக்கும் பதில்தான் பயன் பெருவதாகும். மற்றும் நாமாக அவற்றிற்குப் பசி இல்லாத காலத்தில் ஊட்டும் உணவு போல் அவைகளுக்குக் கவலையில்லாத காலத்தில் சொல்லிக்கொடுப்பதைவிட ஒன்றும் சொல்லிக்கொடுக்காமலிருத்தல் விசேஷமானதாகும். ஆதலால் அம்மாதிரி கேள்விகளுக்கு பதில் சொல்ல, மேதாவித் தன்மையான அறிவும், அனுபவமும், பொறுமையும், அனுதாபமும் வேண்டியிருக்கின்றன. ஆனால், இந்த அருமையும், அவசியமுமான குணம் அனேகமாக உபாத்தியாயர்களிடத்திலும், பெற்றோர்களிடத்திலும் காண்பது மிகவும் அருமையேயாகும்.

மேலும், அவர்களுக்கு அதில் கவலையுமிருப்பதில்லை. அன்றியும், இம்மாதிரி குழந்தைகள் கேள்வி கேட்பதையே பொறுக்காமலும், சில சமயங்களில் அலட்சியமாய் எதையாவது வேண்டுமென்றே மறைத்துச் சொல்லியும், அது அவர்களுக்குத் திருப்தியளிக்காவிட்டாலும், கீழ்படியுந்தன்மையால் அவர்களை அடக்கி, திருப்பிக் கேட்கவிடாமலும், நாம் சொல்வது சரியல்ல என்பது அவர்களுக்குத் தெரிந்தாலும் அதையே நம்பும்படி செய்து அப்பதிலுக்கும், அந்நம்பிக்கைக்கும் நம்மை சம்பந்தமில்லாதவர்களாகவும் ஆக்கிக்கொள்ளுகின்றோம்.

இந்தக் காரணங்கள் விஷய ஞானத்தை அறிய ஆசைப்பட்ட குழந்தையின் முயற்சியைப் பயனளிக்காமல் செய்து விடுகின்றன; அன்றியும் அவர்கள் அறிந்த விஷயங்களை உருப்படுத்த முடியாமலும், அவைகளை ஆராய்ந்து நிலைநிறுத்தப்பட முடியாமலும், போகத்தக்க நிலை ஏற்பட்டு விடுகிறது.

சாதாரணமாக, ஆண் பெண் சம்பந்தமான பேதா பேதங்களைக் குறிப்பிடும்படியான வேறுபட்ட விஷயங்களை எடுத்துக்கொண்டு பார்ப்போம். குழந்தைகளால் இவ்வித வித்தியாசங்களைக் குறித்து ஏதாவது கேள்விகள் கேட்கப்படுமானால் அவைகள் எல்லாவற்றையுமே பொருத்தமற்றவை என்றும், அதிகப்பிரசங்கித்தனமானதென்றும், துன்மார்க்கத்தனமானதென்றும், இழிவானதென்றும் நாம் கருதி அக்குழந்தைகளையும் அதுபோலவே கருதும்படியும் செய்து வருகின்றோம். இக்கேள்விகளை இம்மாதிரியாக நாம் கருதுவதாலும், குழந்தைகளையும் கருதும்படி செய்து வருவதாலும், ஆண்

பெண் பேதத்தால் நமக்குஏற்படும் துன்பங்களும், கெடுதிகளும் நீங்குவதற்கு வழியில்லாமல் நிலைபெற்று நின்றுவிடுகின்றன.

ஆனால் குழந்தைகளின் வளர்ச்சிக்காலத்திலும், விஷய ஞான உணர்ச்சிக்காலத்திலும், கல்வித்துறையிலும், ஆண் பெண் பேதத்தைக் காட்டும் உண்மைகளையும்போதித்து விட வேண்டும் என்பதும், அது இன்றியமையாததென்பதும், இப்போது கல்வி போதிப்பதில் அபிப்பிராயம் கொடுக்கத்தகுதியுள்ள நிபுணர்கள் என்று சொல்லப்படுபவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு வலியுறுத்தப்படுகின்றது. இதற்காக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஒன்றுமறியாத பெற்றோர்களும், பழைமைத் தன்மையைக்கொண்ட உபாத்தியாயர்களும் இன்னும் இதை உணராதிருப்பதுபற்றி வருந்தாமலிருக்க முடியவில்லை.

## மதசகிப்புத்தன்மையும், துவேஷமும்.

மதத்தைக்குறித்த விஷயங்களிலும், இம்மாதிரியாகவே தான், அவைகளைத்தெரிந்து கொள்ள ஆசைப்படும் குழந்தைகளின் இச்சையானது அடக்கப்பட்டும், தடுக்கப்பட்டும், அடியோடு ஒழிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. குழந்தைகள் யாவருமே அநேகமாக கண் மூடித்தனமாகவும், முன்பின் யோசனையில்லாமலும் அநேக காரியங்களைச் செய்வதற்கு பழக்கப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய செய்கைகளின் உண்மையான கருத்துக்களை அக்குழந்தைகளுக்கு விளங்க வைப்பதே கிடையாது. அநேகமாய் பயிற்றுவிப்பவர்களுக்கும் தெரியாது. உதாரணமாக பிரார்த்தனைகளென்பவைகளை எடுத்துக்கொள்ளுவோமானால், இந்தப் பிரார்த்

சீனகளும், ஜபங்களும் தங்களுடைய தாய்ப்பாஷைகளிலிருந்த போதிலுங்கூட, இந்தியாவிலும், சரியே அல்லது உலகிலுள்ள ஏனைய பாகங்களிலும் சரியே இவைகள் பெரும்பாலும் தாய் பாஷைகளிலில்லை. அவைகளின் வாசகப்போக்கு—அதாவது நடைகள், சுலபத்தில் அறிந்துகொள்ள முடியாத விதத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை மனப்பாடம் செய்து சொல்லும்படியாக நாம் குழந்தைகளுக்குக்கட்டளையிட்டால் அவ்விபரீத வார்த்தைகளின் அர்த்தத்தை அறிந்துகொள்ள முடியாத குழந்தைகள் யாவரும் தங்கள் மனப்போக்கின்படி, தங்களுக்குத் தோன்றிய ஏதாவதொரு அர்த்தத்தை அவைகளுக்கு ஏற்படுத்திவைத்துக்கொண்டோ, அல்லது அர்த்தத்தில் கவலை இல்லாமலோ, தான் அவைகளை மனப்பாடம்செய்தபடியே ஒப்பிக்கிறார்கள்: உதாரணமாக நமது சொந்த அனுபோகங்களிலிருந்தே பரிகாசத்தை விளைவிக்கத்தக்கதான இத்தகைய எண்ணிறந்த ஆபாசங்களை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்காட்டலாம், மேலும் இறந்து போன—அதாவது பழக்கத்திலில்லாத, மாஜி பாஷையிலிருக்கக்கூடிய பிரார்த்தனைகளைக் குழந்தைகளும் அறிந்துகொள்ளாமல், நாமும் அறிந்துகொள்ளாமல் நமது குருவும் சரியானபடி அறிந்துகொள்ளாமல் உரைக்கும்படியான ஓர் சந்தர்ப்பம் நேரும்போது இதை நினைத்துப் பார்த்தால் இத்தகைய குற்றங்கள் ஒவ்வொருவருக்கும் தானுகவே விளங்கும்.

வார்த்தைகளை உச்சரிப்பதனுலேயே ஏற்படக்கூடிய சப்தமானது அவ்வார்த்தைகளுக்குச்சுத்த ஆபாசமான கரு

த்தை விளைவிக்கின்றது. மேலும் புரோகிதத் தொழிலினால் தங்களுடைய ஜீவியத்தை நடாத்தும் புரோகிதர்களும், குருமார்களும் கூட குறித்த ஓர் சந்தர்ப்பத்திற்கு உபயோகிக்கத் தகாத சமஸ்கிருத சுலோகங்களைச்சில சமயங்களில் உபயோகித்துக்கொண்டு வருவதையும், அவைகளைப்பாடிக்கொண்டு வருவதையும் நாம் இன்னும் காணலாம். சில சந்தர்ப்பங்களில் அருவருப்பானதும், வெட்கங்கெட்டதுமான மொழிகளை உச்சரிப்பதாலுண்டாகக்கூடிய தொனியைப்போலவே அப்பழய மொழிகளை உச்சரிப்பதாலேற்படக்கூடிய சம்பவமானது குழந்தைகளின் மனத்தில் நாம எதிர்பார்த்திருந்ததற்கு நேர் விரோதமான மனப்பான்மையை உண்டாக்குவதையும் நாம் காணலாம்.

மதத்தினால் தான் மக்களின் மனமானது பரிசுத்தமடையும் என்பதாக எவ்வளவு தான் வர்ணித்து வர்ணித்து வெகு அலங்காரமாகச்சொல்லப்பட்ட போதிலுங்கூட, மதமானது பொதுவாகவே போதுமான அறிவும், ஞானமும் இல்லாமல் ஆண்களையும், பெண்களையும் கண்மூடித்தனமாக அவரவர்களுடைய சமூகப்பழக்க வழக்கங்களுக்கும், ஆச்சாரங்களுக்கும் அடிமையாகி நடந்து தீரவேண்டியதான ஓர் நிர்ப்பந்தத்தை உண்டாக்கியேதான் தீருகின்றது. ஆகையினால் மதக்கட்டளைப்படி ஒரு குழந்தை நடக்கவேண்டுமென்று கருதி அதற்கு மதக்கற்பனைகளைக் கற்பித்தோமேயானால் அது இம்மாதிரியான குருட்டுப்பழக்க வழக்கங்களுக்கும், மூட நம்பிக்கையான ஆசாரங்களுக்கும் கட்டுப்பட்டுத்தான் தீரும். இதன் பயனாக அக்குழந்தை தனது பிற்கால வாழ்வில் எது முக்கி

யம்? எது பிரதானம்? அல்லது எத்தருணங்களில் எது கூடாது? என்பதைக்கூட அறியமுடியாமல் போய்விடுகின்றது. மேலும், மற்றுஞ்சில சமயங்களில் தங்களுடைய மதக் கட்டுப்பாட்டின்படி அவர்கள் நடந்துகொள்ள ஆரம்பிக்கும் போது அச்செய்கையானது மற்றவர்களுக்கு எவ்விதமான கெடுதியை விளைவித்தபோதிலும்கூட அது இவர்கள் மனதுக்கு நன்மையாகவே காணப்படுகின்றது.

உதாரணமாக இங்கிலாந்து தேசத்தில் மாலை நேரங்களில் நடைபெறக்கூடிய ஒரு சாப்பாட்டு விருந்துக்கோ, அல்லது சிற்றுண்டிக்கோ ஒருவன் குடித்துவிட்டுவந்து அக் கூட்டத்தில் கலந்து கொள்ள வெட்கப்படாவிட்டாலும் கூட வெள்ளைச்சட்டை தரித்துக்கொண்டு கருப்பு டை (கழுத்துத் துணி) அணிந்துகொண்டு அக்கூட்டத்திற்கு வந்து கலந்து கொள்ள வெட்கப்படுவான்.

அதுபோலவே சமீப காலம் வரையிலும் இந்தியாவில் கிராமங்களில் வாசம் செய்யும் ஓர் இந்துவானவன் தன்னுடைய தகப்பனார் மரண மடைந்து விட்டால் அவனுடைய மீசையை உடனே சிரைத்துவிட வேண்டுமென்றும், அப்படி சிரைக்காவிட்டால் அது ஒருபெரிய பாவமெனவும் கருதப் பட்டுவந்தது. ஆனால் ஒரு மகன் தன்னுடைய தந்தையுடன் தினந்தோறும் சண்டைகளும், சச்சரவுகளும் செய்து கொண்டும், அவருக்கு வேண்டிய வசதிசெய்யாமலும், தகப்பனாருடைய வாழ்நாள் முழுதும், அவர் சதா துக்கத்திலேயே ஆழ்ந்திருக்கும் படியாகச்செய்து வந்தவனாகவும் இருந்தபோதிலும் கூட, அக்கொடுமைகள் எல்லாம் அவ்வளவாகப் பொருட்படுத்

படுவதில்லை; ஆனால் ஒருகப்பன் இறந்த உடன் மகன் தன்மீசை யைச்சிரைக்காதிருந்ததே பெரிய தப்பிதமாகவும், பாவமாகவும் பொதுஜனங்களால் கருதப்பட்டு வந்தன. இத்தகைய சம்பவங் களால் சூழப்பட்டு இவைகளுக்கு மத்தியில் பிறந்து வளரும் படியான ஒரு குழந்தையானது இம்மாதிரியான கொள்கை களையும், எண்ணங்களையும் தான் இயல்பாகவே கிரகித்துக் கொள்ளுமே தவிர, அறிவு பெறுவது என்பது கஷ்டமாகி விடும். ஆகையினால் குழந்தைகளின் அறிவு விசாலப்படுவதற் கான துறைகளில், அவைகளைப் பயிற்றுவிப்பதற்கான வழி களில் நடத்திக்கொண்டு செல்லத்தூண்டுகோலாயிருக்கும்படி யான முறைகளிலேயே அவர்கள் பழக்கப்படவேண்டும். ஆனால் மதத்தைப்பற்றிய கல்வியும் அறிவும் மக்களுக்கு அவ சியம் போதிக்கப்பட்டுத்தான் தீரவேண்டு மெனப்பிடிவாதம் செய்யும் மதப்பிரசாரகர்கள். மதபக்திக்காரர்களெல்லாம் ஒரு சமயம் தங்கள் பிடிவாதங்களில் வெற்றிபெற்று விடுவார்களே யானால்; அவர்கள் அநாகரீகமானதும், மூடநம்பிக்கையுள் ளதுமான கொள்கைகளிலிருந்து மக்கள் விடுதலையடைந்து சுதந்தரம் பெறவேண்டும்என நினைத்துப் போராடிக்கொண்டு வரும் இந்திய சீர்திருத்தக்காரர்களின் முயற்சிகளுக்கு முட் டுக்கட்டை போட்டதில்வெற்றி வெற்றவர்களாவார்களே யொழிய மற்றபடி அவர்களால் மனிதசமூகத்திற்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பது திண்ணம்.

எல்லா மதங்களிலும் கூறப்படும் முதன்மையான தத்து வமென்ன வென்றால், அவைகள் ஒவ்வொன்றும் எல்லா விஷ யங்களைப்பற்றியும் ஆராய்ந்தெடுத்த பரிசுத்தமான உண்மை

களையே தாம் கூறுவதாகவும், அவ்வுண்மைகள் தங்களுக்கு மாத்திரமே சொந்தமென்பதாகவும் வாத பிடுவதேயாகும்.

இவ்வாறு சில விஷயங்களைத் தங்களுடைய மதத்துக்குத் தான்சொந்தமெனப்போராடும் தன்மையானது, அன்னிய மதங்களின் மீது துவேஷத்தைவளர்ப்பதற்கு ஓர் அறிகுறியாவுகம், தூண்டுகோலாகவுமிருந்துகொண்டுவருகின்றது. ஆனால் இப்பொழுதுதான், அதாவது தற்கால உலகில் தான் ஏதோ சில அறிவாளிகள் மததுவேஷமின்றியிருக்க வேண்டு மென்றும், மதங்களில் சகிப்புத் தன்மையிருக்க வேண்டு மென்றும் ஆசைப் படுகின்றார்கள். என்றாலும் மற்றொரு பக்கத்தில் "மதம் மக்களுக்குக்கண்டிப்பாய் இன்றியமையாதது" எனவும், "ஒவ்வொருவரும் அதை அறிந்தே இருக்கவேண்டும்" எனவும் சொல்லிக்கொண்டும், எல்லோருக்குமே குழந்தைகளாயிருக்கும் பொழுதே அன்னிய மதங்களின்மீது துவேஷம் உண்டாகி வளர்ந்து வருமாறு சிறுபருவத்திலேயே அவர்களுக்குப் போதிக்கப் படவேண்டியதே சரியான மதக்கல்வியாகும் என்று கருதப்பட்டு, பலவந்தமாகவே போதிக்கப்படுமேயானால், மதத்தில் சகிப்புத்தன்மையும், மதத்துவேஷமற்ற தன்மையும் எப்படி ஏற்படும்? ஆனால், இதற்கு மாறாக, நாளாக நாளாகக் குழந்தைகள், தங்களுடைய சமூக சம்பந்தமான கட்டு திட்டங்களுக்குட்படாத ஏனைய மதஸ்தர்களைக்கேவலமாகவும், இழிவாகவும் நினைக்கும்படியாகத்தான் செய்யமுடியும்.

இத்தகைய சம்பவங்களால், அதாவது குழந்தைகளுக்கு மதத்தைப் போதிப்பதால் உண்டாகக்கூடிய நிலைமையானது

முக்கியமாய் இந்தியாவுக்கு ஓர் பெருத்த இடையூறாகவே யிருந்துகொண்டு, அபாயத்தையே விளைவித்துக்கொண்டிருக்கும்; ஏனெனில் இந்தியர்களின் குழந்தைகள் பெரும்பாலும் தங்களுடைய சொந்த ஜாதி மக்களுடன் மாத்திரம் சிநேக சம்பந்தம் வைத்துக்கொள்ளுவதால், ஏனைய மற்ற ஜாதியினரின் மக்களின் மீது தப்பெண்ணங்கள் கொண்டு அவர்களை துவேஷிப்பதற்குரிய சாதனங்களேற்படுவதற்கு மிக்க அனுகூலமாயிருக்கின்றன. இம்மாதிரியான தப்பெண்ணங்களாலேற்படக்கூடிய துவேஷத்தையும், வெறுப்பையும் நாம் மதத்திற்குட்பட்ட ஒழுக்க முறைகளெனக்கூறி, அக்குழந்தைகளின் மனத்தில் பதியும்படி செய்வோமேயானால், அப்பொழுது இத்தப்பெண்ணங்களும், துவேஷ புத்தியும் அவர்களுடைய மனத்தில் இன்னும் பதின்மடங்கு அழுத்தந்திருத்தமாகப் பதிக்கப்பட்டு, நிலைபெறுகின்றன.

மதத்தின் பேரால் மக்களுக்குச் சாதாரணமாகப் போதிக்கப்பட்டு வரும் விஷயங்களால், அவர்கள் பொதுவாழ்க்கையில் யாதொருபிரயோஜனத்தையும்அடையமுடியவில்லையெனக்கூறப்படுவது முற்றும் உண்மையேயாகும். ஏனெனில் இம்மாதிரி வளர்க்கப்பட்ட குழந்தைகள்,வளர்ந்துபெரியவர்களாகி, பொதுஜனவாழ்க்கையிலீடுபடும்பொழுது, தங்களுடைய மதசம்பந்தமான உண்மைகளைத் தங்களைப்போல் மற்றவர்களும் நம்பி, அவைகளைப் பின்பற்றாதபோதிலும்கூட, மரியாதையும் யோக்கியதையும், ஒழுக்கமுமுள்ள ஆடவர்களும், பெண்களும் உலகத்திலிருப்பதை அவர்கள் கண்டுஅறிந்து கொள்ளுகின்றார்கள். என்றாலும் அறியாமையின் பயனாக, அவர்களையறியாமல் அவர்களுடைய மனத்தில் பதியவைக்கப்பட்டிருந்த

கருத்துகளின் பலாபலன்கள் அவர்களுடைய மனத்தை விட்ட கலாமல் அங்கேயேதான் இருந்துவருகின்றன. ஆகை யால் இவ்வளவு வரையிலாயினும், மக்களைப்பரந்த நோக்கத் துடனும், அன்புடனும், இரக்கத்துடனும் சமமாகப்பாவிப்ப தற்கு மதசம்பந்தமான கல்வியானது இவர்களுக்கு ஓர்பெரிய முட்டுக்கட்டையாயிருந்து வருகிறது என்றேற்படு கின்றது.

மதக்கோட்பாட்டின்படி ஒரு சக்கிலியைத் (ஒடுக்கப் பட்ட சமூகத்தினரில் ஓர்பிரிவு) தீண்டினால், அதனால் தான் தீட்டுப்பட்டு விடுவதாகவும், அத்தீட்டை நீக்க வேண்டு மானால் கண்டிப்பாய் ஸ்நானம் செய்துதான் தீரவேண்டுமென வும் நாம் ஓர் உயர்ந்தஜாதிக் குழந்தைக்கு இளமையிலேயே கற்றுக்கொடுத்து விட்டோமேயானால், அக்குழந்தையானது தன்னுடைய பிற்கால வாழ்க்கையில் ஒரு சக்கிலியும் தன்னைப் போலுள்ள ஒருமனித ஜன்மந்தானெனக்கருது வதற்கு, அதற்கு அளவற்ற மனோதிடமும், மனோவலிமையும் இல்லா மலே போய்விடுகின்றது. அக்குழந்தையானது ஒரு சமயம் தன்னுடைய பேரறிவினுதவியினால் தீண் டாதாரும் தன்னைப்போலவே மனிதஜன் மங்கள் தானெனக்கருதி, அவர்களையும் மக்களென நினைக்கக் கூடிய நிலைமையேற்பட்ட போதிலுங்கூட அக்குழந்தையா னது இளமையாயிருக்கும்பொழுது அதனுடைய மனத்தில் ஆழமாகவும் அழுத்தந்திருத்தமாகவும் பதிய வைக்கப்பட்டி ருந்த போதனைகளால் ஒருசமயம் அது தன்னையுமறியாமல் பாதிக்கப்படக்கூடும். ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை நடத் தும் முறைதான் ஹிந்துமதத்தால் மக்களுக்கேற்பட்ட துன் பங்களிலெல்லாம் ஒரு சமயம் தலை சிறந்து முதன்மையாய்

விளங்கக்கூடியதாயிருக்கலாம். ஆகையினால் மதசம்பந்தமான போதனுமுறையானது கல்வித்துறையில் புகுத்தப்படுமேயானால் அப்பொழுது தீண்டாமை யொழிப்பதென்னும் விஷயமானது இன்னும் அளவுக்கு மீறிப்பதின் மடங்கு கஷ்டமாகி விடக்கூடும்.

ஹிந்து மதமானது இஸ்லாம் மதத்தைப்போலவாவது அல்லது கிறிஸ்துமதத்தைப்போலவாவது ஏனைய மதங்களை வரிசையாகத்துன்புறுத்திக்கொண்டே வந்திருப்பதாக உரைத்துவிட முடியாதென்பது உண்மையாகவே இருக்கலாம். ஒருவன் தன்னுடைய சொந்த மதத்திலேயே இருந்து மரணமடைவதை விரும்பவேண்டுமென நமக்கு பகவத்கீதை போதிக்கின்றது. ஆனால் ஏனைய மதங்களிலோ அம்மரணத்திற்காகப்பயந்து கொண்டிருக்கவேண்டுமெனவே போதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினாலேயே, ஹிந்து மதமானது அன்னிய மதஸ்தர்களைத் தன்னுடன் நாளது வரையிலும் சேர்த்துக்கொள்ளவில்லை. மேலும் இந்துமதமானது ஒருவித சகிப்புத்தன்மைக்குப் பெயர் பெற்றதாகவும் விளங்குகின்றது. ஆனால், இத்தகைய சகிப்புத்தன்மையால் மக்கள் யாதொருவித நன்மையுமடைவதற்கில்லை; ஏனெனில் அச்சகிப்புத்தன்மையானது அன்னிய மதஸ்தர்களிடம் சிநேகபான்மையுடனிருக்கவேண்டு மென்கிற எண்ணத்துடனிருப்பதாகக் காணப்படவில்லை. ஆனால் அது ஒரு மாதிரியான செயலற்ற—அல்லது—எதிர்ப்புத்தன்மையற்ற சகிப்புத்தன்மையேயாகும். இவ்வித சகிப்புத்தன்மையினால், அவர்கள் மற்றவர்களுடன் சேராமல், அவர்களிடமிருந்து பிரிந்து, தூரமாகவும், தனியாகவும் வாழ்ந்து கொண்டு வருவதுமல்லாமல், அத்

தகைய நிலைமையிலேயே அவர்கள் திருப்தியடைந்து ஜீவியத்தை நடாத்திக்கொண்டு வருவதுடன், பிறரையும் அவ்வாறே ஜீவித்துக்கொண்டு வரவும் அனுமதிக்கிறார்கள். பொதுவாகவே, இவ்விதமான சகிப்புத்தன்மையானது, அவர்களுடைய மனத்தில் தாங்கள் முன் ஜன்மத்தில் ஏதோபுண்ணியம்செய்து இந்த ஜன்மத்தில் ஹிந்துவாக ஜனித்திருப்பதாகவும், ஆகையால் இதரமக்களைவிடத் தாங்களே உயர்ந்தவர்களென நினைக்கும்படியான எண்ணங்களுடன் கலந்தேயிருக்கின்றது. ஆகையால், இவர்கள் அன்னியர்களைக்கண்டால் அவர்களைக்கேவலமாகவே நினைப்பதற்கு இடமேற்படுகின்றது. மக்கள் யாவரும் தங்களைப்போல் மனிதர்கள்தானெனவும், தங்களுடைய சகோதரர்கள் தானெனவும், தங்களுக்கிருப்பதுபோன்ற சுகதுக்கங்கள் அவர்களுக்கும் உண்டு எனவும் பரந்த நோக்கத்துடன் எண்ணக்கூடிய மனிதர்கள்தான் இக்காலத்தில் இன்றியமையாதவர்களாக வேண்டப்படுகின்றார்கள். இத்தகைய பரோபகார எண்ணம் அவர்களுக்கிடையே வளர்ந்துகொண்டு வருமானால் அப்பொழுது மக்கள் ஜாதி, மதமானவைகளின் எல்லைகளைக்கடந்து தற்செயலாகப்பிறவியின் காரணமாகத் தோன்றிய வித்தியாசங்களை யறவே யொழித்து, அவர்களுடைய சமூகப் பழக்க வழக்கங்களையும் மறந்து, உண்மையாகவும், சுயமாகவுமிருக்கக்கூடிய எல்லா மக்களையும் நேசிப்பார்கள். கல்வித்துறையில் மதசம்பந்தமான கல்வியை நாம் புகுத்திவிட்டோமேயானால் மக்களுக்கு இம்மாதிரியான பரந்த நோக்கமும், விரிந்த அறிவும், பரோபகார எண்ணமும் தோன்றுவதற்கு இடமேற்படாதென்று கருதியே கல்வித்துறையில் இந்த மதசம்பந்தமான கல்வியைப் புகுத்தப்படக்கூடா

தென அறிஞர்கள் பலர் உறுதியாக எதிர்த்துப் போராடிக் கொண்டு வருகின்றார்கள்.

சென்ற முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குள்ளாக இந்தியாவின் பல்வேறு பாகங்களில் பலர் அவரவர்களுடைய மதத்திற்குரித்தான அறிவை வளர்ப்பதற்காக மதபேத சம்பந்தமான பல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டதென்பதைக்குறித்து நாம் மேலே எடுத்துரைத்திருக்கின்றோம். அப்படியிருந்தபோதிலும்கூட இத்தகைய கல்வி ஸ்தாபனங்களில் வித்தியாப்பியாசம் பெற்ற மக்களுக்கும் உலக சம்பந்தமான கல்வியறிவை ஏனைய கல்வி ஸ்தாபனங்களில் கற்றுத்தேர்ந்த மக்களுக்கும் ஏதாவது வேற்றுமை காணப்படுகின்றதா என்பதைக்கண்டு பிடிப்பதே கஷ்டமாக இருக்கின்றது. மதசம்பந்தமான பழக்க வழக்கங்களை ஒவ்வொருவரும் கண்டிப்பாகவே அனுசரித்துத்தான் தீரவேண்டுமெனக் கூறப்படும் விஷயம் பொதுவாகவே மாணுக்கர்களால் ஒருவித சுமையாகக்கருதப்பட்டு வருவதுடன், சில சமயங்களில் விளையாட்டாகவும் இழிவாகவும், பரிகாசமாகவுங் கூட கருதப்பட்டுவருகின்றது. மேலும் இத்தகைய ஸ்தாபனங்களைப் பார்வையிடுவோரை, இந்த ஸ்தாபனங்களைப் பார்ப்பதற்காக சுற்றி அழைத்துக்கொண்டு செல்லப்படும்பொழுது பயபக்தியை உண்டாக்கக்கூடிய யாதொன்றையும் அங்கே அவர்கள் காணுவதும கிடையாது. பிரார்த்தனை அல்லது ஜபம் செய்யும் மண்டபமும் அவருக்குக்காண்பிக்கப்படலாம். ஆனல் அவவித ஜபங்களில் கலந்து கொள்ளும்படியான மாணுக்கர்களின் முகங்களை உற்று நோக்கினுல் அவர்களுடைய முகங்களில் குறிப்பிடத்தக்கதான யாதொரு கம்பீரமான

தோற்றங்களையும் காண்பது அரிதாகும்.

இங்கிலாந்திலுள்ள பழமையான சர்வகலாசாலைகளில் "சிறு ஆலயங்களை நியமித்தல்" என்பதான நடவடிக்கையையே இங்கு நடைபெறும் சம்பவங்கள் பெரிதுமொத்திருக்கின்றன. ஆனால் இம்மாதிரி ஒழுங்காக நடைபெறும் மத சம்பந்தமான அனுஷ்டானங்கள் யாவும் நாளாவட்டத்தில் அனுபோகத்தின் பேரில் பார்க்கும்பொழுது யாதொருவிதமான அறிவையோ அல்லது ஒழுக்கத்தையோ புகட்டியிருப்பதாகத்தென்படவேயில்லை. ஆகையினால் சிறு ஆலயங்களிருக்கவேண்டுமென்கின்ற நிர்ப்பந்தமானது அநேக கலாசாலைகளில் ஒழிக்கப்பட்டாய்விட்டது. இம்முறை இன்னுஞ் சிறிது நாட்களுக்குள் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பல்வேறு மதங்களின் ஸ்தாபனங்களிலும் அனுஷ்டிக்கப்படுமென்று எதிர்பார்க்கின்றோம்.

எவ்வாறிருந்தபோதிலும் குறித்த ஓர் மதத்தைச்சேர்ந்த ஓர் வகுப்பினரோ, அல்லது குறித்த ஓர் ஸ்தாபனத்தில்கல்வி கற்கும் ஒரு ஜாதியைச்சேர்ந்த சிறுவர்களோ, மற்றவர்களிடமிருந்து வேறாகப் பிரிந்து தனித்து வாசம் செய்வதால், அவர்களிடம் இயற்கையாகவே எத்தகைய நிலைமையினும் மதபேத சம்பந்தமான உணர்ச்சிகள் வளர்ந்துகொண்டுவருவதற்கு இடமேற்படுகின்றது. அம் மாணுக்கர்களோ, இதர மதத்தைச் சார்ந்தவர்களுடன் நெருங்கிப் பழகுவதுமில்லை, இவ்வித நிலைமை ஏற்படுவதால் மக்களனைவரையும் சமமாகப் பாவித்து நடக்கவேண்டுமென்கிற பரந்த நோக்கமானது அவர்களால் அழிக்கப்படுகின்றது. மேலும் அம்மாதிரியான ஸ்தாபனங்களில் வாசித்துக்கொண்டுவரும்

மாணவர்கள் இதர ஸ்தாபன மாணாக்கர்களுடன் தமாஷாக ஏதாவது விளையாட நேர்ந்தபோதிலுங்கூட, அங்கும் அடிக்கடி அந்த மதபேத சம்பந்தமான உணர்ச்சி ஏற்பட்டுவிடுகின்றது. மேலும் ஜாதி வித்தியாசங்களைக் கொண்டாவது அல்லது மதபேத சம்பந்தமான உணர்ச்சிகளைக்கொண்டாவது தனித்தனி வேறுபட்ட இரண்டு பள்ளிக்கூடங்களில் வாசித்துவரும் மாணாக்கர்கள் கிரிக்கட் போன்ற இதர விளையாட்டுப் பந்தயங்கள் விளையாட நேர்ந்தால் சில சமயங்களில் ஆபத்தான நிலைமையும் ஏற்பட்டு விடுகின்றது.

இவைபோன்ற காரணங்களால் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களனைவரும் இன்னும் மேலான அறிவுடனும், ஞானத்துடனும், விவேகத்துடனும் நடந்து கொள்ளவேண்டுமென்பதே தற்கால நிலைமையில் இந்தியாவுக்கு அதி முக்கியமாய் வேண்டற்பாலதாய் இருந்துவருகிறது. இம்மாதிரியான நிலைமையை நாம் அடையவேண்டுமானால் மக்கள் யாவரும் ஒருவருடன் ஒருவர் இன்னும் தாராளமாகவும் சினேகிதமாகவும் நடந்து கொள்ளுவதற்கான அனேக சந்தர்ப்பங்களை நாம் ஏற்படுத்தவேண்டியது இன்றியமையாததாகின்றது. மாணாக்கர்கள் யாவரும் ஒன்றாகச்சேர்ந்து ஒரே பள்ளிக்கூடத்தில் ஒரேவித உபாத்தியாயர்களால் உபதேசிக்கப்பட்டும், அவர்களாலேயே நடத்தப்பட்டும் வருவதுடன், யாவரும் பொதுவாக விளையாடுமிடங்களில் அவர்களுக்கேற்படும் சினேகித சம்பந்தத்தாலும், மேலும் கலாசாலைகளிலுள்ள இதர சங்கங்களின் மூலமாகவுமே தான் நாம் கோரிய பலனையடைய முடியுமேயல்லாமல், வேறு எத்தகைய பிரயத்தனமும் நாம் கோரிய பலனை யளிக்கவேயளிக்காது. பளளிக்கூடங்க

ளிலும் கலாசாலைகளிலும் ஏற்படும் சினேகிதமானது எத்த கைய நிலைமையிலும், எல்லாவித சந்தர்ப்பங்களிலும் நீடித்து நிற்கக் கூடியதெனவும், அந்த சினேகிதமொன்று தான் யா தொருவிதமானபிரதிப்பிரயோஜனத்தையும்கருதாமலேற்படக் கூடிய சினேகிதமென்பதையும் யாவரும் செவ்வனே அறிவார் கள். ஆனால் இந்தியாவிலேற்பட்டுள்ள பல்வேறு மதங்களை ஆதாரமாகக்கொண்ட கல்வி நிலையங்கள், இந்தியாவில் வாசம் செய்துவரும் எண்ணிறந்த ஜாதியைச்சார்ந்த வாலிப மக்களு க்கு இத்தகய சினேகிதப்பான்மையும், ஒற்றுமையும், சம்பந் தமும் அவர்களுக்குள் ஏற்படக்கூடிய எல்லாவித சந்தர்ப்பங் களையும் நாசமாக்கிக்கொண்டே வருகின்றன.

கல்வித் துறையில் உலக சம்பந்தமான கல்வியும், அறிவுந் தான் மாணுக்கர்களுக்குப் போதிக்கப்பட வேண்டுமென்னும் அவசியத்தைக் குறித்து நாம் அழுத்தந் திருத்தமாகக் கூறிக் கொண்டு வந்தோம். ஆயினும், மாணுக்கர்களின் அறிவு நாலுவித வழிகளிலும் விருத்தியாகக்கூடிய விஷயங்களும், கல்வியுடன் சேர்த்து அவர்களுக்குப் போதிக்கப்பட்டாக வேண்டுமென்கிற நிபந்தனையையும் மாணுக்கர்களுக்கேற்படு த்தப்பட்டிருக்கின்ற பாடத் திட்டத்தில் அவசியம் சேர்க்கப் படவேண்டுமென்றும் நாம் கருதுகின்றோம். குறிப்பாக விஞ் ஞான சாஸ்திரமானது இன்னும் விரிவாக மாணுக்கர்களுக் குப்போதிக்கப்பட்டாக வேண்டுமென்கின்ற விஷயமானது அவர்களுக்கேற்பட்டிருக்கின்ற பாடத்திட்ட வரிசையில் முத ன்மையாக இருக்கவேண்டுமென நாம நினைக்கின்றோம். அவ் வாறிருந்தால் மட்டுந்தான் மாணுக்கர்களினுடைய நியாயா னுசாரமான மனேசக்தியானது அபிவிருத்தியடைந்து, இயற்

வைக்காட்சிகள் நிரம்பிய இவ்வுலகில், எல்லாப்பக்கங்களிலும் நீதியும் அமைதியும் குடிகொண்டு உலாவுவதைக் கண்டறிந்து கொள்ள வசதியுண்டாகும். விஞ்ஞான சாஸ்திரத்தின் ஆராய்ச்சியும் அறிவும்தான் ஜீவ சாஸ்திரத்தினுடையவும், ஜன சமூகத்தைப்பற்றிய சாஸ்திரத்தினுடையவும்; ஆராய்ச்சியும், அறிவுமுட்டபட்டேவேதான் மூடப் பழக்க வழக்கங்களால் மானுக்கர்களுக்கேற்பட்டிருக்கும் நம்பிக்கையைத் தகர்த்தெரியக் கூடிய வல்லமை வாய்ந்தது. இயற்கையின் சட்டதிட்டங்களையும் குணாதிசயங்களையும் ஆதியிலிருந்தோர் அறிந்துகொள்ளாதிருந்த காரணத்தாலேயேதான் அவ்வித மூட நம்பிக்கைகள் அவர்களுக்கேற்பட்டன. நமது கண்களுக்கு முன்பாக நடந்துவரக்கூடிய சம்பவங்களால் நமக்கேற்படும் அனுபோகங்களுக்கெதிரிடையாக, வேறு யாதாமொருவர் நமக்கு என்னதானுரைத்த போதிலும் அவர் எவ்வளவு பெரிய மனிதராயிருந்தபோதிலும்கூட, அவர்களுடைய வார்த்தைகளைப் பொருட்படுத்தக் கூடாதெனும் உண்மையை அப்பொழுது தான் அவர்கள் அறிந்து கொள்ளுவார்கள். உலகமானது பொதுவாகவே எப்பொழுதும் முன்னேறிச்சென்று கொண்டிருக்கின்றதென்பதையும், ஆதிகாலத்தில் நடந்ததாகக் கூறப்படும் வர்த்தமானங்கள் யாவும் கற்பனாசக்தியின் பயனாக ஏற்பட்ட கட்டுக்கதைகள் தானென்பதையும், அவர்கள் அப்பொழுதுதான் அறிந்துகொள்ளக்கூடும். இவைகளுக்கெல்லாம் மேலாக, தங்களுடைய அறிவு, ஆராய்ச்சி, நீதி, சன்மார்க்கமாகிய வைகளினுடைய உதவியாலும், ஒத்தாசையாலும் தங்களால், செய்யப்பட்ட காரியங்கள் யாவும், தங்களுக்கு முன் சென்றவர்களால் செய்து கொண்டு வரப்பட்டகாரி

21447 MARAIMALAI ADI...

யங்களின் பலன்தானுகுமென இவர்களால் எவ்வாறு கருதப்பட்டு வரப்படுகின்றதோ, அவ்வாறேதான் இவர்களால் செய்யப்பட்டுவரும் காரியங்கள் எவ்வளவுதான் குறைந்த அளவிலிருந்தபோதிலும்கூட, தங்களுக்குப் பிறகு பாரம்பரியமாய் வரக்கூடிய மக்களுக்கு உதவியை யளிக்கக்கூடுமென்பதையும் அப்பொழுதுதான் அவர்கள் உணர்ந்தவர்களாவார்கள்.

நாம் எப்படியிருந்தால் இரக்ஷிக்கப்படுவோம், என்ன செய்துகொண்டுவந்தால் முக்தியடைவோம், எப்படி நடந்து கொண்டுவந்தால் மோக்ஷமடைவோமென்பதைப்பற்றிப் போதிக்கும்படியான கல்வி அறிவானது-(அவ்வறிவானது)எவ்வளவுதான் பெருமை வாய்ந்திருப்பதாகக் கூறப்பட்டு வந்த போதிலும் சரியே, அதைப்பற்றி நாம் சிறிதும் கவலைப்படாமலும், அவ்வறிவை மாணுக்கர்களுக்குப் போதியாமலிருந்தும் வரவேண்டும். மேலும், அவர்களது கடமைகளைக் குறித்தும், மற்றவர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்தும் அவர்களது மனத்தில் நன்றாய்ப் பதியும்படி செய்வதற்கு வல்லமை வாய்ந்ததான கல்வி அறிவு ஒன்றை மட்டுந்தான் மாணுக்கர்களுக்குப் போதிக்கப்படவேண்டும். கல்வித்துறையில் இவ்விஷயங்கள்தான் சாலவும் சிறந்த முறையாகும்.

# வகுப்புப் போராட்டம்.

——o——

இந்தியாவுக்கு முடிவுகட்டவேண்டிய முக்கியமான விஷயங்கள் எல்லாவற்றிலும் வகுப்புப் போராட்டங்களும், வகுப்புப் பொருமைகளும் தீர்க்கப்படவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

முதலாவதாக இந்தியாவில் நிலைத்திருக்கின்ற இந்துமதம், கிறிஸ்து மதம், முகமதிய மதம், பாரசீக மதம், புத்தமதம், சீக்கியமதம் மற்றும் பல மூடநம்பிக்கைக் கொள்கைகளைக் கொண்ட அனேகவிதமான மதங்களே மக்களைப் பல்வேறு வகுப்புகளாகப் பிரித்துவைத்திருக்கின்றன.

இவ்வகையாக ஒவ்வொரு மதமும் தனக்குள் பல்வேறு தனித்தனிப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன், அவைகள் ஒன்றுக்கொன்று விரோதபாவமாகவும், வைரிகளாகவும் இருந்து வருவதுடன், ஒரு மதக்காரர் வேறு மதக்காரர்களிடம் நடந்துகொள்ளும் தன்மையைவிட தங்கள் மத உட்பிரிவார்களிடமே அதிகமான வேற்றுமையையும் துவேஷத்தையும் கொண்டிருக்கின்றார்கள்.

இந்துக்கள் மொத்தத்தில் 4 முக்கிய ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன், அவற்றுள் ஒவ்வொரு ஜாதிக்குள்ளும் அனேக உட்பிரிவு ஜாதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு பிரிவுகளையும் தவிர்த்து, மற்றும் அநேக "கீழ் ஜாதி" யாரும், "தாழ்த்தப்பட்ட ஜாதி"யாரும், "கீழ்மக்க"ளும், "மேலஜாதி"யாரும் ஆகிய அநேக பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளில் அநேகம் தொடவும், பழகவும் முடியாத "தீண்டாதார்"களாகவும் பிரித்துவைக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோலவே "முகமதிய"ருக்குள்ளும், "சியா"க்கள் "சுன்னி"கள், "கோஜா"க்கள், "மேமன்"கள், "பட்டாணி"கள், "பார்ஷியர்"கள் முதலிய பல பிரிவுகள் உண்டு.

கிறிஸ்துவர்களிலும் "புரோட்டீஸ்டெண்ட்" என்றும் அதற்குள் பல பிரிவுகளும், "ரோமன் கத்தோலிக்கர்"கள் என்றும் அதற்குள் பல பிரிவுகளும், இருந்து வருகின்றன. மற்றும் இந்து மதத்தில் இருந்து கிறிஸ்துவத்திற்கு மாறினவர்கள், (அவர்கள்) மாறும்போது இந்து மதத்தில் என்ன வகுப்புகளிலிருந்து வந்தார்களோ அதே வகுப்பின் பெயராலேயே இன்னமும்இருந்து வருகின்றார்கள்.

இந்தியாவின் முழு ஜனத்தொகையையும் கட்டுப்பாடுள்ள சிறு சிறு வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டு, அதன்பயனாகத்தேசத்தின் ஒற்றுமை கெட்டு, சுலபத்தில் முன்னேற்றம் ஏற்படுவதற்கில்லாமல் போய்விட்டது.

இம்மாதிரியான பிரிவுகளின் வித்தியாசத்திற்கு முழுவதும் மதங்கள்தான் முக்கியகாரணம் என்று சொல்லி விடுவதற்கில்லை; ஆனாலும் மதசம்பந்தமான அடிப்படையான உணர்ச்சியானது, மக்களுக்கு வெறிபிடித்த தன்மையை உண்டாக்கி விடுகின்றது என்னும் உண்மையை மறைக்கமுடியாது. ஆகையால் உலகத்தில் இதரபாகங்களில் இருந்துவரும் மாதிரியாக இந்தியாவிலும் சீதோஷ்ணஸ்திதி காரணமாகவும், தேசாச்சாரம் காரணமாகவும், தற்கால நிலைமைக்கு ஏற்றமாதிரியான முன்னேற்றம் ஏற்பட முடியாமல் தடைபடுத்தப்பட்டிருக்கின்றது.

"இங்கிலாந்தி" லானாலும், "பிரான்சி" லானாலும்

இந்தியாவிலிருப்பது போன்றதான தனித்தனிப்பிரிவுகள் வகுப்புசம்பந்தமான உணர்ச்சிகள் எல்லாம் ஒழிந்து, ஒரு வரையொருவர் சகோதரர்போல் நினைத்து, ஒன்று பட்டிருக்கும்படியான தன்மை பெற்றிருக்காவிடில் அந்த நாடுகள் இன்று இருக்கும்படியான உயர்நிலைமையை ஒருநாளும் அடைந்திருக்க முடியாது.

இந்திய ஜனங்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் மதமானது இந்தியர்களது வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் புகுந்து, ஒவ்வொன்றுக்கும் மதசம்பந்தத்தையும் மதஅர்த்தத்தையும் ஏற்படுத்திவிட்டது.

ஆதலால், இப்படிப்பட்ட மதத்தைச்சீர்திருத்தி விடலாம் என்பது சுலபத்தில் முடியக்கூடிய காரியமல்ல. பொதுவாகவே மக்களுக்குள்ளிருந்துவரும் மதசம்பந்தமான தொடர்பை நாளுக்கு நாள் தளரவிடச்செய்தும், ஒவ்வொரு காரியங்களுக்கும் காரண காரியங்களைக்கண்டு பிடிக்கத்தக்க அளவுக்கு, அவரவர்களது பகுத்தறிவை உபயோகிக்கச்செய்தும் வருவதன் மூலம்தான் இந்தியாவில்உள்ள வகுப்புச்சச்சரவுகளை ஒழிக்கச்செய்ய முடியுமேயல்லாமல், மதத்தொடர்புடன் எவ்விதமுன னேற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. வகுப்புச்சச்சரவுகளுக்குக்காரணமெல்லாம் "மதத்தை அனுசரிக்கவேண்டியதில் உள்ளதத்துவமும், வாழ்க்கையில அனுசரிக்கவேண்டிய ஒழுக்கமுமே தான்" என்று மதபக்தர்கள் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. மற்றென்னவென்றால், மக்கள் நித்தியப வாழ்க்கையை மதத்துடன்சேர்த்து, அனுசரித்து வரும் அநேகமூட நம்பிக்கையான எண்ணங்களும், செய்கை

களுமேதான் வகுப்புச்சச்சரவுகளுக்குக்காரணங்களாகும்.

உதாரணமாக, ஒரு முஸ்லீம் தன்னுடையபள்ளிவாசலுக்குப்பக்கத்தில் சதா இரயில்வண்டிகள் போகும் போக்குவரத்துசத்தத்தைப்பற்றிக் கவலைப்படுவதில்லை: ஆனால் ஒரு இந்து மேளவாத்தியத்துடன எப்போதாவது ஊர்கோலம் சென்றால் மதம் போய்விட்டதென்று கருதி பெரிய அதிர்ப்தியடைந்து, கலகத்துக்கு தயாராகிவிடுகிறான்.

அதுபோலவே, ஒருஇந்துவும் பிரிட்டிஷ் பட்டாளங்களுக்காக ஆயிரக்கணக்கான பசுக்களை தினமும்வதைப்பதைப் பற்றியும், ஒவ்வொரு பட்டணங்களிலும் ஏராளமான மாடுகளைக்கொன்று, கசாப்புக்கடையில் விற்றுக் கொண்டிருப்பதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை; ஆனால், ஒரு முகமதியன்பண்டிகை நிமித்தம் ஒருபசுவை கொல்லுவதற்குக்கொண்டு போவானேயானால் அதனால் பஞ்சமாபாதகம் ஏற்படுவதாக கருதி உடனே பெரியகலகம் செய்யத்துணிந்து விடுகின்றான்.

சென்னை மாகாண பார்ப்பனன் ஒருவன் இரயிலில் பிரயாணம் செய்யும் போதும், கடலில், கப்பலில் பிரயாணம் செய்யும் போதும் தனதுபக்கத்தில் பறையன் உட்கார்ந்திருப்பதைப்பற்றிச்சிறிதும கவலைப்படுவதில்லை. ஒரு சமயம் ஏதாவது கவலைப்படுவதானாலும் ஒரு "முழுக்குடன்" அக்கவலை தீர்ந்து விடுகின்றது என்றுகருதி விடுகிறான்.

ஆனால், அதேபறையன், தான் குடிஇருக்கும் தெருவில் நடந்தாலும், தான்உபயோகிக்கும்குளத்தில் தாகத்துக்குத் தண்ணீர் குடித்தாலும்,அதனால் தமதுமதமே கெட்டுப்போய் விட்டதென்றுகருதி ஆர்ப்பாட்டம் செய்கின்றான். ஆனால்அக் குளத்தில்வேறுவழியாகஎத்தனையோ ஆபாசங்கள் ஏற்படுவதை

பார்த்துக்கொண்டே இருக்கிறான். இவ்வாறே அநேக வகுப்புகளுக்குள் இருந்துவரும் உட்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் கற்பிக்கப்பட்டிருக்கும் வித்தியாசங்களுக்கு ஆதாரமான காரியங்கள் எல்லாம் மிக அற்பமானவைகளாகவும் இருந்துவருகின்றதுடன், அவைகளால் ஏற்படும் விபரீத பலன்கள் மாத்திரம் வெகு தொல்லைகளை விளைவிக்கக்கூடியதாய் இருந்துவருகின்றன.

இந்த மாதிரியான முட்டாள்தனத்திற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால் 'சுவிப்ட்' (Swift) என்னும் ஒரு ஆங்கில ஆசிரியர் எழுதிய ஒரு கதையில் லிலிபுட் என்னும் ஊரிலுள்ளவர்களுக்குள் ஒரு கோழிமுட்டையை எந்தப்பக்கத்தில் உடைக்கின்றது என்கின்ற விஷயமாய் ஏற்பட்ட கலகத்தை ஒப்பிடலாம். அவ்வளவு அற்ப விஷயந்தான் மத சம்பந்தமான கலவரங்களுக்குக் காரணமாய் இருக்கின்றன. ஆனால் அதையும்விட மிக அற்பமான விஷயமான, அதாவது நெற்றியில் வைத்துக்கொள்ளப்படும் மதக்குறியைக் கீழே கொஞ்சம் இழுப்பதா? அல்லது வட்டவடிவமாகவே விட்டுவிடுவதா? என்னும் விஷயம் சென்னைப் பார்ப்பனருக்குள் மிகமிகப்பிரமாதமாய்க்கருதப்பட்டு இதனால் பெருத்த கலவரங்களும், நீதிமன்றத்தில் வழக்குகளும் நடத்தப்படுகின்றன. இம்மாதிரியான அற்ப வித்தியாசங்களுக்கெல்லாம்கூட தத்துவார்த்தங்கள் சொல்லி மழுப்பப்பார்க்கலாம். ஆனாலும் அதில் சம்பந்தப்பட்ட அதிகமான மக்கள் அப்படிப்பட்ட தத்துவார்த்தம் ஒன்றையும் உணராமலே "ஏதோ நமது கூட்டத்தார்கள் செய்கிறார்கள், ஆதலால் நாமும் செய்வோம்" என்று கருதியே கலகத்தில் சம்பந்தப்படுகிறார்கள். எவ்வள

வோ சிறிய அற்பகாரியங்கள் எல்லாம் மதத்தில் சம்பந்தப்படு த்தப்பட்டவுடன் மிக முக்கியமான ஸ்தானத்தைப்பெற்று விடுகின்றன.

புனாவில் "முனிசிபல் சேர்மெனா"யிருந்த ஒரு நண்பர் சொன்னது இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. அதுஎன்னவென்றால், அவர் அந்த "முனிசிபாலி"டியில் தெருக்கூட்டுகிறவர்கள் குனிந்துகொண்டே கூட்டவேண்டியதான ஒருகுட்டையான கை விளக்குமாற்றால் கூட்டிக்கொண்டிருந்ததற்குப் பதிலாக நின்று கொண்டே கூட்டும்படியான மாதிரியில் நீளமான காம்புள்ள, ஒரு நெட்டை விளக்குமாற்றைக் கொடுத்து அதில் கூட்டும்படி சொன்னாராம். அத்தெருக்கூட்டிகள் அந்த நெட்டை விளக்குமாற்றை எற்றுக்கொள்ளமாட்டோமென்றுசொல்லிவிட்டார்களாம். அதற்கு அந்த சேர்மன் காரணம் கேட்டபோது, நெட்டை விளக்குமாற்றில் கூட்டிய வழக்கம்தங்களுக்குக்கிடையாதென்றும், இன்று புதிதாய் மாற்ற முடியாதென்றும் சொன்னதோடு, கட்டாயப்படுத்தினால் அது தங்கள் மதத்திற்கு விரோதமான காரியமானதால் வேலையையாவது விட்டுவிடுவோமே யொழிய நெட்டை விளக்குமாற்றைத் தொடமாட்டோமென்று சொல்லி விட்டார்களாம்.

இந்துக்களுக்குள் உள்ள ஜாதிப்பிரிவுகளெல்லாம் மத சம்மந்தமாகவும், தொழில் சம்மந்தமாகவும், இடசம்மந்தமாகவும், தேச சம்மந்தமாகவுந்தான் பிரிக்கப்பட்டிருக்கின்றனவே யொழிய, அவற்றின் ஒன்றுக்காவது அறிவுக்கும், அனுபவத்திற்கும் பொருத்தமான காரணங்கள் இல்லவே இல்லை.

இந்துக்கள் என்பவர்கள், இம்மாதிரியாகத் தங்களுடைய மதத்தையும், வகுப்பையும், தொழிலையும், தாங்கள் வாசம் செய்யும்படியான இடத்தையுமே ஆதாரமாகக்கொண்டு, பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந் நான்கு தன்மைகளில் இருந்து மற்றும் அனேக ஜாதிகள் தோன்ற இடமேற்பட்டன. ஆனால் இவைகளினாலேற்பட்ட உட்பிரிவுகளாகிய அனேக ஜாதிகளுக்கும் முக்கிய காரணமெதுவாயிருந்தபோதிலும் கூட, அவைகளுக்கெல்லாம் மத சம்பந்தமான கருத்துக்களையே முக்கியமாக்கப்பட்டன. மற்றும் ஜாதி விஷயங்களில் ஒருவன் பிரவேசிப்பதென்றால் அது மதத்திற்கு நேர் விரோதமென கூப்பாடுபோடப்பட்டும் வந்தது: ஆகையினால் புதிய புதிய ஜாதிகள் அடிக்கடி தோன்றுவதற்கும், ஏற்படுவதற்கும், முடிந்ததேயல்லாமல், இருக்கக்கூடிய ஜாதிகள்யாவும் ஒன்று சேர்ந்து, ஒற்றுமையடைந்து சினேகிதபான்மையுடன் நன்றாக ஐக்கியமடைவதற்கான அறிகுறிகள் இல்லாமலே போய்விட்டது. சில சீர்திருத்தவாதிகள், எல்லாமக்களும் ஒற்றுமையடைய வேண்டுமெனவும், ஒன்றுசேர வேண்டுமெனவும் வாயில் பேசுகின்றார்கள். ஆனால் அதை அடைவதற்கு மக்கள் யாவரும் தத்தம் ஜாதிகளை அடியோடு ஒழித்துவிட்டு, யாவரும் ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்கள் போல வாழவேண்டுமென உரைத்துவிடுவார்களேயாகில், அப்பொழுது அவர்கள்பாடு மிக்க கஷ்டமாகிவிடும், மூலைக்கு மூலை பல எதிர்ப்புகளும் ஏற்பட்டுவிடும். அன்றியும் சீர்திருத்த விரோதிகள், மற்ற நாடுகளில் கல்வியினாலும் பணத்தினாலும் மக்களுக்குள் இருந்துவரும் வித்தியாசத்தை எடுத்துக்காட்டி, பாமர மக்களை ஏமாற்றி நமது நாட்

டின் ஜாதி வித்தியாசத்தைக் காப்பாற்ற முயற்சிப்பார்கள். ஆனால் இந்துமதத்தின் ஜாதியானது மற்ற நாட்டு வித்தியாசத்தைப் போன்றதல்ல. அதாவது மதக்காரர்களில் அனேகர் தாங்கள் என்னதான் கஷ்டப்பட்டு, அரும்பாடுபட்டு, தங்களுடைய சுய முயற்சியால் கல்வியிலும், செல்வத்திலும் முன்னேறினும, மற்றவர்களுக்கு இருக்கும்படியான உன்னத நிலைமையை தாங்கள் எப்பொழுதுமே எக்காலத்திலுமே, எக்காரணத்தைக் கொண்டும் அடையமுடியாதபடியான நிலைமையில் இந்து மதத்தின் ஜாதிவித்தியாசமானது இருந்துகொண்டு வருகின்றதென்பதை அறிந்தும், தெரிந்தும் கொள்ளாதவர்களாகவேதான் காணப்படுகின்றார்கள். பிரம்ம சூத்திரத்தின் படி, இவ்வுலகத்தைப் படைத்த பிரம்ம தேவனுடைய சிரசிலிருந்து பிராமணர்களும், புஜங்களிலிருந்து க்ஷத்திரியர்களும், தொடைகளிலிருந்து வைசியர்களும், பாதங்களிலிருந்த சூத்திரர்களும் வரிசைக்கிரமமாக பிரமாவினாலேயே படைக்கப்பட்டிருப்பதாகக் ஏற்படுகின்றது. இவ்வாறு உரைப்பதனால் அறிவாளிகளும், யுத்தம் புரிபவர்களும், தொழில் செய்பவர்களும், கூலிவேலை அதாவது அடிமைத்தொழில் புரிகின்றவர்களுமென கூறப்படுவதற்கனுசரணையாகக் நான்கு பிரிவுகளையும் ஏற்படுத்தினார்கள். அப்பிரிவுகள் எக்காரணத்தை மூலாதாரமாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் இப்பொழுது காணப்படும் பல்வேறு ஜாதிகளின் எண்ணிக்கைகளை அளவெடுத்துரைப்பதற்கேயில்லை. மேலும் ஒரு தேசத்தத்துவ நிபுணன், அந்த பிரம்ம தேவனின், ஒவ்வொரு அங்கத்தையும் ஒவ்வொரு வகுப்பினர்களுக்கும், ஒவ்

வொன்றாக பங்கிட்டு அவ்வங்கமே அந்த ஜாதி உற்பத்தியான தற்குக் காரணமென உரைப்பதற்குங்கூட கொஞ்சமும் சாத்தியப்படாத அளவிலேயேதான் இப்பொழுது காணப்படும் பல்வேறு ஜாதிகளும் பெருகியிருக்கின்றன. அவ்வாறு அந்த பிரம்ம தேவனின் ஒவ்வொரு அங்கத்தையும் ஒவ்வொரு ஜாதியாருக்கும் பங்கிட ஆரம்பித்தோமேயானால் அப்பொழுது ஒவ்வொரு ஜாதிக்கும் அப்பிரம்ம தேவனின் தேகத்திலுள்ள ஓர் அவயவமாவது அல்லது சிறுசிறு மாமிசத்துண்டமாவது அல்லது சிறு நரம்பாவது, அல்லது ஓர் சிறிய இரத்த அணுவாவது அவரவர்களுக்கு பங்கிட்டுக்கொடுக்க முடியுமா என்பது ஓர் பெரிய சந்தேகமாகவே தான் இருந்து கொண்டு வருகின்றது!

பல்வேறு வகுப்பைச் சார்ந்த மக்களுக்குள்ளும் கலப்பு மணமென்பது முழுவதும் தடுக்கப்பட்டே தானிருக்கின்றது. கலப்பு விவாகமென்பதைக் கனவிலும் ஒருவரும் கருதவே கூடாது. தங்கள் மதத்தைச் சாராதவர்களின் எதிரிலாவது, அல்லது அவர்கள் காணும்படியாகவாவது ஏதாவது சாப்பிடுவதென்பது கூட அறவே தடுக்கப்பட்டுத்தானிருக்கின்றது. மேலும், இன்னும் சில ஜாதிகளோ, தங்களுடைய இனத்தார்கள் அல்லது தங்களுடைய ஜாதியைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய சுமார் நூறு குடும்பங்களை மட்டும் கொண்டிருக்கும்படியான அவ்வளவு சிறிய தொகையையுடையவர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஆகையினாலே, அவர்களுடைய குடும்பத்திற்குள்ளேயே அவர்கள் தங்களுடைய ஆண்களுக்கும், பெண்களுக்கும் தகுந்தபடி விவா

கம் செய்வதற்கில்லாமல் போய் விடுகின்றது. சில சமயங்களில், சில வகுப்பினருக்குள் பெண்களே அபரிமிதமாகக் காணப்படுகின்றார்கள். இன்னும் சில வகுப்பினருக்குள்ளோ ஆண்களே அவ்வாறு அபரிமிதமாகக் காணப்படுகின்றார்கள். இக்காரணத்தால் தான் ஏராளமான ஸ்ரீதனங்களை அளிப்பதனால் உண்டாகக்கூடிய தீமைகளும், பெண்களை விற்பனை செய்வதும், பலதாரங்களை விவாகம் செய்து கொள்ளுவதும், கொஞ்சமேனும் ஒருவருக்கொருவர் பொருத்தமில்லா விவாகங்களுமாகிய செய்கைகள் நாட்டில் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

மேலும், ஒவ்வொரு சமூகமும் வேறு சமூகங்களோடு சம்பந்தம் செய்து, சிநேகிதப்பான்மையுடனிருப்பதற்கில்லாதவிதத்தில் பலவித தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றபடியினால், பல்வேறு சமூகங்களும் தங்கள் தங்களுடைய ஜாதியாச்சார, அனுஷ்டானங்களுக்குரியகட்டுத்திட்ட வரம்பிற்குள்ளாகவேயிருக்கும்படியாக நேரிடுகின்றது. இக்காரணத்தால் அவர்களுக்குள்ளாக ஒருவர் மீதொருவர் தப்பெண்ணங்கள் கொள்ளவும், பொறாமைப்படவும் மிக்க வசதிகளேற்படுகின்றன. தங்களுடைய சாதிக்குப் புறம்பானவர்களைக்காணுமிடத்து, அவர்கள் தங்களுடன் போட்டியிடுவதற்கு உற்பத்தியாயிருக்கக் கூடியவர்களென நினைக்கின்றனர். அதனால் அவர்களுடைய ஜாதி உற்பத்தியானதற்குப் பல இழிவானதும், தாழ்வானதுமான காரணங்கள் கூறப்படுகின்றன; இதன் மூலம், அடிக்கடி பல சச்சரவுகளும், சண்டைகளும் நேரிட்டு, அருவருக்கத்தக்கதும், வெறுக்கத்தக்கதுமான அடைமொழி

ப்பதங்கள் பல, அநேக சந்தர்ப்பங்களில் வினியோகிக்கப்படு கின்றன. சில சமயங்களில், அவ்வாறு அவர்கள் உற்பத்தி யாவதற்கு விபசாரமும், கெட்ட செய்கைகளுமே காரணமெ னவும் கூறப்படுகின்றது. உதாரணமாக, மேற்கு இந்திய பிரதேசத்தில் வசித்துக்கொண்டுவரும் பிராமண வகுப்பாரில் சிலர், அன்னியர்களை விஷமூட்டிக்கொன்று விடுவதில் மிக்க உற்சாகமுள்ளவர்களெனவும், அவர்கள் முக்கியமாக தங்களு டைய மருமகன்மார்களை ஓர்வித பெண் தெய்வத்திற்குப் பலி இட்டுவிடக் கூடியவர்களெனவும் கருதப்பட்டு வருகின்றார்கள். ஆனால் இவர்களுடைய இத்தகைய செய்கைகளுக்கு எந்தவித மான ஆதாரங்களும் காணப்படாமலிருந்தபோதிலும் கூட, சில ஆண்டுகளுக்கு முன்னதாக இச்செய்தியானது உண்மை யாயிருக்கக்கூடுமெனப்பாமர மக்களால் பொதுவாகவே கரு தப்பட்டும், நம்பப்பட்டும் வந்தது; அதனால் ஏனைய வகுப்பி னர் அந்த வகுப்பைச் சார்ந்த ஓர் ஆடவனிடத்திலிருந்தும் தாகத்திற்குக்கூட தண்ணீர் வாங்கி அருந்த பயந்து கொண் டேயிருந்து வந்தார்கள்.

மக்கள் நாளா வட்டத்தில் அறிவு வளர்ச்சிக்கான கல்வித் துறையில் முன்னேற்ற மடைந்து கொண்டே வருவதனாலும், போக்கு வரத்திற்குரிய சாதனங்கள் பல அபிவிருத்தியடை ந்து கொண்டே வருவதனாலும், மக்கள் தங்களுடைய ஜாதி வரம்பிற்குட்பட்ட குறித்த ஓர் எல்லையைக் கடந்து, உலக வர்த்தமானங்களை அறிந்து கொள்ளுவதில் அதிக ஊக்க முள் ளவர்களாகக் காணப்பட்டு வருவதனாலுமே தான் மதத்தின் பேராலும், ஜாதியின் பேராலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும்

அனேக கொடிய தடைகளும், நிர்ப்பந்தங்களும் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டே வருகின்றன; ஆகையால், தங்களுடைய ஜாதியைச் சாராத ஏனைய வகுப்பினர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதும் அவர்களுக்கு எதிரிலேயும், அவர்களுடன் கலந்தும், அவர்களுக்குச் சமமாகவும் உட்கார்ந்து சமபந்தி போஜனம் செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள்.

கலப்பு விவாகங்களென்பவைகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடைகளும், நிர்பந்தங்களும் முன்னிருந்தமாதிரியே தான் இப்பொழுதும் பலமாகவும் வலிமையாகவுமிருந்துவருகின்றன. அவ்வாறிருந்த போதிலும்கூட, பெண்கள் இப்பொழுது அறிவுவளர்ச்சிக்கான கல்வித்துறையில் முன்னேறிக்கொண்டே வருவதனாலும், அவர்களுடைய விவாகவயதானது சிறிது உயர்த்தப்பட்டுக்கொண்டே வருவதனாலும், முற்கூறிய கலப்புமணத்தடைகளும், நிர்பந்தங்களும் சிறிது சிறிதாக மறைந்து கொண்டே வருகின்றன. நாளாவட்டத்தில் இவைகள் மறைந்து, இருந்தவிடம் தெரியாமல் போய்விடுமென்பதற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றனவென்கூறுவது மிகையாகாதெனக்கருதுகின்றோம், ஆனால், இச்சம்பவமானது, அதாவது கலப்புமணமென்பது மெதுவாகத்தான் நடைபெறக் கூடும்.

தீண்டாதார் என்று சொல்லக்கூடிய சமூகத்தினர்கள் மிகத்தாழ்வான நிலைமையிலிருக்க வேண்டியவர்களெனக்கருதி அவர்களைத்தாழ்த்தி வைத்திருக்கும் கொடுமைதான் ஹிந்து மதத்தினால் மக்களுக்கு நேர்ந்த தீமைகளிலெல்லாம் தலை சி

ந்து விளங்கக்கூடிய தீமையாக விருக்கின்றது. சுமார் ஐந்து கோடிமக்கள் ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும்கூட, அவர்கள் யாவரும் ஹிந்துமதத்தைச்சார்ந்த ஜாதியினர்தான் என்று சிறிதும் கருதப்படுவதேயில்லை. தீண்டாதாரெனக் கூறப்படும் மக்களைத்தப்பித்தவறித்தீண்டிவிடுவதும், சில ஊர்களில் அவர்களைக்கண்களால் பார்ப்பதென்பதும், சில சமயங்களில் அவர்களுடைய நிழல்படுவதும் ஒரு தீட்டாகவேதான் பாவிக்கப்பட்டு அனுபவத்தில் இருந்துவருகின்றது.

மேலும், தலையோடு தண்ணீர் வார்த்துக்கொண்டு, அதாவது ஒரு முழுக்குப்போட்டோ, அல்லது உடுத்தியிருந்த ஆடைகளை அகற்றி விட்டு, துவைத்த வேறு ஆடைகளை உடுத்திக்கொண்டாலோதான் அத்தீட்டை நீக்கிக்கொண்டவர்களாகலாம் எனவும் கருதப்பட்டு வருகின்றது. தீண்டாதாரெனக் கூறப்படும் சமூகத்தைச்சார்ந்த மக்கள்யாவரும் ஆதிகாலத்தில் இந்தியாவில் வசித்துக்கொண்டுவந்த ஆரியரல்லாதாரின் சந்ததிகளே யாவார்கள். சமூக வாழ்க்கையின் அவசியத்திற்குத் தேவையாகயிருக்கும் சிற்சில தொழில்களைப்புரிந்து வருவதே அவர்களுடைய கடமையெனக் கருதப்பட்டும், அத்தொழில்களே தான் அவர்களுக்குப் பொதுவாகவே அளிக்கப்பட்டு வந்தது.

எவ்வாறிருந்த போதிலும், ஒரேஜாதிக்குள் அநேக உட்பிரிவுகளை உண்டாக்கிக்கொண்டும், வளர்த்துக்கொண்டும், மேல் கீழ் நிலை ஏற்படுத்திக்கொண்டும் வருவதேதான் மக்களுடைய மனப்பான்மையாக இருந்துகொண்டு வருகின்றது,

ஏனெனில் தீண்டாதாரெனக்கருதப்பட்டுவரும் சமூகத்தினரில் அநேக உட்பிரிவுகள் அவர்களுக்குள்ளாகவே ஏற்பட்டு ஒருவரை மற்றொருவர் தீண்டப்படாதாரெனவேதான் கருதிவருகின்றார்கள்.

இவைகள் எப்படியிருந்த போதிலும்கூட கல்வியறிவானது மக்களுக்குள் பரவி வருவதின் பயனாய், மக்கள் கல்வித்துறையில் முன்னேறிக்கொண்டே செல்லுவதால் தீண்டாமையென்பது கொஞ்சங் கொஞ்சமாக புறக்கணிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றது. தீண்டாதாரெனக் கூறப்பட்டு வரும் மக்களே தங்களுடைய உரிமைக்காக போராடவேண்டுமெனக்கருதி உழைத்துக் கொண்டும் வருகின்றார்கள். புதியதாக நிறுவப்பட்ட சீர்திருத்த சட்ட சபைகளும் தீண்டாதாரின் நிலைமையை உயர்த்த வேண்டுமெனக்கருதி, அதற்காக முயற்சித்துக்கொண்டும் வருகின்றன.

மக்கள் யாவரும் இவ்வாறுபல்வேறு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால்தான், தாங்கள் யாவரும் ஒரே தேசத்தினர் என்கிற உணர்ச்சி அவர்களிடம் வளர்ந்து வருவதற்கு இடமில்லாமலிருந்து வருவதுடன், தேசீய உணர்ச்சியையே அடியோடு நாசமாக்கிக்கொண்டும் வருகின்றது. ஒவ்வொருவரும் தங்களுடைய ஜாதியையே பிரதானமாகக்கருதிக் கொண்டிருப்பதனுல் தான் அயலாரொருவரால் செய்யப்படும்ஒவ்வொரு காரியங்களுக்கும் வகுப்புக்காரணமே பிரதானமென்கின்ற மிக்க இழிவான ஓர்காரணம் கூறப்படுகின்றது. மேலும் சாக்காரின் உத்தியோகங்கள்கூட, ஒருவர் அக்குறித்த வேலைக்குத்தகுந்த திறமை

வாய்ந்தவராகவும், தகுதியுடையவராகவும் இருக்கின்றாரா என்பதை கவனியாது ஜாதியை அனுசரித்த வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ முறையிலேயேதான் அவ்வுத்தியோகங்கள் வழங்கப்படவேண்டுமெனவும் உரைக்கின்றார்கள். இதுவுமல்லாமல் சட்டசபையையனுசரித்த ஏதாவதொரு தீர்மானத்திலாவது, அல்லது அதை நிறைவேற்றுவதென்பதிலாவது ஏதாவதொரு சமூகமோ, வகுப்போ அல்லது ஜாதியோ பாதிக்கப்பட நேரிடுமோ என்பதை கவனித்தாராய்ந்தே செய்ய வேண்டியதாகவுமிருக்கின்றது. வகுப்புப்போராட்டங்கள் நேரிடாதவாறும், எல்லா சமூகத்தினருக்கும், எல்லாவகுப்பாருக்கும், எல்லா ஜாதியாருக்கும் திருப்தியையளிக்கத்தக்கவாறுமான முறையிலுமேதான் இந்திய அரசியலின் நிர்வாகம் நடைபெற்றுக்கொண்டு வரவேண்டியிருக்கின்றது. அடிக்கடி நேரிடக்கூடிய வகுப்புப்போராட்டங்களின் பயனாய் அரசியல் நிர்வாகம் அதிகமாக பாதிக்கப்படுவதால் மக்களின் தேசீய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடுவதற்குத்தயாராகயிருக்கக்கூடிய மக்கள் அதையே ஓர் காரணமாக குரங்குப்பிடியாய்ப்பிடித்துக்கொண்டு, சர்க்காரார் தங்களுடைய செய்கையை அவ்வளவிலேயே நிறுத்திக்கொள்ளவாவது அல்லது அதனின்றும் பின்னடையும்படியாகவாவது செய்துவிடுகின்றார்கள்.

தற்காலமிருந்து வரக்கூடிய அரசாங்கமும் பல்வேறு வகுப்பினர்களுக்குள்ளும் நேரிடக்கூடிய வகுப்புப்போராட்டங்களையும் சச்சரவுகளையும் அறவேயொழித்துவிடுவதற்கான முறைகளில் ஈடுபட்டு, அவைகளையேதான் கையாண்டுகொண்டுவந்தார்களென முழுவதுமே உரைத்துவிட முடியாது.

அன்னியரின் ஆட்சி இந்தியாவில் சுலபமாக நடைபெறுவதற்கு இந்தியர்கள் யாவரும் பல்வேறு வகுப்பினராகவும் ஜாதியினராகவும் பிரிந்து நிற்பதுதான் காரணமாகுமெனச் சிலர் உரைக்கலாம். இந்தியர்கள் யாவரும் தங்களுடைய மதத்தின் காரணமாகவும், ஜாதியின் காரணமாகவும் பிரிந்து தனித்தனியாக நின்றுகொண்டு வருவதை அறவேவிட்டொழித்து, அந்த எண்ணங்களையே நாசமாக்கவேண்டும். தாங்கள் யாவரும் ஒரேமதத்தைத்தான் சார்ந்தவர்கள், ஒரே ஜாதியைத்தான் சார்ந்தவர்கள்; ஒரே தேசத்தைத்தான் சார்ந்தவர்களென்கிற எண்ணங்களால் தூண்டப்படவேண்டும். இவ்வாறு யாவரும் ஒற்றுமையடைந்து ஒரு கூட்டமாகி முன் அணியில் வந்து எப்பொழுது நிற்க ஆரம்பிக்கிறார்களோ அப்பொழுதுதான் மேலே கூறிய கூற்றானது அளவுக்கு மிஞ்சின கூற்றெனவும், அனாவசியமான கூற்றெனவும் கருதப்படும். இல்லாவிடில் அக்கூற்று உண்மையேயாகுமென்பதில் ஐயமில்லை.

வகுப்பு பேதங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் மத சம்பந்தமான உணர்ச்சியானது மக்களின் மனத்திலிருந்து அறவே நீக்கிவிடப்பட முடியுமானால் இந்தியாவைக்குறித்த பிரச்னைகள் யாவும் மிக்க சுலபமாகவே நிவர்த்திக்கப்படக் கூடும். இந்திய தேசீய வீரர்களில் அநேகர் தங்களுடைய பழைமையான நாகரீகமானது மதத்தையே அடிப்படையாகக் கொண்டதெனவும், மதமே அதற்கு மூலகாரணமெனவும், மதமே அதற்கு அஸ்திவாரமெனவும், மிக்க இனிமையாகவும் பெருமையாகவும், கௌரவமாகவும் கூறிக்கொள்ளுவதில் மிக விருப்பமுள்ளவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

ஆனால் இந்தியாவின் பிரச்சினைகள் சுலபமாகத்தீர்க்கப் பட முடியாமல் அதிக சிக்கலாக இருந்துகொண்டு வருவதற்கும் இந்தியாவானது இதர தேசங்களைப்போல் முன்னேறாமலிருந்துகொண்டு வருவதற்கும் மக்களுக்குள்ளிருந்துவரும் இத்தகைய உணர்ச்சியேதான்—இதே உணர்ச்சிதான் காரணமாகுமேயல்லாமல் பிறிதொன்றும் காரணமாகவே ஆகாதென்பதை அவர்கள் உணர்ந்து அறிந்துகொள்ளவேண்டும். இவ்வாறு அறிந்துகொள்வார்களேயானால் அப்பொழுது தற்கால மக்களால் நடைமுறையிலனுஷ்டிக்கப்பட்டு வரும் மதத்தை நாம் என்னதான் சீர்திருத்தங்கள் செய்து அம்மதத்தை ஒழுங்கு படுத்திய போதிலும் சரியே அல்லது வேதங்களை நாம் எவ்வளவுதான் உண்மையென நம்பி அவைகளைப் பின்பற்றி, அவைகளையே கட்டிக்கொண்டு அழுதபோதிலும் சரியே, அல்லது நமது கற்பனா சக்தியினுதவியால் இந்தியாவானது ஆதிகாலத்தில் எவ்வளவுதான் உன்னதமான நிலையிலிருந்ததாகக் கூறிக்கொண்டே வந்தபோதிலும சரியே, அவைகள் யாவும் இதர தேசத்தார்கள் இந்தியாவைக்கண்டு மரியாதை செய்யும்படியான நிலைமையையோ, அல்லது பயப்படும்படியான நிலைமையையோ ஒருக்காலும் உண்டாக்கவே உண்டாக்காதென்னும் ஓர் தள்ளமுடியாத—தடுக்க முடியாத முடிவுக்கேதான் அவர்கள் வரக்கூடும்.

மக்கள் தங்களுடைய பழங்கதைகளையும், பழைமையான பெருமைகளையும் நினைத்துக்கொண்டும் அவைகளையே கூறிக்கொண்டும் தங்களுடைய வாணாட்களை வீணாட்களாக்காமல் இருக்கவேண்டும். தாங்கள் தற்காலமிருக்கக்கூடிய நிலைமையிலும், தங்களுடைய எதிர்கால வாழ்க்கையிலுமே கண்ணும்

கருத்துமாயிருக்கவேண்டும். மரணமடைந்த பிறகு ஆத்மாக்களுக்குவிமோசனமேற்படுகின்றதா? அவ்விமோசன மேற்படவேண்டுமானால் என்ன செய்யவேண்டும் என்பவைகளில் கவலைபூண்டு, அவைகளில் தங்களுடைய நேரங்களை வீணாகச் செலவழிப்பதை விட்டொழிக்கவேண்டும்; உயிருடனிருக்கும் இச்சமயத்தில் நாம் எத்தகைய உதவிகளை மற்றவர்களுக்குப் புரிந்து அவர்களுடைய கஷ்டங்களிலிருந்து அவர்களை மீட்கக் கூடும்? என்பதில் கவனம்செலுத்தவேண்டும்; தங்களைப்போல் உயிருள்ள மானிடர்களுக்கு உதவி செய்யாமல் இயற்கையை மீறி அல்லது கடந்து நின்றுகொண்டிருப்பதாகக் கூறப்படுபவைகளுக்கு பயபக்தியுடன் மக்கள் இப்பொழுது நடந்துகொண்டு வரும் தன்மையானது மாறவேண்டும்; இவ்வகையில் மக்களுக்குள் பகுத்தறிவு விருத்தியடைவதற்கான முறைகளிலேயே அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவானது தான் நியாயமாகவே அடைய வேண்டிய ஓர் நிலைமையை நிரந்தரமாகவும், சாஸ்வதமாகவும் அடைய முடியும். தற்காலம் இந்தியாவிலிருந்து வரும் மதங்களையும் ஜாதிகளையும் அடியோடழித்து நிர்மூலமாக்குவதிலேயேதான் ஒவ்வொரு இந்திய தேசீய வீரனும் தன்னுடைய முழு கவனத்தையும் இப்பொழுது செலுத்திக்கொண்டு வரவேண்டும். ஏனெனில் நாலாவிதத்திலும் அவன் முன்னேறுவதை தடைப்படுத்தக்கூடிய முட்டுக்கட்டைகள் இந்த ஜாதி மதங்களில்தானிருந்துகொண்டு வருகின்றன.

———0———

# ஹிந்துக்களின் மதபுஸ்தகங்கள்.

——:0:——

கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், யூதர்கள் ஆகியவர்களுக்குத் தங்கள் தங்கள் மதத்திற்கு என்று மூலாதாரமான ஒரு மதபுஸ்தகம் இருப்பது போல் இந்துக்களுக்கு என்று ஒரு தனிப்பட்ட புஸ்தகம் கிடையவே கிடையாது. இந்துக்களுக்குள்ளாக பல மதப்பிரிவுகள் இருந்தாலும் அவையவைகளின் நடைகளுக்கும், குணங்களுக்கும், ஒழுக்கங்களுக்கு மேற்றாற்போல் பல்வேறு பிரிவுகளின் பிரமாணங்களும், கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று நேர்முரண்பாடாகவும், பொருத்தமற்றதாகவும் காணப்படும் எண்ணற்ற புத்தகங்கள் இருக்கின்றன; இருந்தபோதிலும்கூட, அவைகளில் ஏராளமான நூல்களை மிகவும் பரிசுத்தமானதெனவும், அவைகளே தங்களுடைய மதசம்பந்தமான புஸ்தகங்களெனவும் கருதப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான மதபுஸ்தகங்களில் சுருதியும், ஸ்மிருதியும், புராணமுமாகிய மூன்றுமே மிக முக்கியமானதென ஒப்புக்கொள்ளப்பட்டும், அங்கீகரிக்கப்பட்டுமிருந்து வருகின்றன. முதல் கூறப்பட்ட வகுப்பில் வேதங்களென கூறப்படுகின்றவைகள் யாவும் அடங்கியிருக்கின்றன. சிருஷ்டிகளுக்குக் கர்த்தாவாயிருக்கக் கூடியவனிடமிருந்து, அநேக ரிஷிகளால், உண்மையாகவே கேள்விப்பட்டவைகளைத்துமட்டுமே அவ்வேதங்களில் எழுதப்பட்டிருப்பதாகப் பெரும்பாலும் நம்பப்பட்டுவருகின்றது. ஆனால், அவைகள் யாவும் பல்வேறு ஆசிரியர்களால், ஆதியில் வழங்கிக்கொண்டிருந்த வடமொழி பாஷையில் எழுதப்பட்டிருந்த நூல்களை

யே ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. அவைகளின் மூலவாக்கியங்கள் யாவும் ஒழுங்காகவே காப்பாற்றப்பட்டும் வரப்பட்டிருக்கின்றன. ஏனெனில் முற்காலங்களில், ஒரு பிராமணன் வேதங்களைக்கற்று, மனப்பாடம் செய்து, உருபோட்டுக்கொண்டு வரவேண்டுமெனவும், அவ்வாறு செய்வதற்காக வேண்டி அவன் தன்னுடைய பாலிய திசையை அதிலேயே செலவிடவேண்டுமெனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால், பொதுவாகவே அவைகளின் அர்த்தமானது அவர்களால் அறிந்தும், தெரிந்தும் கொள்ளப்படவில்லை. அவர்கள் கல்வி பயிலுவதென்பதானது இயந்திரங்களைப்போல் குருட்டுத்தனமாக அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதுதானெனவும், அவைகளின் சப்தங்கள்கூட ஒரு மாதிரியான பரிசுத்தம் வாய்ந்தது தானென்றும் கருதப்படக்கூடிய அளவிலேயே தானிருந்து வந்தது.

தற்காலத்தில், அதாவது சில ஆண்டுகளாக எல்லா வேதங்களும் பல அறிவாளிகளாலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்ததின் பயனாக அவைகள், ஆதிகாலத்திய ஆரியர்களின் நாகரீகமென்பது இத்தகைய தென்பதைப்பற்றி அறிந்து கொள்ளுவதற்கு சாத்தியமான சில முக்கிய சாதனங்களுக்கு அஸ்திவாரமாயிருக்கின்ற தென்பதாக ஏற்பட்டது. வேதங்கள்தான் இந்துமதற்கே அல்லது பிராமணீயத்திற்கே மூலாதாரமெனக்கருதப்பட்டு வந்த போதிலும்கூட, ஆதிகாலத்திலிருந்து வந்த ரிஷிகள் இப்பொழுது உயிர்பெற்று, தற்காலம் தங்களுடைய சந்ததிகள் எனக் கூறிக்கொள்ளுபவர்களைப்பார்க்கும் படியாக நேரிட்டால்,

அப்பொழுது தங்களுடைய சொந்த நாகரீகத்தின் வம்ச பரம்பரையாக உற்பவித்த சந்ததிகள்தான் என்பதை அறிந்து கொள்ள முடியவே முடியாது. வேதங்களில் கூறப் பட்டிருக்கும் அநேக பழக்க வழக்கங்களும் ஆச்சார அனுஷ் டானங்களும் கைவிடப்பட்டாவது அல்லது முற்றிலும் மாறு பாடடைந்தாவது தான் தற்காலம் காணப்படுகின்றது. அப் படியிருந்தபோதிலும்கூட, ஹிந்துக்கள் என்பவர்கள் தாங் கள் வேதங்களையேதான் பின்பற்றுவதாகக்கூறிக்கொள்ளு கிறார்கள். வேதங்களில் கூறப்பட்டிருப்பதற்கும், அவர்களு டைய தாற்கால நடைமுறைகளுக்கும் ஒன்றுக்கொன்று விரோதமாகவும் பரஸ்பர சம்மந்தமில்லாமலும், பொருத்தமில் லாமலுமிருக்கின்றதேயென நாம்யாராகிலும் குற்றம் சாட்டி ஞல் உடனே அவர்கள் யாரும் “பழக்க வழக்கங்கள் சாஸ்திரங்களை புறக்கணிக்கின்றன. அல்லது கால்களால் மிதித்துத் தள்ளிவிடுகின்றன” என ஓர் சமாதானத் தை உரைத்து விடுகின்றார்கள். ஆனல், உண்மையாகவே ஹிந்துமதத்தில் அபிமானமுள்ளவர்கள் யாவரும், வேதங்களை ஆராய்ச்சி செய்த அறிவாளிகளின் கண்டனங்களாலும், ஆக்ஷேபணைகளாலும் கோபமோ, ரோஷமோ அடைவதில்லை. மேலும், வைதீகத்திற்கே தூண்கள் போன்று ஆதார மாயிருக்கக்கூடிய யாவரும் வேதங்கள் யாவும் மனிதர்களால் தான் இயற்றப்பட்டதென்பதையும், அவைகள் மனிதஇயல்பி ற்கு மேற்பட்டதல்லவென்றும், அற்புதமானவைகளல்லவென் றும், தெய்வாம்சம் பொருந்தியவைகளல்லவென்றும் கூறப் படும் நியாயத்தை ஆதரிக்கக்கூடியவர்களாகவேதான் காணப் படுகின்றார்கள்.

அடுத்தபடியாக, ஸ்மிருதிகள் எனக்கூறப்படுபவைகள் அதி முக்கியமானவைகளெனக் கருதப்பட்டு வருகின்றன. ஸ்மிருதிகளோ அபரிமிதமாகவும், ஏராளமாகவும் காணப்படு கின்றன. அவைகள் கல்வியில் பாண்டித்தியமடைந்து நிபுண ர்களெனக்கருதப்பட்ட மக்களால் மக்களின் வாழ்க்கைக்குரிய விதிகளைப்பற்றியும், சமூகஸ்தாபனங்களின் போக்கைப்பற்றி யும், நிலைமையைப்பற்றியும், ஒழுங்குகளைப்பற்றியுமுள்ள சட் டதிட்டங்களைப்பற்றியுமே எழுதப்பட்டவைகளாகும். உண் மையாகவே, அவைகள் ஒருவிதமான சட்ட புஸ்தகங்களாக வேதான் விளங்குகின்றன. ஆனால், எப்பொழுதுமே அவை கள் ஒன்றுக்கொன்று பொருத்தமென்பது சிறிதுமின்றி, முற ண்பாடுடையவைகளாகவேதான் காணப்படுகின்றன. மே லும், இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் அநேகவித ஸ்மி ருதிகள் பிரமாணங்களாக எடுத்துக்காட்டப்பட்டு வருகின் றன. ஆதிகாலத்தில் ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் முதன் முதலாக ஏற்பட்ட பொழுது சமஸ்கிருதஸ்மிருதிகளில் பாண் டித்தியமடைந்து நிபுணர்களெனக் கருதப்பட்டவர்களின் உதவியைக்கொண்டேதான் ஆங்கிலேய நீதிபதிகளால் இந்தி யாவில் சட்டங்கள் வழங்கப்பட்டு வந்தன. ஏனெனில், அவர் களுடைய தீர்ப்புகளும், ஹிந்து சட்டங்களையே அனுசரித்த தாக இருக்கவேண்டுமெனக் கருதியதால் இத்தகைய கொள் கையை அவர்கள் கையாளும்படி நேர்ந்தது. ஸ்மிருதிகள் மக்களின் எண்ணங்களை படிப்படியாக வெளிப்படுத்தி அவை களை விரித்துரைப்பவைகளாகவேதான் காணப்படுகின்றன ஆனால் ஆங்கிலேயர்களின் ஆட்சியானது நாளாவட்டத்தில்

ஆதிக்கம் பெற ஆரம்பித்தது முதற்கொண்டு அவர்களுடைய சட்டங்களே சாஸ்வதமாக இருக்கும்படி நேர்ந்தது. இக்காரணத்தாலேயேதான் சமூகஸ்தாபனங்களின் முன்னேற்றமானது தடைப்படும்படியாக நேர்ந்தது. தற்கால இந்து இந்தியாவில் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் பழக்க வழக்கங்கள் யாவும் தற்கால நிலைமைக்கு முற்றிலும் விரோதமாகவும், மாறுபட்டும் காணப்படுவதற்கு இதுவுமோர் காரணமேயாகும்.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக ஹிந்து இந்தியாவின் நிலைமையானது எத்தகைய ஸ்திதியிலிருந்து கொண்டு வந்ததென்பதை ஸ்மிருதிகளெனக் கூறப்படும் இப்புஸ்தகங்கள் நன்றாக விளக்கிக்காண்பிக்கின்றன. அநேகவிதங்களில் அந்நிலைமையானது மாறுபட்டோ அல்லது அடியோடு மறைந்தோ இருந்தபோதிலும்கூட, பெரும்பான்மையான மக்கள், தாங்கள் அப்பழைய கொள்கைகளையே பின்பற்றுவதாகத்தான் இன்றும் நம்பிக்கொண்டும், திருப்தியுடனுமிருந்துகொண்டுந்தான் வருகின்றார்கள். வைதீக ஹிந்துக்களிடம் நாம் ஏதாயினுமொன்றைக் குறித்து வார்த்தையாடுவோமானால் அப்பொழுது அவர்கள் யாவரும் அநேகமாக ஸ்மிருதிகளிலுள்ள வாக்கியங்களையே மேற்கோளாகவும், பிரமாணங்களாகவும் எடுத்துக்காண்பித்து, அவைகளுக்கு நாம் கட்டுப்பட்டு நடந்துதான் தீரவேண்டுமென ஓர் முடிவும் கூறிவிடுவார்கள். ஆனால் அநேகமாக இரண்டு கட்சிக்காரர்களும் இம்முடிவை அங்கீகரித்து ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். அப்படியிருந்த போதிலுங்கூட இருவரும் தங்களுக்கு அனுகூலமாகக்காணப்படும் வாக்கியங்களை எடுத்

துப் பிரமாணமாகக்காண்பிப்பதில் மட்டும் சிறிதும் பின்ன டையவேமாட்டார்கள். இம்மாதிரியாகவேதான் விதவா விவாகத்தைப்பற்றிய பிரச்சினைகள் உண்டாகும்பொழுதெல் லாம் அம்மாதிரியான விவாஹமென்பது கூடவேகூடாதெனத் தடுப்பதற்கும் அந்த ஸ்மிருதிகளேதான் பிரமாணமாக எடுத் துக்காட்டப்பட்டு வருகின்றன. இக்காரணத்தாலேதான் இப்பரிதாபகரமான விஷயத்தில் இந்தியர்களின் பழக்க வழக் கங்கள் எத்தகையதாயிருந்திருக்கக்கூடுமென திட்டமாய்க் கூறுவதற்கு முடியாமலிருந்துகொண்டு வருகின்றது.

இனி மூன்றாவதாகப்புராணங்கள் எனக்கூறப்படுபவை கள் ஹிந்துக்களின் வேதங்களெனவும், அவைகள் மிகவும் பரி சுத்தம்வாய்ந்ததெனவும் கருதப்பட்டு வருகின்றன. ஆனால், இப்புராணங்களோ ஸ்மிருதிகளைவிட ஏராளமாகக் கணக்கு, வழ க்கற்றுக்காணப்படுகின்றன. மேலும் இப்புராணங்களில் நானா விதமான கதைகளும் கூறப்பட்டிருப்பதுடன், சிலஉண்மை விஷயங்களும் அவைகளுடன் கலந்து தானிருக்கின்றன. ஆனால் இவ்வுண்மை விஷயங்களை அக்கதைகளினின்றும் வே றாகப்பிரிப்பதென்றால் அது ஓர் முடியாதகாரியமேயாகும். இப்புராணங்களில் எல்லா மக்களுக்கும்முக்கியமாய்த் தெரிந் திருப்பவைகள் இராமாயணமும், மகாபாரதமுமெனக் கூறப்படும் இரண்டு இதிகாசங்களேயாகும். கிறிஸ்துவின் சகாப்தம் ஆரம்பமானகாலத்தில் இந்தியாவின் நாகரீகம் எத் தகைய நிலையிலிருந்ததென்பதைக்குறித்து இவ்விரண்டு புஸ் தகங்களும் விளக்கமாகவும், விரிவாகவுமெடுத்துரைக்கின்றன. இரண்டு புஸ்தகங்களிலும் அநேக பாகங்களிருக்கின்றன.

மேலும் இடையிடையே அடிக்கடி மாறுதல்களும் ஏறபட்டிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கின்றது. ஏனெனில், மேற்கூறிய இரண்டு புஸ்தகங்களும் பெருமை வாய்ந்ததெனவும், கீர்த்தி வாய்ந்ததெனவும் பொது மக்களால் கருதப்பட்டு ஓர் விசேட கௌரவத்தை அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தபடியால், இடையில் தோன்றியவர்களில் சிலர் தங்களுடைய சொந்த கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் எழுதி அப்புஸ்தகங்களுடன் சேர்த்து விடுவது அவர்களுக்குச் சாத்தியமாகவிருந்தது.

அப்புஸ்தகங்களில் கூறப்பட்டுள்ள கதைகளில் சிறிதளவு வேண்டுமானால் ஒருசமயம் உண்மையாயிருந்தாலும் இருக்கலாம். ஆனால் அக்கதைகளில் மனோகற்பனையினால் சிருஷ்டிக்கப்பட்ட விஷயங்களும், தெய்வீகம் பொருந்திய செய்கைகளுமே அளவுக்கு மீறிக்காணப்படுகின்றன. நடுநிலையிலிருந்து அப்புஸ்தகங்களை வாசிக்கக்கூடிய ஒருவருக்கு அவைகளில் காணப்படும் விஷயங்களில் சரித்திர சம்பந்தமான உண்மைகள் என்பது சிறிதுமில்லாதிருப்பது புலனாகாதிராது. அப்படியிருந்தபோதிலும்கூட, அதாவது, அக்கதைகளுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத விஷயங்கள் இடையில் அடிக்கடி கூறப்பட்டிருந்தபோதிலும் கூட அவைகள் யாவும் மிகவும் உபயோகமுள்ளதாகவேதானிருக்கின்றன.

முற்கூறிய புராணங்களும், இதிகாசங்களும் தான் ஹிந்து மதத்தில் அறிவு வளர்ச்சிக்கான மூலாதார புஸ்தகங்களென சாதாரண பாமர மக்களால் பெரும்பாலும் கருதப்பட்டு வருகின்றது. அது எப்படியிருந்த போதிலும், ஒவ்வொரு

கதையிலும் கண்டனங்களுக்குட்படாத சொற்பொருள்களு ள்ள சில உண்மைகள் பொதிந்தேதான் விளங்குகின்றன. மேலும் கற்பனு சக்தியினுதவியால் எழுதப்பட்ட கதைகள் யாவும், பெரும்பாலும் உண்மையில் நடந்தவாறே அவ்வளவு அழகாக வர்ணித்துக் கூறப்பட்டிருக்கின்றன. சில புராணங் களோ, அளவுகடந்த, பெரும் பொய்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. கிறிஸ்துவர்களின் சத்திய வேதமாகிய பைபி ளில் காணப்படும் சில கதைகள் எவ்வாறு குழந்தைகளால் கற்பதற்குத் தகுதியற்றவையெனக்கருதப்படுகின்றதோ, அவ் வாறேதான் இப்புஸ்தகங்களில் காணப்படும் சில கதைகளும் குழந்தைகளால் கற்பதற்குத்தகுதியற்றவையேயாகும். இன் னும் சில கதைகளோ, ஏதாகிலும் குறித்த ஓர் ஜாதியையோ, அல்லது வகுப்பையோ அளவுகடந்தும், வெளிப்படையாக வும் ஸ்தோத்திரம் செய்து, புகழ்ந்து பாராட்டுவதோடுகூட, ஏனைய இதர ஜாதிகளையும், வகுப்புகளையும் பழித்துத்தூற்று வதிலும் சிறந்து விளங்குகின்றன. இக்காரணத்தாலேயே தான், பிராமணரல்லாத ஏனைய சமூகத்தார்கள் சில புராணங் களின் மீது தப்பெண்ணங்கொள்ளவும், அவைகள் பொய் யென்றெண்ணவும் இடமேற்படுகின்றது.

ஹிந்துக்களால் மிக்க விசேடமானதென பயபக்தியுடன் கருதப்படும் புஸ்தகங்களிலெல்லாம் தலை சிறந்து, முதன்மை யாக விளங்கக்கூடியவைகள் பகவத்கீதையும், உபநிஷத்துக் களுமேயாகும். இவைகள் பெரும்பாலும் தத்துவ சாஸ்திரத் திற்குரியவைகளையே போதிக்கின்றன. தங்களுடைய நித் திய, தினசரி வாழ்க்கையில் கீதையில் ஓர் அத்தியாயத்தைத்

தினந்தோறும் தவறாமல் வாசித்துக்கொண்டேதான் வரவேண்டுமென்பது ஒவ்வொருவருடைய அத்தியந்த கடமையெனவும், அதுவே ஒரு புண்ணியமெனவும் ஹிந்துக்களிலனேகர் கருதி அவ்வாறே நடந்து கொண்டு வருகின்றார்கள். அவைகளைப்பற்றி நாம் இங்கே விளக்கமாக உரைப்பதென்றால், அது முடியாத காரியமேயாகும். ஆகையால் ஒவ்வொரு அறிவாளியும், ஆராய்ச்சிக்காரரும் தங்கள் தங்களுடைய பகுத்தறிவினுதவியைக் கொண்டு அவைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று நாம் பெரிதும் விரும்புகின்றோம். கீதை போதிப்பதின் முக்கியாம்சத்தைக் குறித்துப் பல அபிப்பிராய பேதங்களிருந்து கொண்டுதான் வருகின்றன. அதாவது கீதையானது கர்மத்தைப்பற்றித்தான் போதிக்கின்றதெனச் சிலரும், பக்தியைப்பற்றித்தான் உபதேசிக்கின்றதெனச் சிலரும் கூறிக்கொண்டு வருகின்றார்கள். மேலும் அரசியல் வாதிகளிலனேகர், பெரும்பாலும் கீதையில் காணப்படும் சுலோகங்களையே பிரமாணமாகவும், மேற்கோளாகவும் அடிக்கடி எடுத்துக் காட்டும் வழக்கமுடையவர்களாயிருக்கின்றனர். ஆனால், உண்மையாகவே கீதையில் அங்குமிங்குமாகக்காணப்படும் சுலோகங்களைப் பெரும்பாலும் நாம் எத்தகைய காரியங்களுக்கும் எக்காலத்திலும் பிரமாணமாகவும், மேற்கோளாகவும் எடுத்துக்கூறலாம்.

நாம் இதுவரையிலும் கூறிக்கொண்டு வந்த, வடமொழியில் எழுதியிருக்கப்பட்ட கிரந்தங்களைத் தவிர்த்து, ஒவ்வொரு வகுப்பினருடைய தாய்பாஷையிலும் ஏராளமான மதசம்பந்தமான புஸ்தகங்கள் காணப்படுகின்றன. இப்புஸ்தகங்கள் யாவும், பெரும்பாலும், பயபக்தியுடனும், ஆசார அனுஷ்டான

ங்களுடனும் தான் ஓதப்பட்டும், போதிக்கப்பட்டும் வருகின்றன. துக்காராம் அவர்களால் இயற்றப்பட்ட 'அப்ஹஸ்காஸ்' எனக்கூறப்படும் மத சம்பந்தமான மந்திரங்கள் இன்றும் மகாராஷ்டிர தேசத்தில் வாழ்ந்து கொண்டுவரும் மக்களால் ஓதப்பட்டு வரப்படுகின்றது. பல்வேறு ரிஷிகளின் ஜீவிய வாழ்க்கையானது, பொதுவாகவே, மக்களுக்கு ஓர் தூண்டுகோலாக இருந்து கொண்டு வருகின்றது. மேலும், அவர்களுடைய வாழ்க்கையில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும், படித்த அறிவாளிகளென்பவர்கள் கூட யாதொருவித கண்டனமோ, ஆக்ஷேபணையோயின்றி, அப்படியே அவைகளை நம்பிக்கொண்டு வருகின்றனர்; அன்றியும் அவர்களைக் குறித்துக் கூறப்படும் அதி அற்புதமான, இயற்கைக்கு மீறிய கதைகளையும் ஆக்ஷேபணையின்றி உண்மையென்றே நம்பிக்கொள்ளுகிறார்கள். அக்கதைகளில் கூறப்பட்டிருக்கும் சன்மார்க்க போதனையானது, ஆச்சரியப்படத்தக்க விதமாகத்தான் அமைக்கப்பட்டு, கூறப்பட்டிருக்கிறதென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. ஆனால் கால இயல்புகளுக்குத் தகுந்தவாறு ஒருவன் தன்னைத் திருத்திக்கொள்ளாமலும், பொருந்தாத பழைய பழக்க வழக்கங்களுடன் எதிர்த்துப் போராடாமலும், என்ன நேரிடினும் அப்படியே அவைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டுமெனவும், விதியைவெல்ல ஒருவராலும் முடியாதெனவும், தாங்கள் வணங்கும் குறித்த ஓர் தெய்வம் தங்களுடைய நித்திய வாழ்க்கையில் ஏதாயினும் துன்பம் நேர்ந்தால், உடனே குறுக்கிட்டு தங்களைப் பாதுகாக்குமெனவும், அழுத்தந் திருத்தமாகவும், வற்புறுத்தியும் கூறப்பட்டிருக்கின்றது. அது

ளுல் தான், இந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் விதிக்குக் கட்டுப்பட்டுத்தான் தீரவேண்டுமென்கிற மனப்பான்மையுடன் இருக்கும்படி செய்துவிட்டது; அல்லாமலும் தங்களுடைய சுயமுயற்சியால் ஏதாயினும் ஓர் காரியத்தை வெற்றிகரமாக முடித்து, முற்போக்கடைவதற்கு, அல்லது முன்னேறுவதற்கு சாத்தியமில்லாதவர்களாகவும், அதாவது கோழைகளாகவும் செய்து விட்டது. மேலும் குறிப்பாக, தற்கால சமூக வாழ்க்கையைக் குறித்த வரையிலும் நாம் நமது முன்னோர்களாகிய ரிஷிகளின் வாழ்க்கையைக் குறித்துப்பேசி, இவ்வுலக வாழ்க்கை அநித்தியமானதென கூறிக்கொண்டிருப்பதானது சிறிதும் பொருந்தாக்கூற்றேயாகும்.

விவேகிகளான பகுத்தறிவாளர்கள் இந்நூல்களில் நன்மையை விளைவிக்கத்தக்க பாகங்களை அப்படியே பாதுகாத்து, அவைகளை ஆராய்ச்சி செய்து, குணங்களை மட்டும் கிரகித்துக் கொள்ளும்படியான மார்க்கங்களைக்கண்டறிய முயற்சி செய்ய வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் நாம், ஒவ்வொருவருடைய மனத்திலும் ஆழமாகப்பதியவைக்க வேண்டுமென விரும்புவது யாதெனில், நாம் வெற்றுரை வீரர்களாக விளங்காமல், இந்த நூல்களை ஆராய்ச்சி செய்யும் பொழுது, நமது பகுத்தறிவை உபயோகிக்க வேண்டுமென்பதேயாம்.

நாம் இதுவரையிலும் ஹிந்துக்களின் மத சம்பந்தமான புஸ்தகங்களைப்பற்றி சுருக்கமாகக் கூறிக்கொண்டு வந்ததிலிருந்து, இந்தியாவிலிருக்கும் பகுத்தறிவாளர்களின் குணதோஷ விசாரணைக்குரிய வேலையானது கிறிஸ்துவர் தேசங்களில் வசிக்கும் பகுத்தறிவாளர்களின் வேலையைப்போல். அவ்வளவு கடி

னமானதாயும், கஷ்டமானதாயுமிராதென்னப் புலப்படும். அவர்களுடைய முக்கிய வேலையானது என்னவெனில் அவர்களுடைய ஆக்ஷேபணைகளையும், கண்டனங்களையும், செய்கைகளில் காண்பித்து, அனுஷ்டானத்தில் கொண்டுவர மக்களுக்குப்போதிய திடத்தையும், தைரியத்தையும் ஆதரவையும் அளிக்கவேண்டியதேதான். இந்திய சீர்திருத்த வாதிகளிற்சிலர், ஏதாவது குறித்த ஓர் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால், ஆதிகாலத்திய மத புஸ்தகங்களின் மீதுதான் தங்களுடைய முழுப்பொறுப்பையும் சுமத்தக்கூடிய மனப்பான்மை வாய்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். ஏனெனில், "வேதங்களுக்குத் திரும்புங்கள்" என்னும் முழக்கம் நமது செவிகளில் அடிக்கடி விழுகின்றது. இவர்கள் இம்மாதிரியாக கூறி மக்களைத் திருப்புவதானது சில விஷயங்களில் ஏதாவது நன்மையையே விளைவிக்கக் கூடியதாக விருந்தபோதிலும் கூட, அம்மத புஸ்தகங்களில் காணப்படும் சுலோகங்கள் எத்தகைய கொள்கையையும் ஆதரிப்பதற்காக வேண்டி, எதற்கும் மேற்கோள்களாகவும், பிரமாணங்களாகவும் எடுத்துக்காண்பிக்கமுடியுமென்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். பொதுவாகவே, நாம் எக்காரியத்தில் பிரவேசித்தாலும் நமது அறிவையே நாம் பிரதானமாகக் கொண்டு, அதன் வழியே செல்லவேண்டுமேயல்லாது நமது பாண்டித்தியத்தினாலேற்பட்ட யுக்தி, சாமர்த்தியம், தந்திரம் ஆகியவைகளின் சுழலில் அகப்பட்டுத்தததளிக்கக்கூடாது. நாம் ஏதாயினும் ஓர் சீர்திருத்தம் வழங்கவேண்டி நேரிட்டால், அச்சீர்திருத்தத்தால் மக்கள் அடையக்கூடிய பயனே நமக்குச் சீர்திருத்தத்தைவிடப் பதின்

மடங்கு பிரதானமானது. அவ்வாறில்லையாகில், அச்சீர்திருத்தத்தினாலேற்படும் மாறுதலானது நாம் ஒரு அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு, மற்றொரு அடிமைத்தனத்திற் காளாகிய தையே யொக்கும்.

மத புஸ்தகங்களெனக் கூறப்படுபவைகளில், பெரும்பான்மையான புஸ்தகங்கள் படிப்பதற்கு மிக்க சந்தோஷமுள்ளவைகளாகவும், அழகானவைகளாகவுமே விளங்குகின்றன. மேலும், இந்தியாவின் ஆதிகாலத்திய நாகரீகம் எத்தகைய நிலைமையிலிருந்த தென்பதைப்பற்றி நமக்கு நேரிடையாக எடுத்துக்காண்பிப்பதற்கு வேறு ஒருவித ஆதாரங்களுமில்லாமலிருப்பதினால், நாம் நமது பழைய நாகரீகத்தை ஒருவாறு நிர்ணயிப்பதற்கு இம்மத புஸ்தகங்களில் நமக்கு வேண்டிய அநேக ஆதாரங்கள் காணப்படுகின்றன. எண்ணிக்கையற்ற பரம்பரைகளின் அநுபோகங்களையும், எண்ணங்களையும், கொள்கைகளையும், தத்துவங்களையும் அவைகள் தங்களுக்குள்ளாக அடக்கிக்கொண்டிருப்பதுமல்லாமல், முன்காலத்திலிருந்த பெரியார்களின் உயர்ந்த கருத்துகளையும் அவைகள் வலியுறுத்துகின்றன. ஆதிகாலத்திய இக்களஞ்சியத்தை மக்கள் கற்று, நேரான வழிகளில் நடந்து கொள்ளுவதைப்பற்றி நாம் குறை கூற விரும்பவில்லை. ஆனால், விவேகமும், ஆராய்ச்சியுமின்றி மூடபக்தியுடனும், மூட நம்பிக்கையுடனும் அவைகளைத்தெய்வீகமுள்ளவைகளாகக் கருதுவதைத்தான் நாம் எதிர்த்துப் போராடுகின்றோம். மக்கள் இன்புற்று, ஆனந்தமடைவதற்கு விர்ஜில் என்பவரால் இயற்றப்பட்ட "ஈனயிட்" என்னும் நூல் மிக்க அழகாகத் தான் அமைக்கப் பட்டிருக்கின்றது.

ஆனால், இக்காரணத்தைக்கொண்டே, அப்புஸ்தகத்தை ஏதாயி னும் ஓர் இடத்தில் திடீரெனத் திறந்து, கண்களுக்கு முதலில் தென்படும் வாக்கியங்களை வாசித்து, அதன் மூலமாக அடிக்கடி மத்தியகாலங்களில் ஜோசியங்கள் கூறப்பட்டு வந்தது நியா யமான முறைமை யாகாது. இம்மாதிரியாகவேதான் இந்தியாவில் வசிப்பவர்களாலும் ஹிந்துமத சம்பந் தமான புஸ்தகங்களையும் கையாளப்பட்டு வரப்படுகின்றன. மதசம்பந்தமான எண்ணங்களை இப்புஸ்தகங்களினின்றும் அறவேயொழித்து நமது பகுத்தறிவினுதவியினால் இவை களை ஆராய்ச்சிசெய்வோமேயானால், அப்பொழுது இப்புஸ் தகங்களில் எவ்வளவுதான் அழகாக வர்ணித்துரைத்திருப்ப தாகக்காணப்படும் பழைய காலங்களுக்கு மக்களைத்திரும்பக் கொண்டுபோவதனாலேற்படும் நன்மைகளைக்காட்டிலும், மக் களுக்குப்பதின்மடங்கு ஊக்கமும், முயற்சியும், வீரமும், சுதந்தர உணர்ச்சியுமேற்படச்சாதனங்கள் உண்டாகும்.

மேலும், இதரவகுப்பினர்களால் பரிசுத்தமெனவும், மதசம்பந்தமானவைகளெனவும் கருதப்படும் புஸ்தகங்கள் யாவையும் எல்லா வகுப்பினர்களும் கற்று, அவைகளையும் ஆராய்ச்சிசெய்து, அவைகளில் காணப்படும் நன்மைகளை நாம் பின்பற்றுவதால் நமக்கு ஏதாயினும் அதனால் பிரயோஜன மேற்படுமா வென்பதையும் நாம்கவனித்தறிய வேண்டியது யோசிக்கத்தக்க விஷயமேயாகும். நாம் இம்முறையைப்பின் பற்றுவதனால் நமது அறிவும், ஆராய்ச்சியும் விருத்தியடைந்து வருவதுடன், நமது வகுப்பினர்களால் மதபுஸ்தகங்களென வும், அவைகள் பரிசுத்தம் வாய்ந்தவைகளெனவும் கருதப்

படும் எல்லாப்புஸ்தகங்களையும் இதர வகுப்பினர்களும், மதஸ்தர்களும்கற்று, அவைகளை ஆராய்ச்சிசெய்தால் நமது மனதும் அப்பொழுது அவர்களுடைய செய்கைகளினால் பாதிக்கப் பட்டு, புண்படாதென்பது உறுதியேயாகும்.

——o——

# பகுத்தறிவும், மதமும்.

——:0:——

"அறிவுக்கு முதல் இடத்தைக்கொடுப்பதும, அனுபோகத்திலும், அப்பியாசத்திலும் நிரூபித்துக்காட்டக்கூடிய தத்துவஞானத்தையும், நீதிசாஸ்திரத்தையும் நிலைநாட்டுவதும், கொடுங்கோன்மையான கொள்கைகளையும், பிரமாணங்களையும் எதிர்த்துப்போராடுவதும், சுயேச்சையுடன் இருக்கவேண்டுமென்னும் மனோபாவனையைக் கொண்டிருப்பதும்" ஆகிய இந்த அறிவே, பகுத்தறிவு என்று கூறப்பட்டு வருகின்றது.

இத்தகையமொழிகளால்தான் பகுத்தறிவாளர்களின்இயக்கமானது, தன்னுடைய கொள்கையை உலகினருக்கு எடுத்துரைத்து, அதை மேன்மேலும் விருத்திசெய்ய முயற்சி செய்கிறது. உலகிலுள்ள எல்லாமக்களும் இக்கொள்கையையே பின்பற்றுவார்களாகில், அப்பொழுது மனிதசமூகமானது அதிசீக்கிரமாகவே முன்னேற்றமடையக்கூடும்; மக்கள் இப்பொழுதனுபவித்துவரும் இன்பங்கள் இன்னும் பதின்மடங்கதிகமாக அப்பொழுது விருத்தியாகக்கூடும்; மக்கள் இப்பொழுதனுபவித்துவரும் துன்பங்களும், நஷ்டங்களும், பீடைகளும் அப்பொழுது அடியோடு மறைந்துவிடவும் கூடும் என்று பகுத்தறிவு இயக்கம் நம்புகின்றது. ஒரு மனிதன் இத்தகைய மனப்பான்மையை யடைவானேயானால், பொதுவாகவே அவன் அப்பொழுது தன்னைச்சூழ்ந்துகொண்டு நிற்பவைகளுக்கேற்றவாறு தன்னைத்தகுதியுள்ளவனாகச் செய்துகொள்ள முடியும். மேலும், அவன்தான் மனிதஜென்மம் எடுத்ததின் பிரயோசனத்

தையறிந்து, உலகிலுள்ள மக்கள் யாவரும் தன்னுடைய உய்ரிய கொள்கையினால் சுகமடைந்து, இன்புற்று வாழ்வதன்பொருட்டுத் தனது சக்திக்கியன்ற வரையிலும் உதவியும் செய்தவனாவான்.

பகுத்தறிவென்பது எவ்விஷயத்தையும் ஆராய்ந்து அறிந்து கொள்வதேயாகும். அதாவது மனிதனுக்கேற்பட்டுள்ள அறிவை அவன் வீணாக்காமல் அவ்வறிவை அவனால் எவ்வளவுக்கெவ்வளவு உபயோகப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு உபயோகப்படுத்துவதேயாகும். எத்தகைய சிக்கலான பிரச்சினையாக இருந்தபோதிலும்கூட பகுத்தறிவாளி என்பவன் தனது சக்திக்கியன்றவரையிலும் தனது அறிவை உபயோகித்து அப்பிரச்சினையை வெற்றிகரமாக முடிவு செய்யவே முயற்சி செய்வான். ஒருசமயம் அவனால் ஏதாவதொரு பிரச்சினையை முடிவுசெய்ய முடியாது போனபோதிலுங்கூட தன்னுடைய அறிவின் ஆராய்ச்சிக்கு உட்படாத, அதாவது நிற்காத எத்தகைய முடிவையும் அவன் ஏற்றுக்கொள்ளவோ அல்லது அங்கீகரிக்கவோ தயாராகவும் இருக்கமாட்டான். ஆனால் அவ்வித சந்தர்ப்பத்தில் அவன் தன்னுடைய அறியாமையை ஒத்துக்கொண்டு திருப்தியுடன் இருக்கக்கூடியவனாகவுமிருக்கின்றான். அவனுக்கு மேலும் ஓர்வித திடமான நம்பிக்கையுமுண்டு. அதாவது "நாளாவட்டத்தில் மனிதனுடைய அறிவும் ஆராய்ச்சியும் விருத்தியாகிக்கொண்டே வருவதன் மூலம், எத்தகைய சிக்கலான பிரச்சினையையும் இன்று இல்லாவிட்டாலும் நாளையாகிலும் வெற்றிகரமான ஓர் முடிவுக்குக்கொண்டுவந்து விடலாம்" என்னும் திடமான நம்பிக்

கையேயாகும். ஆகையால்தான் அவன் "இதுவரையிலும் செல்லலாம், இதற்குமேல் நீ செல்லக்கூடாது" என்று எத் தகைய விஷயத்திலும் கட்டுப்பாடு செய்வதற்கு மறுத்துவிடு கின்றான்; மேலும் சந்தேகத்தையோ அல்லது பேதத்தை யோ விளைவிக்கக்கூடிய எத்தகைய கட்டளைக்கும் அல்லது நீதிக்கும் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்வதற்குச்சம்ம திப்பதில்லை. அவ்விஷயத்தில் அவன் தன்னுடைய முழு பலத்தோடும் மறுத்துக்கொண்டே வருகின்றான். பகுத்தறி வுக்குப் பொருந்தாத எத்தகைய கட்டளையாவது அல்லது நீதியாவது அறிவு சம்மந்தமான துறையிலாவது அல்லது சமூக சம்பந்தமான துறையிலாவது காணப்பட்டபோதிலும் கூட அவனுக்கு அதைப்பற்றிய அக்கரையோ அல்லது கவலை யோ சிறிதும் கிடையாது.

எப்படியிருந்தபோதிலும் தேசத்தில் குழப்பத்தை விளை விக்கும் ஒரு தேசீய புரட்சிக்காரனும், பகுத்தறிவாளியாகிய ஒருவனும் ஒன்றுதான் எனத்தவறுதலாகக் கருதிக்கொள்ளக் கூடாது. தன்னுடைய அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் அகப் படக்கூடிய உண்மைகள் நடைமுறையிலும், அனுஷ்டானத்தி லும் ஒன்றுக்கொன்று விரோதமின்றிப் பொருத்தமாயிருக் கின்றதா வென்பதையறிந்து அவைகளைத் தற்காலிக முடிவு களெனக்கருதியே ஒரு பகுத்தறிவாளி அவைகளை ஒப்புக் கொண்டு அங்கீகாரம் செய்கின்றான். மேலும் நாளாவட்டத் தில் வேறுவிதமான முடிவுகள் அவைகளுக்கேற்பட்டால், அதாவது தான் முதலில் செய்த முடிவு தப்பிதமெனவும் புதியதாக இப்பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கும் இந்த உண்

மைதான் அவைகளுக்குப்பொருந்துமென்பதையும் அறிவாஞ ஞல், உடனே அவன் தன்னுடைய முதல்முடிவை அவனு டைய முழுமனத்தோடும் மாற்றிக்கொள்ளவும் தயாராக இரு க்கின்றுன். இதுவுமல்லாமல் அவன் தன்னுலியன்ற வரையி லும் சந்தர்ப்பங்கள் வாய்க்கும் பொழுதெல்லாம் பல்வேறு புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்கும்படியான பொறுப்பையும் வெளிப்படையாகக் காண்பித்துக்கொள்ளாமலே ஏற்றுக் கொள்ளுகிறுன். எப்படியிருந்தபோதிலும் அவன்தான் ஆராய்ச்சி செய்துகொண்டு செல்லும் துறையில் மனோரம்மிய மற்ற சிலபுதிய உண்மைகள் இடையேதோன்றுமாஞல் அத் தகைய விஷயங்களால் அவன் பாதிக்கப்படுவதுமில்லை; அத ஞல் அவன் தன்னுடைய ஆராய்ச்சியை விட்டு விடுவதுமில்லை. மேலும் ஜனசமூகத்தில் அவனும் ஓர் அங்கத்தினஞக இருப்ப தால் அவன் தன்னுடைய அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் முரண் படாத பழக்க வழக்கங்களையும் செய்கைகளையும் ஏற்று அங்கீ கரித்துக்கொள்ளுகின்றுன். ஏதாகிலும் ஓர் குறித்த சம்ப வம் சில நிபந்தனைகளாலும் ஆராய்ச்சியாலும் தான் ஆதிகால த்தில் பெரியோர்களால் ஆலோசித்து ஏற்படுத்தப்பட்டதென உரைத்தால் அவன் அச்சம்பவத்திற்குரிய காரணங்களை மிக்க உருக்கத்துடனும் இரக்கத்துடனுமே ஆராய்ச்சி செய்து பார் க்கவும் தயாராகவிருக்கின்றுன். தன்னுடைய எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிப்பதற்காக அவன் ஆராய்ச்சி செய்து கொண்டுவரும் அடிப்படையான முடிவுகள் யாவும் மனித சமூகத்தின் எல்லையற்ற சரித்திரத்தின் ஓர் பகுதிதான் என் பதையும் அவன் உணர்ந்துகொள்ளுகின்றுன். ஆஞல் அவன் அவ்வாறு கருதிய போதிலுங்கூட மனித சமூகத்தின் சரித்

திர சம்பந்தமான புஸ்தகமானது எப்பொழுதுமே எக்காலத்திலுமே முடிவுபெற்றுவிடாதெனவும், அதற்குமாறாக அது அடிக்கடி பெரிதாகிக்கொண்டேதான் வருகின்றதெனவும் அவன் உறுதியாகவே நம்புகின்றான். மனித சமூகத்தின் சரித்திர புஸ்தகத்திலுள்ள சில பாகங்களில் முற்றுபெற்றது என்னும் வார்த்தை எழுதப்பட்டிருப்பதாக எவன் ஒருவன் சொல்லிப்போராடுகின்றானோ அவனைத்தான் பகுத்தறிவுக்காரன் எதிர்த்துச்சண்டை செய்கின்றான். ஆகையினாலே இத்தகைய சந்தர்ப்பங்களில் பகுத்தறிவாளியென்பவன் தன்னுடைய அறிவின் உதவியைக்கொண்டு மூடப்பட்டிருப்பதாகவோ அல்லது முற்றுப்பெற்று விட்டதாகவோ கூறப்பட்டிருக்கும் பாகங்களை ஆராய்ச்சி செய்து வியாக்கியானம் செய்ய வேண்டியதேதான் அவனுடைய இன்றியமையாத கடமையாகும்.

மக்கள் தங்களுடைய சமூக வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயங்களிலும் பகுத்தறிவை உபயோகித்து, அதனுடைய கொள்கையையே பின்பற்றுவதை நாம்பார்க்கின்றோம். வேதசாஸ்திரத்திற்குரிய ஆண்மையானது மக்களை முழுவதுமாயினும், அல்லது சிறிதாயினும் கால்விலங்கைப்போன்று பிணைத்துக் கொண்டிருப்பதனால்தான் அதைமுதலில் வெட்டித்தகர்த்தெறியவேண்டியது இன்றியமையாததாகின்றது. இவ்விடத்தில் "மதத்திற்குரிய" என்னும் வார்த்தைக்குப் பதிலாக "வேதசாஸ்திரத்திற்குரிய" என்னும் வார்த்தையே சிலாக்கியமானதென நினைத்து அதை உபயோகப்படுத்தியிருக்கின்றோம். ஏனெனில், "மதம்" என்னும் பதத்திற்கு பல்வேறு மனிதர்களாலும், பல்வேறு பொருள்கள் கூறப்படுகின்றன. மேலும்

"மதம்" என்னும் பதத்திற்குத்திடமான பொருள் இன்னது தான் எனப்பொதுவாகவே இன்னும் அங்கீகரிக்கப்படவு மில்லை—ஒத்துக்கொள்ளப்படவுமில்லை. மதத்திற்காக வக்காலத்து வாங்கித்திரியுமொருவர் பகுத்தறிவாளியொருவருடன் வார்த்தையாட நேர்ந்தால் அப்பொழுது அவருடைய மதமானது மெதுவாகச்சுத்தம்பண்ணப்பட்டுக் கடைசியாக மக்களின் எதிர்கால வாழ்க்கையின் மீது வீணான, உபயோகமற்ற அவாவையும், நாட்டத்தையும் உற்பத்திசெய்து விடுவதையே நாம் பொதுவாகப்பார்க்கின்றோம். இவர் இவ்வாறு மக்களின் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் எட்டாத ஒரு வாழ்க்கையைப் பற்றி மிக்க விஸ்தாரமாகவும், ஆடம்பரமாகவும், அழகாகவும் வர்ணித்துரைப்பதுமல்லாமல் தர்மசாஸ்திரத்திற்கடுத்த நீதிகளையும் பழக்க வழக்கங்களையும் மிக்க சவிஸ்தாரமாகவுமுச்சரிக்கின்றார். மேலும், மதத்திற்காக வக்காலத்து வாங்கினவருடைய மனத்தில் ஜெபம்செய்வதனாலேற்படக்கூடிய காரிய சித்தியும், அர்த்தம் தெரியாது இயந்திரம்போலச்செய்யப் பட்டுவரும் மதச்சடங்குகளினால் ஏற்படக்கூடிய நலமும், சர்வவல்லமையும் பொருந்தியுள்ளதாகக்கருதப்படும் ஒரு தீர்க்கதரிசியின் மீதோ, அல்லது ஒரு இரக்ஷகரின் மீதோ உள்ள ஒருவித நம்பிக்கையும், மேலும் அவ்வித தீர்க்கதரிசியோ, அல்லது இரக்ஷகரோ, தங்களுடைய நித்திய வாழ்க்கையில் இயற்கையாக நேரிடும் எல்லாவித சம்பவங்களிலுமிருந்து தங்களைத்தடுத்து ஆட்கொள்ளுவார் என்ற எண்ணமும், இன்னும் இதைப்போன்ற அநேக கோட்பாடுகளும் நன்றாகப் பதிந்திருப்பதையும் காணலாம்.

பகுத்தறிவாளியோ இவைகளுக்குமாறாக, மக்கள் தங்க

ளுடைய வாழ்க்கையை எவ்வாறு சுகமாக நடத்தமுடியுமென் பதிலேயேகண்ணுங்கருத்துமாயிருந்து வருவதுடன், என்ன செய்தால் அவ்வித வாழ்க்கை தொடர்ந்தாற்போல் நடை பெற முடியுமென்பதில் அவாவுள்ளவனுகி அதற்கான முறை களில் ஈடுபடுகின்றான். மேலும் எத்தகைய காரியங்களால் மக்கள் இடைவிடாது முன்னேறிச்செல்ல முடியுமென யோ சித்து அதற்கான வகைகளில் தன்னுடைய முழுமனத்தோ டும் முழுபலத்தோடும் பாடுபடுகின்றான். மக்களின் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி அறிந்து கொள்வதில் ஓர் அந்து அல் லது எல்லை இருக்கின்றதாகப்பகுத்தறிவாளியொருவன் அறி ந்து, அதைப்பின்பற்றி ஆராய்ச்சி செய்வதில் ஒருவித பிரயோ ஜனமும் மக்களுக்கு ஏற்படாதெனத்தெரிந்து கொள்வதனால் தான் அவன் அத்தகைய காரியங்களில் தன்னுடைய மனதை செலுத்தாமல் மக்களின் அறிவுக்கும், புத்திக்கும் எட்டக் கூடிய விஷயங்களிலேயே தன்னுடைய முழுபலத்தோடும், வல்லமையோடும் ஈடுபடுகின்றதற்குத் தயாராக இருக்கின்றான் மக்களின் சன்மார்க்கங்களுக்குரிய நீதிகளை அவன் குரங்குப் பிடியாய் பிடித்துக்கொள்ளுகின்றான். ஏனெனில் அவன் அத்தகைய நீதிகள் மக்களின் இயற்கைக் குணத்தை யனுசரி த்து நிறுவப்பட்டதாகக் கருதுகின்றானே யல்லாது மற்றபடி அவைகள் யாரோ ஒருவருடைய கட்டளையென்றாவது அல் லது வேத புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கிறபடியால் அவை களைத்தழுவியேதான் மக்கள் நடக்கவேண்டுமென்னும் எண் ணத்தினுலாவது அவன் அவ்வாறு கருதுவதில்லை. மேலும் அவன் மக்களின் சன்மார்க்க நீதிகளையும், ஒழுக்கங்களையும் அவரவர்களுடைய விதியெனக்கருதாமல் அவர்களின் முன்

னேற்றத்திற்கான் துறைகளில் ஈடுபட்டு அவைகளை அனுஷ்டானத்திலும் நடை முறையிலும் கொண்டுவருவதற்காகவும் பாடுபடுகின்றான். ஆதிகாலத்திய கொள்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் அடிமைப்பட்டிருப்பவனைவிட பகுத்தறிவாளியினால் உலகத்திற்கு எண்ணிறந்த நன்மைகளேற்படுகின்றன.

தற்கால விஞ்ஞான சாஸ்திரங்களின் அறிவானது உண்மையாகவே, வேதங்களின் கோட்பாடுகளுக்கு விரோதமாகவே இருக்கின்றது. வேதத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், வேதக்கோள்கைகளையுடையவர்களும் எக்காலத்திலும், எல்லாத்தேசங்களிலும் விஞ்ஞான சாஸ்திரங்களின் அறிவைக் கொலை செய்து, தங்களுடைய ஆதிக்கத்தையே நிலை நாட்ட முயன்றிருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் தங்களுடைய இழிசெய்கைகளில் வெற்றியடைந்தார்களில்லை, அதற்குமாறாக, அவர்கள் எப்பொழுதும் தோற்கடிக்கப்பட்டு, பின்னேக்கியே செல்லும்படியாக நேரிட்டது. இவ்வாறு இவர்கள் தோற்கடிக்கப்பட்டதினால் சில சந்தர்ப்பங்களில் இவர்கள் தங்களுடைய அறிவற்ற செய்கைகளைக்குறித்தும், தங்களுடைய மூதாதைகளின் செய்கைகளைக்குறித்தும் வருந்தும்படியாகவும், அவைகளுக்காக வெட்கமடையும்படியாகவும் நேர்ந்தது. மேலும், அவர்களுக்கு எவ்வளவுதான் பிரியமில்லாதிருந்த போதிலும்கூட பெரும்பாலான விஷயங்களில் அவர்கள் தற்கால நிலைமையையே ஒத்துக்கொள்ளும்படியாகவும் நேர்ந்தது. ஆனால், புதிதாக ஏதாகிலும் ஒன்று நேர்ந்தால் அதற்கும் அவர்கள் போர் தொடுத்து, தங்களுடைய கொள்கையை நிலைநாட்டப் பின்வாங்குவதுமில்லை. பாமர மக்களின்மீதுள்ள

அவர்களுடைய ஆஸ்திக்கமானது இன்னும் வலிமையுள்ளதாகவும், பலம் பொருந்தியதாகவுமேதான் காணப்படுகின்றது. மேலும், அவர்கள் தங்களுடைய ஆஸ்திக்கத்தை சாஸ்வதமாகவும், நீடித்தும் நிற்கக்கூடிய துறைகளில் வெகு மும்மரமாகவே எப்பொழுதும், எல்லாவித சந்தர்ப்பங்களிலும் பாடுபட்டும் வருகின்றனர். விஞ்ஞான சாஸ்திரத்தின் அறிவைக்கொண்டும், உதவியைக்கொண்டும் நாம் ஏதாவதொரு பிரச்சினையைத் தற்காலிகமாகவும், வெற்றிகரமாகவும், முடிவடையச்செய்ய உண்மையாகவே தவறிவிடுவோமேயானால் அப்பொழுது அவர்கள் ஏதாகிலும் ஒன்றைக்கூறி அவ்விடத்தில் பொருந்த வைப்பதற்குக் கொஞ்சமும் பின்னடையார்கள். மேலும், அவர்களுடைய கூற்று தர்க்கரீதிக்கு முரண்பாடுடையதாகயிருந்தபோதிலும் சரியே அல்லது பொருத்தமென்பது சிறிதளவேனுமில்லாதிருந்த போதிலும் சரியே, அதைப்பற்றி அவர்களுக்குக் கவலையோ, அல்லது அக்கரையோ கிடையாது.

தத்துவ சாஸ்திரத்தின் கடைசியான கேள்விகளுக்கு—அதாவது ‘எப்படி?’ ‘ஏன்?’ ‘எங்கே?’ என்பவைகளுக்கு—பகுத்தறிவாளியினால் பதில் அளிக்க முடியாவிடில், அவன் தனது அறியாமையைத் திருப்தியுடன் ஒத்துக்கொள்கிறான். மக்களின் ஜீவிய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பலாபலன்களின்மீது அவன் தனது முழு கவனத்தையும் செலுத்தி, மக்களை இன்புறச்செய்ய வேண்டுமெனக் கருதுகின்றானேயல்லாமல், தனது அறிவுக்கும், தனது யோசனைக்கும் எட்டாத, ஒருவராலும் அறிந்துகொள்ள முடியாத விஷயங்களில் அவன் தனது மனத்தைச் செலுத்தி, யோசனை செய்து மக்களை ஏமாற்றமடையும்படிச் செய்ய அவன் விரும்புவதே இல்லை.

ஆனால் இவைகளுக்குமாறாக மதக்கோட்பாடுகளைப் பின்பற்று பவனும், மதவைராக்கியமுள்ளவனும் அவைகளைப்பற்றியெண் ணிறந்த கட்டுக்கதைகளை மக்களுக்கு எடுத்துரைத்து, அவர் களின் மனத்தை அவ்வித வாழ்க்கையில் ஈடுபடும் படியாகவும் நாட்டமடையும்படியாகவும் செய்வதில் கொஞ்சமும் அஞ்சுவ தே கிடையாது. ஆனால், அவர்களால் உரைக்கப்படும் கூற் றுகளை நாம் இயற்கையுடனும், நமது வாழ்க்கையில் தினந் தோறும் நடைபெற்றுவரும் சம்பவங்களினோடும் ஒத்திட்டுப் பார்ப்போமானால், அப்பொழுதுதான் அவர்களுடைய கூற்றுகளனைத்தும் அறிவுக்குப் பொருத்தமற்றிருப்பதையும், ஆராய்ச்சிக்கு நிற்காதிருத்தலையும் அறிந்து கொள்ளலாம். மேலும், உலகம் என்பது எப்பொழுது, யாரால் உண்டாக் கப்பட்டதென்பதைப்பற்றி திட்டமாயுரைக்க முடியாத நிலை மையிலிருக்கும் பகுத்தறிவாளியொருவனை அவர்கள் காண நேரிட்டால் அவன்மீது அவர்கள் அருவருப்படைந்து, அவ னைவெறுத்து ஒதுக்கிக்கொண்டேதான் வருகின்றார்கள்.

உலகமெங்கும் ஒரு சக்தியிருப்பதாக எண்ணும் ஒரு மத சித்தாந்தமும் நமக்குள் உண்டு. இது ஒரு தனிப்பட்ட மனிதனின் உள் உணர்ச்சி என்பது ஒருபக்கமிருந்த போதி லும் இதைக்கொண்டு ஒரு படைப்பாளன் இருக்கின்றான் எனக் கொள்வது அவசியமில்லை. ஒரு படைப்பாளன் இருக் கின்றான் என எண்ணி மனோ சிருஷ்டி செய்வது சுலபம். ஆனால் அதை உண்மை யென்று உறுதிப்படுத்துவதற்குச் சாதாரண சக்தியுள்ள மனிதர்களால் முடியாது. ஒரு "கிரா மாபோன்" இயந்திரத்தைப் பார்க்கும் பொழுது அது அநேக கருவிகளைக் கொண்டு, சில மனிதரால் செய்யப்பட்டிருக்கக்

கூடும் என்று சொல்லலாம். இந்தக்கருவிகளைப் பார்த்து அவைகளைச் செய்த இரும்புக் கைத்தொழிலாளியைப்பற்றி நினைக்கலாம். அந்தக் கைத்தொழிலாளியைப்பற்றி நினைப்பதன் மூலம் சுரங்கங்களிலிருந்து இரும்பு எடுக்கப்படுவதை ஞாபகத்திற்கு கொண்டுவரலாம். பூமியிலிருந்து சூரியனுக்கும் செல்லலாம். விஞ்ஞான ஆராய்ச்சி இன்னும் இதற்கு மேலும் செல்லும். இதன் வளர்ச்சி இலகுவில் முடிவு பெறாததாகும். ஒரு ஆஸ்தீகன் "கடவுளை யார் உண்டாக்கியது?" என்ற கேள்வியைக் குறும்புத்தனமானதாகவும் தூஷணையானதாகவும் கருதுகிறான். ஆனால் உண்மையில் இதற்குச் சரியான விடை கிடைப்பதே இல்லை. பகுத்தறிவாளர்களது நாஸ்தீக வாதம் காரணகாரியங்களறிந்த வாதத்திற்கு பொருத்தமாயிருக்கிறது.

சர்வ வல்லமையும் தயாளமும் நிறைந்த ஒரு கடவுள், தன்னால் படைக்கப்பட்ட மக்களின் நிகழ்காலத்தையும் வாழ்க்கையின் போக்கையும் அறிந்தவராகவே இருத்தல் வேண்டும். அவர் இவ்வாறு அறிந்திருப்பாரானால் உலகமெங்கும் துன்பமும் கொடுமையும் நிறைந்திருப்பானேன்? ஒருக்கால் அவர் சர்வ வல்லமையற்றவராகவோ அன்றி ஜீவகாருண்யமற்றவராகவோ தான் இருக்க வேண்டும். அல்லது கடவுளோடு ஒரு "சைத்தா" னும் இருப்பதாகவும் அதுதான் இந்தக்கொடுமைகளுக்குக் காரணம் என்றும் சொல்லித்தப்பித்துக் கொள்ள வழி தேடலாம். அப்படியானல், "அந்தச் சைத்தானைப் படைத்தது யார்?" "அந்தச் சைததானின் மனதைக் கடவுள் மாற்ற முடியாதா?" "அந்தச் சைத்தானைக் கடவுள் கொல்ல முடியாதா?" என்ற இவை போன்ற கேள்விகள் எழுகின்றன.

ஆகையால் இவையெல்லாம் மனக்குழப்பங்களே யன்றி வேறில்லை. இவைகளைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது தூர விலக்குவதே சிறப்புடைத்தாம்.

இது போன்றே ஹிந்து மதத்திற்கும் மற்ற மதங்களுக்கும் அஸ்திவாரங்களாகிய "கர்மம்" என்பதைப்பற்றி வாதிக்கும் காரணங்களுமாகும். இந்த "கர்மம்" என்ற சொல்லைக் கொண்டே உலகில் துன்பமும் துக்கமும் குடி கொண்டிருப்பதற்குக் காரணம் காட்டிப் பலர் வாதிக்கின்றனர். இப்போதைய வாழ்க்கையில் அனுபவிக்கும் கஷ்டத்திற்கும், துன்பத்திற்கும் முன் ஜென்மத்தில் செய்த "கர்மவினை" ப்பயன்தான் காரணம் என்று சொல்லப்படுமானால் "அந்த ஜென்மத்தில் நான் அவ்வாறு நடக்க ஏன் தூண்டப்பட்டேன்?" என்ற நியாயமான ஒரு கேள்வி எழுகின்றது. அதற்கு விடையாக அதற்கு முந்திய பிறவிகளைச் சொல்லி மழுப்புகிறார்கள். சாதாரணமாக வழங்குவது போன்ற 8400000 ஜீவராசிகளின் வாழ்க்கையையே எடுத்துக்கொண்ட போதிலும் இவர்களின் ஆதி உற்பவத்தில் என்ன நடந்தது? ஏன் நடந்தது? துன்பமும் கஷ்டமும் தொடர்ந்து வருவதற்குக் காரணமாயிருந்தவை எவை? என்ற இவைபோன்ற ஐயங்கள் எழுகின்றன.

இவைகளுக் கெல்லாம் ஒத்துக் கொள்ளக் கூடிய விடை ஒன்றுதானிருக்க முடியும், அவ்விடை "மனித அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாதவை" என்னும் விடையாகத்தானிருக்கும்.

—o—

# மதபுஸ்தகங்களிலுள்ள குற்றங்கள்.

——:0:——

இந்துமதப் புஸ்தகங்கள் இந்துக்களால் தெய்வீகத்தன்மை வாய்ந்ததெனவும், மகிமை வாய்ந்ததெனவும், சாக்ஷாத் ஈஸ்வரனுடைய அனுக்கிரகம் பெற்றவர்களாலும், அவரால் ஓதுவிக்கப்பட்ட புண்ணிய புருஷர்களாலுமே எழுதப்பட்டதெனவும் கருதப்பட்டு வருகின்றது. நாம் அப் புஸ்தகங்களுக்கு ஓர்வித மதிப்பையோ, அல்லது பெருமையையோ அளியாமல், சாதாரணமாகக் காணப்படும் புஸ்தகங்களை எவ்வாறு கற்று, அவைகளை ஆராய்ச்சி செய்கின்றோமோ, அவ்வாறே மதப் புஸ்தகங்களையும் நாம் சுலபமாகவே கற்று, அவைகளை ஆராய்ச்சி செய்யக்கூடிய சாதனங்கள் நமக்கேற்படவேண்டும். அப்பொழுதுதான் அப்புஸ்தகங்களில் காணப்படும் கவிகளினழகைக் கண்டு நாம் களிப்படைவதற்கும், அவைகளில் கூறப்பட்டிருக்கும் நீதிகளைத் தழுவி நடப்பதற்கும், அவைகள் போதிக்கும் உண்மைகளைப் போற்றிப்புகழ்வதற்கும் முடியும். அவ்வாறேதான், அதாவது மதப் புஸ்தகங்களை நாம் ஆராய்ச்சி செய்ய அனுமதிக்கப்படுவோமே யானால், அப்பொழுதுதான் அப் புஸ்தகங்களில் காணப்படும் ஆபாசமான கதைகளையும், அநாகரீகமான செய்கைகளையும், அசம்பாவிதப் பழக்கவழக்கங்களையும் நாம் கண்டிக்கலாம். மானிடர்கள் நாகரீக வாழ்க்கையின்றி மிருகப் பிராயமான வாழ்க்கையிலீடுபட்டிருக்கும் காலத்தில் காட்டுமிராண்டிகளெனக் கருதப்பட்ட சிலகயவர்களாலும், சுயநலக் கூட்டத்தார்களாலுமேதான் அவைகள் எழுதப்பட்டதென்னவும் தைரியமாக எடுத்துரைக்க முடி-

யும். ஆனால், இத்தகைய சாதனங்களொன்றும் மக்களுக்கு அளிக்கப்படாமலிருந்து வருகின்றது.

அப்புஸ்தகங்கள் கடவுள் அருள்பெற்றவர்களாலும், கடவுள் தன்மை வாய்ந்தவர்களாலுமேதான் எழுதப்பட்டவைகள், கடவுளின் தன்மையையும், கடவுள் சக்தியையும், கடவுள் கட்டளைகளையுமேதான் அவைகள் தம்முள் அடக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகள் சம்பூர்ணமானவைகள், பரிசுத்தம் வாய்ந்தவைகள்; அவைகளில் கூறப்பட்டிருப்பவைகள் யாவும் உண்மையைத் தவிர்த்துப் பிறிதொன்றுமில்லை. மக்களின் சன்மார்க்க முறைகளுக்கு அவைகள் அஸ்திவாரமாக இருந்துவருவதுடன், மத சம்பந்தமான உண்மைகளுக்கு மூலபீடமாகவும் இருந்துவருகின்றன; மக்களின் வாழ்க்கைக்கும், முயற்சிகளுக்கும், காரியங்களுக்கும் அவைகள்தான் பெரும் உதவி அளித்துக்கொண்டு வருகின்றன; பூலோக வாழ்க்கையில் மக்கள் ஆசைப்பட்டு, அகப்பட்டு, சிக்குண்டு, தத்தளியாது, பரலோக கைங்கரியங்களில் ஈடுபட்டு, மோட்சலோகத்தையடைவதற்கு ஓர் வழிகாட்டியாகவும், ஊன்று கோலாகவும் அவைகள் இருந்துவருகின்றன என்று நாம் போதிக்கப்பட்டுவருகின்றோம். நாம் நமது நடைமுறைகளிலும்; உலகப் பழக்க வழக்கங்களிலும் நாள் தவராது பார்த்துக் கவனித்துக்கொண்டு வரக்கூடிய விஷயங்களுக்கும், மேலே கூறப்பட்டிருக்கும் கூற்றுகளுக்கும் கொஞ்சமும் சம்பந்தமென்பதின்றி அவைகள் முற்றிலும் ஒன்றுக்கொன்று அசம்பாவிதங்களாகவும் காணப்படுகின்றன. ஆகையால்தான் நடுநிலைமை வழுவாமல் ஆராய்ச்சி செய்பவர்களையும், அறிவுடையவர்களை

யும் அவைகளைத் தாக்கி நிர்மூலமாக்க வேண்டுமென்பதற்கு யுத்தகோலம் பூணும்படி வற்புறுத்துகின்றது.

சைவர்கள் வைஷ்ணவ மத சம்பந்தமான புஸ்தகங்களை வாசிக்கும்போதும் அல்லது மகம்மதிய மத சம்பந்தமான புஸ்தகமாகிய குர்ஆனை வாசிக்குங்காலையிலும், அல்லது கிறிஸ்துமத சம்பந்தமான புஸ்தகமாகிய விவிலிய நூலை (பைபிளை) வாசிக்க நேர்ந்தாலும் அப்பொழுது அவர்கள், அப்புஸ்தகங்களில் காணப்படும் விஷயங்கள்யாவும், அசம்பாவிதமானவைகள், ஒருகாலத்திலும் நடைபெற்றிராதவை; அவ்வளவும் சுத்தப்பொய்யேயன்றி சிறிதேனும் உண்மையென்பது அப்புஸ்தகங்களில் மருந்துக்காகத் தேடினும் அகப்படாது; ஏனைய மதங்களைத்தூற்றவும், தங்கள் தங்களுடைய மதத்தைப்புகழ்ந்துரைக்கவுமே அவைகள் எழுதப்பட்டிருக்கின்றன; காலப்போக்கிற்காக மட்டிலும் அவைகளைப் படிக்கலாமேயல்லாது, மற்றபடி அப்புஸ்தகங்களைக் கற்பதால் பிரயோஜனமொன்றுமில்லை என்று கூறுகின்றார்கள். இவ்வாறேதான் வைஷ்ணவர்களும் முகமதியர்களும், கிறிஸ்துவர்களும் தங்கள் தங்களுடைய மத சம்பந்தமான புஸ்தகங்களைத் தவிர்த்து ஏனைய மத சம்பந்தமான புஸ்தகங்களைப்பற்றிக் குறைகூறுகின்றார்கள். ஆனால் இவர்கள் யாவரும் ஒரே குரலுடன் தத்தம் மத சம்பந்தமான புஸ்தகங்களில் காணப்படுபவைகளைமட்டும் யாதொருவித சங்கோசமோ, சந்தேகமோ ஆக்ஷேபனையோ அல்லது கண்டனமோயின்றி அவைகளை அப்படியே அங்கீகாரம் செய்து ஒத்துக்கொள்ளுவதுடன், அப்புஸ்தகங்களில் கூறப்பட்டிருப்பவைகளனைத்தும் உண்மையெனவும் கூறி வாதாடுகின்றனர். இவர்களுடைய அறிவுக்கு இதரமத

புஸ்தகங்களில் காணப்படும் ஊழல்களும், குற்றங்களும், தோஷங்களும் அகப்படுகின்றனவேயல்லாது, தங்கள் தங்களுடைய மதப் புஸ்தகங்களில் காணப்படும் ஊழல்களும், குற்றங்களும், தோஷங்களும், அசம்பாவிதங்களும் அகப்படுவதேயில்லாதிருப்பதுடன், அவைகளில் கூறப்பட்டிருப்பவைகள் யாவும் உண்மையெனவும் கருதிவருகின்றனர்.

நாம் யாவரும் இயற்கையாகவே கற்பனைக் கதைகளிலும் கட்டுக் கதைகளிலும் பரவசமடைகின்றோம். அவைகளின் வர்ணிப்புகளைக்கண்டு மயங்கிவிடுகின்றோம். அவைகளைப் படிப்பதற்கு எண்ணமும், ஆசையும் கொள்ளுகின்றோம். ஆதிகாலத்திய பழங் கதைகளை நாம் படிக்குந்தோறும்; மக்களைச் சதாகாலமும் வாட்டிக்கொண்டுவரும் கேள்விகளாகிய 'நாம் எங்கிருந்து வருகின்றோம். 'நாம் எங்கு செல்கின்றோம்' என்பவைகளைக் குறித்து பல்வேறு மகான்களும், மகரிஷிகளும் ஆராய்ந்ததாகவும், இக்கேள்விகளுக்கு அவர்கள் விடை தெரிந்துகொள்ளுவதற்காக வேண்டித் தங்களுடைய ஆயுட்கால முழுவதையும் செலவிட்டதாகவும், அக்காலங்களில் அவர்கள் தங்களுடைய சுகத்தைக் கவனியாது, பாமர மக்களின் இன்பத்திற்கும், சுகத்திற்குமாக வேண்டி அநேக கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும், இடையூறுகளுக்கும் ஆளாகியதாகவும் நாம் அறிகின்றோம். ஆனால் இவர்களுடைய இம்மாதிரியான தியாகங்களினால் மக்களுக்குச் சாஸ்வதமான பிரயோஜனம் ஏதாயினும்உண்டாளென்று கவனிப்போமானால் அப்பொழுது எல்லாம் குதிரைக்கொம்பாகவே முடிந்திருப்பதையே நாம் பார்க்கின்றோம்.

இவர்களால், மக்களின் நன்மையைக் கருதி எழுதிவைத்திருப்பதாகக் கூறப்படும் கற்பனைக்கதைகள் யாவும் ஓர்வித நம்பிக்கையாலும், பயத்தாலும், இன்பத்தாலுமே சிருஷ்டிக்கப்பட்டு, மக்கள் ஜனனத்திலிருந்து மரணவாயிலையடையும் வரையிலும் அவர்களுடைய ஜீவியத்தில் அவர்களுக் கேற்படும் பல் வேறு இன்பங்களையும், துன்பங்களையும் தழுவி எழுதியிருப்பதாகக் காணப்படுகின்றது. இவர்கள் இவ்வளவோடு தான் நின்றார்களாவென்று கவனிப்போமானால், அதுவும் இல்லை. தங்களைப்படைத்ததாகவும், பிறப்பித்ததாகவும், இவர்களால் கருதப்பட்டு வரும் கடவுளுக்கும், மக்களுக்குள் சகஜமாகவே உண்டாயிருக்கக்கூடிய பேதாபேதங்களும், குணதோஷங்களும், விகற்பங்களும் உண்டு என்று பறைசாற்றி விட்டார்கள். மேலும், இவர்களால் பாவிக்கப்பட்டு வரும் கடவுளுக்கு வாயுவும், அலைகளுந்தான் சங்கீதக்கருவிகளெனவும், சங்கீதமெனவும் கற்பிக்கப்பட்டதோடு, ஏரிகளிலும், நதிகளிலும், ஊற்றுகளிலும், மலைகளிலும், வனங்களிலும், கமகமவென வாசனை வீசக்கூடிய எல்லாவிடங்களிலும் அக்கடவுள் வாசம் செய்வதாகவும் மக்களுக்குப் போதித்து விட்டனர். (ஒருக்கால் இதையுத்தேசித்துத்தான் கோவில்களிலும், சாமிகும்பிடும் அறைகளிலும் சாம்பிராணியைப் புகைத்துக் கற்பூரத்தையும், ஊதுவத்திகளையும் கொளுத்திப் புஷ்பங்களால் உருவங்களை அலங்கரித்து, வாசனையையளிக்கத்தக்க எண்ணெய்களுடன் சந்தனத்தைக் கரைத்துச் சாமிகளின் பேரிலும், அறைகளிலும் வாரி இறைக்கின்றார்கள் போலும்!) இவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட இக்கதைகள் யாவும் பொய்யாகவோ அல்லது கட்டுக்

கதைகளாகவோ இருந்த போதிலும், அவைகள் மிக்க அழகாகவே அவர்களால் வர்ணித்துக் கூறப்பட்டிருக்கின்றமையால் அநேக காலங்களாக அவைகள் மக்களுக்கு ஓர்வித உற்சாகத்தையும், ஊக்கத்தையுமளித்து அவர்களுக்கு ஓர் தூண்டு கோலாகவுமிருந்து கொண்டே வந்திருக்கின்றது. ஆனால், இக்கதைகளில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும் உண்மைதானெனவும், கடவுளாலும், கடவுள் அருள் பெற்றவர்களாலும், கடவுள் தன்மை வாய்ந்தவர்களாலுமே அவைகள் எழுதப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றன; அக்கதைகளை ஒருவன் சந்தேகித்தாலோ, அல்லது மறுத்தாலோ அவன் ஏழேழு தலைமுறையும் ரௌரவாதி நரகத்திற்கே தான் ஆளாவான் என உரைத்து, மக்கள் பயமுறுத்தப்பட்டிருக்கின்றனர். ஆதலால் அக்கதைகள் எவ்வளவு அழகாக வர்ணித்துரைக்கப்பட்டிருந்த போதிலுங்கூட, அவைகள் தங்களுடைய அழகை இழந்து, மக்களுடைய மனத்தில் ஓர்வித பயத்தையுண்டாக்கி விடுகின்றன. மக்களும் ஓர்வித பயத்தினால் தான் அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள் போலவும், நடக்கின்றவர்கள் போலவும் காட்டிக்கொள்ளுகின்றார்களே யல்லாது, அக்கதைகளை வாசிப்பதால் அவர்களுக்கு உண்டாகும் பக்தியும், அறிவும்தான் அவர்களுடைய ஒழுங்கிற்கும், கட்டுப்பாட்டிற்கும் காரணமாயிருப்பதாகக் காட்டிக்கொள்வதில்லை. இத்தகைய பயங்களாலும், பீதிகளாலும் மக்களுடைய மனது பாதிக்கப்படுவதால் அக்கதைகளின் அருமையும், பெருமையும் குலைவதோடு, அவைகளின் அழகும் குன்றிவிடுகின்றது; ஆதலால்தான் அறிவுடையோரும், ஆராய்ச்சியுள்ளோரும், தைரியமுள்ளோரும் அவைகளை வெறுத்து ஒதுக்கித்தள்ளிவருகின்றார்கள்.

அறிவு, இயக்கமானது பொதுவாக உலகிற்கும், குறிப்பாக நமது இந்தியாவுக்கும் உண்மையான விடுதலையையும், சுதந்திரத்தையும் அளிப்பதற்காகவும், நமது மக்களின் அறிவை வளர்ப்பதற்காகவும், அறியாமையாலும், பயத்தாலும் மக்களின் மனத்தில் தோன்றியிருக்கும் தப்பெண்ணங்களையும், மதிமோசங்களையும் நிர் மூலமாக்கவும், ஆதிகாலத்திலிருந்து மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் குருட்டுத்தனமான தெய்வவழிபாடுகளை நிர்தூளியாக்கவும், இறந்து போனவர்கள் எவ்வளவுதான் மனிதர்களாக இருந்த போதிலும்சரி அவர்களைக் கும்பிடுவதால் மக்களுக்கு நன்மைகளொன்றுமேற்படாதென்பதை விளக்கிக்காட்டவும்; நமது கண்களுக்கெதிரில் உலகில் நடமாடும் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும் உதவிபுரிதலே சாலவும் சிறந்ததாகுமென்பதை மக்களுக்கெடுத்து உபதேசம் செய்யவும்; மக்கள் இவ்வுலக வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்பங்கள்யாவும் பாவ கிருத்தியங்களாகாதென்பதை நிலைநாட்டவும்; துன்பங்களும் கஷ்டங்களுமேதான் கடவுளுக்கு அத்தியந்த இன்பத்தை யூட்டமக்களுடைய மனத்திலிருந்து அறவே நீக்கவும்; அறிவு வளர்ச்சியானது குற்றமாகாதென்பதை நிரூபிக்கவும்; பேடித்தன்மையும்; பயங்காளித்தன்மையும் நற்குணங்களுக்குரிய அறிகுறிகளாகா தென்பதை விளக்கிக்காட்டவும்; மக்களுக்கு விமோசனமேற்பட வேண்டுமானால் அவர்களுக்கு ஓர் விதிதிட்டமான கடவுள்நம்பிக்கை இருக்கவேண்டுமென்கிற எண்ணத்தை நாசமாக்கவும்; இவ்வுலக வாழ்க்கையில் நாம்துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்தால் அடுத்த உலகில்மோட்சத்தில் இன்பங்களையும், சந்தோஷங்களையும் தவறாதனுபவிப்

போ மென்கிற மனப்பான்மையை மக்களின் எண்ணங்களிலி ருந்து அடியோடழிக்கவும், மக்களுக்குள்ளேற்பட்டிருக்கும் பாகுபாடுகளையும், உயர்வு தாழ்வுகளையும், அறவே நீக்கி, சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வளர்ப்பதாகவும்; நாம் மோக்ஷ உலகம்செல்லவேண்டு மென்றால் ஓர் புரோகிதரோ அல்லது ஓர் மதகுருவோ நமக்கு வழிகாட்டியாக இவ்வுலகிலிருந்து உதவிசெய்துகொண்டே வரவேண்டுமென்கிற ஓர் விதஎண்ணத்தை மக்களின் மனத்திலிருந்து அறவே அகற்றவுமே தான் பாடுபட்டு வருகின்றது. இவைகளே தான் அவ்வுயரிய இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகளாகும்.

ஒவ்வொரு புஸ்தகத்தையும், ஒவ்வொரு மதத்தையும், ஒவ்வொரு ஜாதியையும், ஒவ்வொரு வகுப்பையும், ஒவ்வொரு பிரமாணத்தையும், ஒவ்வொரு கோட்பாட்டையும், ஒவ்வொரு மேற்கோளையும், ஒவ்வொருமனிதனும் ஆராய்ச்சிசெய்வதற்கு சர்வ சாதாரணமாக அனுமதிக்கப்படும் வரையிலும், அத்தகைய சாதனங்களேற்படும் வரையிலும், உலகம் சுதந்தரத்துடனிருப்பதாகவாவது, அல்லது விடுதலை யடைந்து விட்டதாகவாவது கூறிவிட முடியாது. மக்கள் தங்களுடைய மனத்தில் உதிக்கும் எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும் வெளிப்படையாகவும் தைரியமாகவும், எடுத்துக்கூறவும்; அவர்களுக்கு நியாயமெனத்தோன்றும் துறைகளில் அவர்கள் சிறிதும் பயமின்றி பிரவேசிக்கவும்; அவர்களுடைய பிரியம் போல் நடக்கவும் சாதனங்களேற்படும் வரையிலும் அவர்கள் அடிமைகளேயாவார்கள். பல்வேறு மதத்தினரும், வகுப்பினரும், ஜாதியினரும் தத்தம் பேதங்களை விடுத்து, யாவரும்

ஒரு குடும்பத்தில் உற்பவித்த சகோதரர்கள் போலவும் சினேகிதர்கள் போலவும் ஒருவரையொருவர் நேசித்து, அளவளாவி, இன்புறத்தழுவிக் கொள்ளுவார்களேயானால் அப்பொழுது நமது இந்த உலகமானது ஓர் "சுவர்க்கம்" போலவே விளங்கும். நமக்கு நிச்சயமாகவும், உண்மையாகவும் தெரியாத ஒன்றைக்குறித்து நாம் ஒருவருடன் ஒருவர் போராடியும், வாதாடியும், ஒருவரை யொருவர் பகைத்தும், வெறுத்தும், ஒருவரை யொருவர் கொலைசெய்தும் உயிர்வாழ்வதை நோக்க உண்மையாகவே நமக்குப் பேராச்சரியமாக இருக்கின்றது. பல்வேறு மதங்களைக்குறித்தும், அம்மதங்களின் கடவுள்களைக் குறித்தும் மக்களுக்கேற்படும் அபிப்பிராயபேதங்களினால் மக்கள் ஒருவரை யொருவர் ஏன் சிறைப்படுத்தியும், அடிமைப் படுத்தியும், தூக்கிலிட்டும், கொலை செய்தும். நெருப்பிலிட்டு வாட்டியும் ஏன் கொடுமைப்படுத்தி வருகின்றார்களென்பது நம்மால் அறிந்துகொள்ள முடியவேயில்லை. நாமோ, "அன்பே சிவம்" எனவும், "சிவமே அன்பு" எனவும் போதிக்கப்பட்டிருக்கின்றோம். அப்படியிருந்தும் சைவசம்பந்தமான புராணங்களில் காணப்படும் அட்டூழியங்களுக்கும், கொலைகளுக்கும் கணக்கேஇல்லை. சைவர்களின் இத்தகைய இழிசெயலை இன்றும் நாளையும் மதுரையில் "சமணர்களைக்கழுவேற்றிய உற்சவம்" என ஓர் உற்சவத்தை, குறித்த ஓர் மாதத்தில் கொண்டாடிக்கொண்டும் வருகின்றார்கள். இவ்வாறே தான் ஒவ்வொரு மதஸ்தர்களும் அன்னிய மதஸ்தர்களைத்துன்புறுத்திக்கொண்டே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இவைகளுக்குப் போதிய சான்றுகளும் இல்லாமலில்லை. கடவுள் நம்பிக்கையுள்ள ஒருவர்—ஆஸ்திகர்—கடவுள் நம்பிக்கையில்லாத ஒரு

வரை—நாஸ்திகரை—ஏன்பகைக்கவேண்டும்? நாஸ்திகரினல் கடவுளுக்கு ஒருவித ஆபத்தோ, துன்பமோ, கஷ்டமோ அல்லது நஷ்டமோ நேரிடப்போவதில்லை. அவரால் அவருடைய பெருமையும்குன்றிவிடப்போவதில்லை. நாஸ்திகனே எல்லாரையும் போல் ஒருமனிதன் தான். மேலும், அவனுக்கு மற்றவர்களுக்கிருப்பதுபோலவேதான் இன்பமும் துன்பமும், சுகமும்—கஷ்டமும், ஆனந்தமும்—துக்கமுமிருக்கின்றன. அவன் மனிதனுக இருப்பதால், மனிதவர்க்கத்திற்குரிய எல்லாவித உரிமைகளும், சுதந்தரங்களும் அவனுக்குமுண்டு. இத்தகைய நாஸ்திகர்களை நாம் வெறுக்காமலும் பகைக்காமலும், அவர்களுடன் போராடாமலும், அவர்களைக் கொலைசெய்யாமலும், அவர்கள் நம்மிடம் நடந்து கொள்வது போல நாம் அவர்களிடம் நடந்து கொண்டும், நம்மை அவர்கள் நடத்துவதைப்போல் நாம் அவர்களிடம் நடந்துகொண்டும், நம்மை அவர்கள் நடத்துவதைப்போல் நாம் அவர்களை நடத்திக்கொண்டும் வருவதால் நமக்கு ஏறபடக்கூடிய கஷ்டநஷ்டங்களென்ன? நாம் நம்முடைய மதஸ்தர்களையும், வகுப்பினர்களையும், ஜாதியினர்களையும் நடத்தி வருவது போல் நாஸ்திகர்களையும் கருணையுடன் நடத்தி வருவது சிலாக்கியமாயும், மேன்மையாகவுமிராதோ? சகோதரர்களே! யோசியுங்கள்.

ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்கள் தங்களுடைய விரோதிகளையும், சத்துருக்களையும் நேசித்துச்சிநேகிப்பதாகவேதான் சொல்லுகின்றார்கள். ஆனல், நாம் அவர்களை வேண்டிக்கொள்வது யாதெனில் அவர்கள் யாவரும் அவர்களுடைய விரோதிகளை நேசிக்கவேண்டுமென்பது மல்ல; அவர்களுடைய அபிப்பிராயங்களினின்றும், எண்ணங்களினின்றும் மாறு

பட்ட அபிப்பிராயங்களுடையவர்களையும், மாறுபட்ட எண்ணங்களையுடையவர்களையும் இயற்கையான நேர்மையு டன், அதாவது மனத்தில் ஒருவிதமான துவேஷமுமின்றி நடத் தவேண்டு மென்பதே யாகும். நாம் அயலாருடைய குற்றங் களையும், தப்பிதங்களையும் மன்னிக்கத்தயாராயில்லாதிருக்கும் பொழுது நம்முடைய தப்பிதங்களையும், குற்றங்களையும் அயலார் மன்னிப்பார்களென்று நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியுமென்பது தான் நமக்கு விளங்கவில்லை.

மக்கள் யாவரும் தங்கள் தங்களுடைய மனோபாவனைப் படி தங்களுக்கு எது உசிதமெனத்தோன்றுகின்றதோ அவ் வாறு நினைப்பதற்கும் அபிப்பிராயங்கொள்ளுவதற்கும் எல் லாருக்கும் சம உரிமையும், சம சுதந்தரமும் உண்டு எனக்கரு துவார்களேயானல், அப்பொழுது இப்பிரச்சினையானது சாஸ் வதமாக முடிந்து விட்டது போலவேயாகும். ஆனல் செல் வாக்குள்ள மடாதிபதிகளிருக்கும் வரையிலும், ஒழுங்கும், கட்டுப்பாடுமுள்ள மதகுருக்களும், புரோகிதர்களுமிருக்கும் வரையிலும், மோக்ஷத்திற்கோ அன்றி நரகத்திற்கோ, மக்களு க்கு டிக்கட்டுகள் கொடுத்து அவர்களை அவ்வுலகங்களுக்கு அனுப்பக்கூடிய வல்லமையும், சக்தியும், அதிகாரமும் தங்க ளொருவர்க்குத் தான் உண்டென்று கூறி இவர்கள் மக்களை ஏமாற்றிப்பாசாங்கு செய்துகொண்டுவரும் வரையிலும்; சுயேச்சையான அபிப்பிராயங்களும், எண்ணங்களுமுடைய ஒருவனை 'கீழ்மகன்' எனவும், 'ஆசாரஹீனன்' எனவும், 'ஜாதி கெட்டவன்' எனவும் உரைத்து அவனைச் சமூக பகிஷ்காரஞ் செய்து கொண்டு வரும் வரையிலும்; தங்களுடைய உத்தரவு களுக்கும், கட்டளைகளுக்கும்,கீழ்ப்படியாதிருக்குமொருவனைக்

குற்றவாளியெனவும், அபராதத்திற்குரியவனெனவும் தீர்ப்பு கள் கூறிக்கொண்டு வரும் வரையிலும்; உலகத்தில் துன்பங் களும், கஷ்டங்களும், வருத்தங்களும், விரோதங்களும், வன் மங்களும், பகைகளும் தாண்டவமாடிக்கொண்டேதானிருக் கும். மனிதர்களைப்பகைத்து கடவுளை வணங்கி, வழிபாடு செய்யவேண்டுமென்கின்ற கொள்கைதான் எல்லா மதங்களி லுடைய முக்கிய தத்துவார்த்தம் போல் காணப்படுகின்றது.

எல்லாத் தேசங்களிலும் நடைபெற்றுக்கொண்டுவந்த சம்பவங்கள்தான் நமது நாட்டிலும் நடைபெற்று வந்தன. ஏதாவது ஒரு மதம் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டால் உடனே அறிவாளிகளும், அதிகாரத்திலிருப்பவர்களும், அதாவது மத குருக்களும், பணக்காரர்களும் அதாவது அரசர்களும் ஒன் ருகச் சேர்ந்து கொண்டு தங்களுடைய மதமானது கடவுளா லேயே தங்களுடைய முன்னோர்களுக்களிக்கப்பட்டதென வும்; தங்களுடைய மதம் ஒன்றுதான் உண்மையான மதமெ னவும்; மற்ற எல்லா மதங்களும் பொய்யெனவும், அபத்த மெனவும்; தங்களுடைய உண்மையான மதத்தை நம்புகின்ற வர்கள் மட்டும்தான் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க முடியுமெனவும்; அவ்விதம் நம்பாதவர்கள் யாவரும் எப்பொ ழுதும் எறிந்து கொண்டேயிருக்கும் அக்கினியில்தான் தள் ளப்படுவார்களெனவும்; அறியாமையிலும், அந்தகாரத்திலும், மூடபக்தியிலும், நிறைந்துள்ள மக்களிடம்—அதாவது பாமர மக்களிடம்—பிரசாரம் செய்து வந்தார்கள். மக்களை அடக்கி ஆளுவதற்காகவேண்டி—அதாவது மக்கள் தங்களுக்கு உதவி அளித்துக்கொண்டே வருவதற்காக வேண்டி—மத குருக்க ளும், பணக்காரர்களும், அதாவது அரசர்களும், ஒன்ருகச்

சேர்ந்துகொண்டு தங்களுடைய மதம் ஒன்றுதான் மிக்க பரி சுத்தம் வாய்ந்ததெனவும்; போற்றுவதற்கும், புகழ்வதற்கும், கொண்டாடுவதற்கும்தகுதிவாய்ந்ததெனவும், தெய்வாம்சமும், தெய்வகருணையும், நிரம்பியுள்ள தெனவுமுரைத்து, மக்களை ஏமாற்றி, அவர்களுக்குத் துரோகம் செய்துகொண்டு வந்தது மல்லாமல் அவர்களுடைய மதபுஸ்தகங்களிலுள்ள வாக்கியங் களை ஒருவன் மாற்றினாலும், அல்லது புதிதாக ஒன்று அப் புஸ்தகத்தில் சேர்த்தாலும் அவன் இவ்வுலகில் கண்டிக்கப் பட்டு நெருப்பிலிட்டு கொளுத்தப்படுவதுமல்லாமல், அடுத்த உலகிலும் அவன் கடவுளால் அவ்வாறே தண்டிக்கப்பட்டு இம்சைக்குள்ளாவானெனவும் பறைசாற்றிவந்தனர். மக்கள் தங்களுடைய கொள்கைகளினின்றும் மாறாதிருக்க வேண்டு மென்பதே மதகுருக்களினுடையவும், பணக்காரர்களுடைய வும் எண்ணமென்பதும், அதுவே அவர்களுடைய முடிவான அபிப்பிராயமென்பதும் இதனால் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றது. இவர்களுடைய இத்தகைய கூட் டுச் செய்கையாலேற்பட்ட பலனுமதுவேயாகும். ஆனால் காளா வட்டத்தில் சிலமத புரோகிதர்களின் அறிவு விசால மடைந்து, மக்கள் முன்னேறிச் செல்வதற்கான துறைகளில் அவர்கள் ஈடுபடவேண்டுமென விரும்பியபொழுது பாமர மக் களோ அவர்களை இடையேமறித்து அவர்களுடைய மாற்றத் திற்கு முட்டுக்கட்டையிடலானார்கள். ஏனெனில் அவர்களு டைய மனமாற்றத்தை மக்கள் விரும்பவில்லை. பாமர மக்கள் முதலாவதாகப் புரோகிதர்களால் வஞ்சிக்கப்பட்டு அடிமைப் படுத்தப்பட்டார்கள். ஆனால் பிறகோ அந்தப் பாமர மக் களே அவர்களுடைய எஜமானர்களாக விளங்கினார்கள்.

மடாதிபதிகளையும், மத குருமார்களையும், மத புரோகிதர்களையும் இத்தகைய நிலைமையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றுதான் அறிவு அல்லது சுயமரியாதை இயக்கமானது பாடுபடுகின்றது. சுயமரியாதை இயக்க அன்பர்கள் பலரும் மேற்கூறப்பட்டவர்களின் சிநேகிதர்களேயல்லாது அவர்களுடைய விரோதிகளல்ல. சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அவர்கள் என்னதான் திரித்துக்கூறி விஷமப்பிரசாரம் செய்துகொண்டு வந்தபோதிலும்கூட இவ்வியக்கமானது அவர்களுக்குச் சாஸ்வதமாகவும் நீடித்துமிருக்கக்கூடிய ஓர் மகத்தான ஊழியத்தைச் செய்யத்தான் போகின்றது. அவர்களோ சுயேச்சையுடனும் சுதந்தரத்துடனும் எதாயினும் ஒன்றைக் கற்று ஆராய்ச்சி செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்குச் சிறுவயதில் போதிக்கப்பட்டவைகளைத் தான் தங்களுடைய வாழ்க்கையில் அவர்கள் ஓர் கிளிப்பிள்ளையைப் போன்று மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்றார்கள். அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த மந்திரங்களைச் சிறிதும் தப்பிதமின்றியோ அல்லது ஏதோ ஒரு சில தப்பிதங்களுடனோ யார் ஒருவர் வேத கோஷ்டம் செய்கின்றார்களோ அவர்களே தான் தேர்ந்த அறிவாளிகளெனக் கருதப்படுகின்றார்கள். பல்லாயிரவருடங்களாக இம்முறையேதான் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அர்த்தமற்ற சடங்குகளை இவர்கள் புரிந்துகொண்டே வந்ததனுல்தான் இவர்களுக்கும் இவர்களைப் பின்பற்றிய பாமர மக்களுக்கும் சுய அறிவு என்பதோ அல்லது சுய ஆராய்ச்சி என்பதோ நாளாவட்டத்தில் இல்லாதொழிந்தது. மேலும் மதபுஸ்தகங்களை ஆராய்ச்சி செய்வதென்பது ஓர் கொடிய பாவ கிருத்தியமாகுமென இவர்களுக்கு இளவயதிலேயே

போதிக்கப்பட்டிருக்கின்றமையால் இவர்கள் அத்தகைய செய்கைகளில் நாளது வரையிலும் ஈடுபடுவதற்கில்லை. பழைய மதக்கொள்கைகளையும், ஆசார அனுஷ்டானங்களையும்தான் இவர்கள் பின்பற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டிருப்பதுடன், அவைகளுக்கு மாறாக நடந்தால் அப்பொழுது அவர்களுடைய கொள்கை மக்களின் சன்மார்க்க முறைகளுக்கு ஓர் தொத்து வியாதிபோலாகுமெனவும் போதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு மதகுருவும் மதபுரோகிதரும் தங்களுடைய குறித்த ஓர் மதத்திற்கே வக்காலத்து வாங்கியிருக்கின்றார்கள். ஆகையினால் அவர்கள் தங்களுடைய வாதத்தை உண்மையாகவே நடத்துவார்களென எதிர்க்கப்படுகின்றார்கள். இவர்களுக்குப் போதிக்கப்பட்டவைகளுக்கு விரோதமாக நடக்க எப்பொழுதாயினும் இவர்கள் முயற்சி செய்வார்களேயானால், அப்பொழுதே அவர்கள் துரோகிகளெனக் கூறப்பட்டு, பல இழிசொற்களுக்கும் ஆளாகி, அவதூறாகப் பேசப்பட்டு, பகிஷ்காரமும் செய்யப்படுகின்றார்கள். ஒவ்வொரு மதகுருவும் தன்னுடைய கொள்கைகளிலிருந்து எக்காரணத்தைக்கொண்டும், எக்காலத்திலும் மாறுவதில்லையென ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றான். இவ்வாறு ஒப்பந்தம் செய்து கொள்ளுவதால் அவன் புதிய விஷயங்களை ஆராய்ச்சி செய்ய விரும்புவதில்லை. அப்படி ஒருக்கால் ஆராய்ச்சி செய்ய நேரிட்டாலும் அவன் அவைகளை ஒத்துக்கொள்ளுவதுமில்லை. இந்த நிலைமையில்தான் நமது மத குருக்களென்பவர்கள் தற்காலமிருந்து கொண்டு வருகின்றார்கள். இவர்களுடைய இத்தகைய பரிதாபகரமான நிலைமையைக்கண்டுதான் சுயமரியாதை இயக்கத்தார் அவர்கள்மீது பச்சாத்தாபப்படுகின்

றார்கள். அவர்களுடைய அத்தகைய நிலைமையிலிருந்து அவர்களை விடுவிக்கவேதான் சுயமரியாதை இயக்கமும் பாடுபடுகின்றது.

சிலமதகுருக்கள் தங்களுடைய கட்டுப்பாடுகளினின்றும் விடுவித்துக்கொண்டு, தங்களுடைய சுய அறிவுடன் வாழ வேண்டுமென்கிற தைரியமுடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். ஆனால் பெரும்பான்மையானவர்கள் தங்களுடைய ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் தீரவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றார்கள். இவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களையாவது அல்லது எண்ணங்களையாவது வெளியிடவே கூடாது. ஆனால், தங்களுக்குப் போதிக்கப்பட்டிருப்பவைகளை மட்டும் தைரியமாகவும், தாராளமாகவும், வெளிப்படையாகவும் உரைக்கலாம். தங்களுடைய மனத்தில் உதிக்கக்கூடிய சந்தேகங்களைக்கூட இவர்கள் உரைக்கக்கூடாது. ஆனால் மக்கள் அறியாமையிலும், அந்தகாரத்திலும், மூடபக்தியிலும் மூழ்கியிருந்த காலத்தில் இவர்களால் இயற்றப்பட்ட அக்குறுகிய பாதையிலேயேதான் இவர்கள் செல்லவேண்டும். அப்பாதையின் இருஓரங்களிலும் நிழலையளிப்பதற்கு மரங்களோ நாட்டப்படவில்லை. அவர்களுடைய அக்குறுகிய, நிழலற்ற பாதையில் அவர்கள் செல்லும்பொழுது தங்களுக்கு இருபக்கங்களிலுமுள்ள வயல்களையாவது, தோட்டங்களையாவது அவர்கள் பார்க்கவே கூடாது. மேலும், தங்களுடைய கண்களுக்குப்புலப்படும் வனங்களின் காட்சியையாவது, அல்லது குன்றுகளின் அழகையாவது அவர்கள்கவனிக்கவே கூடாதென்பதுடன், அக்குன்றுகளிலிருந்து ஓடிவரும் சிறு அருவிகளின் சப்தத்தையும்

அவர்கள் சிறிது நேரம்நின்று கேட்கவும் கூடாது. புழுதி நிறைந்த அக்குறுகிய பாதையிலேயேதான் அவர்கள் செல்ல வேண்டும். 'மோக்ஷம்,' "நரகம்," "விமோசனம்," "விடுதலை," "மறுஜன்மம்," என்பவைகளைப்பற்றியேதான் இவர்கள் ஆராய்ச்சிசெய்துகொண்டு, அந்தப்பாதையில் தான்சென்று கொண்டிருக்கவேண்டும். ஆனால் மேற்கூறிய இப்பெரிய கேள்விகளுக்கு, இவர்களே புதிதாக ஓர் தத்துவார்த்தத்தையும் கண்டுபிடிக்கக்கூடாது. நம்பிக்கையற்றவர்களும், மதகுருக்களைப் பரிகாசம் செய்தவர்களும், ஆசார அனுஷ்டானங்களைக் கை நழுவவிட்டவர்களும் அனுபவித்த இடுக்கண்களையும், துன்பங்களையும், கஷ்டங்களையும் ஒன்றுக்குப்பத்தாகப் பெருக்கி எவ்வளவுக்கெவ்வளவு வர்ணித்துரைக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் சிரேஷ்டமானவர்களென பாவிக்கப்படுகின்றார்கள். இந்தஜன்மத்தில் துன்பத்தை அனுபவிக்கின்றவர்கள் மறுஜன்மத்தில் இன்பத்தை அனுபவிப்பார்களெனவும்; இந்த உலகத்தில் இன்பத்தை அனுபவிப்பவர்கள் அந்த உலகத்தில் துன்பத்தையே அனுபவிப்பார்களெனவும்; கடவுள் யாரை விசுவாசித்து, தனது கிருபாகடாக்ஷத்தையளிக்கின்றாரோ அவர்கள்தான் இந்த உலகத்தில் துன்பத்தையும், கஷ்டத்தையும் அனுபவிப்பார்களெனவும்; கடவுள்யாரை வெறுத்துப் பகைக்கின்றாரோ அவர்கள்தான் இவ்வுலகில் சகல ஐஸ்வரியங்களுடன் கூடிய குபேர வாழ்க்கையை நடத்தி இன்பத்தையும், சந்தோஷத்தையும் இடைவிடாது அனுபவித்துக் கொண்டு வருவார்களெனவும்; கடவுள் யாரை அதிகமாக நேசித்து விரும்புகின்றாரோ அவர்களைத்தான் இவ்வுலக வாழ்க்கையில் பலசோதனைகளுக்கு முட்படுத்தி, துன்புறுத்திக்

கொண்டே வருவாரெனவும்; ஆனால், அடுத்த உலகில், அதா வது மோக்ஷத்தில் அவர்கள் இவ்வுலகில் அனுபவித்ததுன்பங் களுக்கு ஈடாக எப்பொழுதும் இன்பத்தையும், சந்தோஷத் தையுமனுபவித்துச் சதாகடவுளருகிலேயே வீற்றிருப்பார்க ளெனவும், இவ்வுலகில் குபேரசம்பத்துடன் வாழ்ந்து, எவ்வித சுகபோகங்களையும் அனுபவிக்கின்றவர்கள் அடுத்த உலகில் அதாவது மறுஜன்மத்தில் அவ்வளவுக்கவ்வளவு துன்பத்தை யும், கஷ்டத்தையும்தான் அனுபவிப்பார்களெனவும், துன்ப மும், கஷ்டமும், வருத்தமுமேதான் நமக்கு மோக்ஷ உலகிற்கு வழிகாட்டிகளெனவும் அவர்கள் கண்டிப்பாய் மக்களுக்கு உப தேசம் செய்ய வேண்டும்.

நாம் மேலே கூறிக்கொண்டுவந்த விஷயங்கள் எவ்வளவு தான் அபத்தமானவைகளெனக் காணப் பட்டபோதிலும்கூட அவைகள் கண்டிப்பாக மக்களுக்குப் போதிக்கப்பட்டாகத் தான் வேண்டும்; அவைகளை நம்பியுந்தான் தீரவேண்டும். யாதொருவித மேற்கோளோ, அல்லது பிரமாணமோ, அல் லது சந்தேகமோ இல்லாமலும், அல்லது சிலசமயங்களில் அவைகளொன்றுமே இல்லாவிட்டாலும்கூட அவர்கள் உரைப்பதை மறுத்துரைக்காமலும் எதிர்த்து வாதாடாமலும் அப்படியே, அவ்வளவையும் எவன் ஒருவன் உண்மையென நம்புகின்றானோ அவன்தான் உண்மையான, பக்தியுள்ள மனி தன் எனக்கருதப்படுகின்றான்.

———0———

# மரணத்தின் மர்மம்.

—:0:—

பூவுலக வாழ்க்கைக்கும், விண்ணுலக வாழ்க்கைக்கும் மத்தியில் ஏற்படும் மரணம் எனும் ஏதோ ஓர்வித நிகழ்ச்சியைப்பற்றிய கொள்கைகள்தான் "மதத்தைப்பிரபலமாகப் போற்றும் மதவாதிகளின் மூலபலம் என்றுகூறலாம்."

சாதாரண மக்கள் மரணம் என்பதைத்திரிகரணங்களுக்கு மெட்டாத ஏதோ ஓர்வகை பயங்கரமான அகோர சம்பவமாகவே கருதுகின்றனர். அதிபலசாலிகளும் மரணம் என்னும் பீதிகொண்டு, அதனின்றும் மீழ்வதற்கான எத்தகைய செயல்களையும் அப்பொழுதே செய்ய முற்படுகின்றனர். உண்மையில் மரணத்தைப்பற்றிய பயமானது ஜன சமூகத்திற்கு ஒரு விதத்தில் நன்மையையே உண்டாக்குகின்றது என்று சொல்லலாம். ஏனெனில் வாழ்நாளில் ஏற்படும் பல் வேறு சம்பவங்களில் மரணத்தையும் ஒன்றாகக்கருதும் எந்த சமூகவாழ்வும் மன அமைதி யோடிருத்தல் அரிது. மனிதர்க்கு ஆயுட்காலம் மிகவும் முக்கியமாதலின் ஒவ்வொருவரும் அதனை இயன்ற அளவு காப்பாற்றல் அத்யாவசியமேபாம். ஏன் இவ்வுலகில் தோன்றும் பல்வேறு தோற்றங்களின் போக்கானது தத்தம் வாழ்வின் வளர்ச்சிக்குப் போராடுவதிலேயே இருக்கின்றதெனக்கூறலாம். இவ்விதமான தீவிர உணர்ச்சி உயிர்வாழ் பிராணிகளிடம் இல்லாதிருப்பின் அவை வெகு காலத்திற்கு முன்னரே இவ்வுலகத்திலிருந்து மறைந்து போயிருக்கவேண்டும்.

உயிரின் ஆதியையும் அந்தத்தையும் அறியவேண்டுமென்ற அவாவானது எக்காலத்தும் ஒரே தன்மையில் இருத்

தல் கவனித்தற்பாலது. விஞ்ஞான விற்பன்னர், ஏதோ ஒரு காலத்திலாவது ஒருபரம அணுவைத்தாங்களாகவே (Protoplasm) சிருஷ்டித்தல் கூடும்; ஆனால் அதற்கு அறிவைப்புகட்டி பலவிதமேலறிவு பிராணிகளாகத்தோற்று விக்க அவர்களால் முடியவும் முடியாது; முடியப்போவதும் இல்லை! "ஜடம்" என்ற அசேதனப் பொருளிலே "ஆத்மா" வெனும் சத்பொருள் ஒன்று அதற்கு அன்னியமாக இருக்கின்றதா இல்லையா என்பதைப்பற்றி நாம் இங்கு ஆராயப்புக வில்லை; எனினும் ஜடப்பொருள் இன்றேல் உயிரின் பலவித பரிணமிப்பை எவ்விதத்திலும் அறிந்துகொள்ளமுடியாது என் பதுமாத்திரம் உண்மை. சரீரசாஸ்திர விற்பன்னர்களும் (Physiologists) அறிவின்பலவித ஆற்றல்கள் மூளையிலிருக்கும் பல அணுக்களின் வெவ்வேறு வகையான சேர்க்கையினாலேதான் ஏற்படுகின்றதெனக் கூறுகின்றனர். இதனால் ஜடபதார்த்தங்களின் (Matter] மூலமாகத்தான் அறிவின் தன்மையை உணரவேண்டுமென்று தெரிகின்றது. எனவே சாதாரணமாக மனிதன் தனது வாணாளில் உயிர் அல்லது ஆத்மாவைப்பற்றிப்பிரமாதமாக எண்ணாமல் அது தனது புத்திக்கு எப்படி உணரப்படுகின்றதோ அவ்விதமே எங்குமுள்ளதாக நினைக்க வேண்டியதோடு தன் அறிவு அவ்வப்போது எதை உணர்த்துகின்றதோ அதை அனுசரித்து வாழ்க்கையையும் நடத்துதல்வேண்டும். மரணத்திற்குப்பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கின்றதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயமாகும். தற்சமயம் அவ்விஷயத்தைப்பற்றிய அத்தாக்ஷிகளை ஆத்மவாதிகள் (Spritualists) எத்தனையோ சோதனைகளால் விளக்கமுற்

பட்டும், அவற்றை அறிஞர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமைக்கு வரவில்லை. எது எவ்வாறிருந்தபோதிலும் நிருமாணித்துக்காட்டமுடியாத விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் சோதித்துத்தெளியப்படாத—ஏதோ ஓர் யுகத்தில், எவராலோ அவரவர்களுடைய உத்தேசத்திற்கும் மனப்பான்மைக்கும், பயத்திற்கும் தக்கபடியாக சொல்லப்பட்ட மேற்குறித்த மரண சம்பந்தமான கூற்றுக்களால் இந்த ஆத்மாவைப்பற்றிய விஷயத்தை முடிவுகட்டுதல் அறிவுடைமைக்கு அழகல்ல.

ஏற்கனவேயுள்ள மரணத்தைப்பற்றிய பீதியைப்பலவித மதங்கள், அவ்வவற்றின் பலவகையான மௌடீக சாஸ்திர சித்தாந்தங்களாலும், மூடத்தனமானஎத்தனையோ வகையான சடங்குகளாலும் எவ்வளவோ மடங்கு அதிகமாக்கி வருகின்றன. நரகலோகங்களென்ன? ஆங்காங்கு நேரும் சித்ரவதைகளென்ன? இறந்த பின்னும் இவ்வுலகில் உள்ள ஆசாபாசங்களால் அவனது ஆத்மா துன்பமடைவதென்ன? இறந்து பிறத்தல், பிறந்து இறத்தல்களென்ன? சித்ரகுப்தஎமதூதவேதனைகளென்ன? இன்னும் இவைபோன்ற எண்ணற்ற ஆபாச சித்தாந்தங்களே இப்போது மனித சமூகத்தைக் கணக்கற்ற கஷ்டங்களால் நெக்குவிட்டு நைந்துருகும்படியான பழக்க வழக்கங்களில் ஈடுபடுத்திப் பரிதவிக்கச் செய்து வருகின்றன.

உயிரிழந்த சரீரத்தைப் பல மதத்தினர் பற்பல விதங்களில் தகனம் செய்துவந்த போதிலும், எல்லா மதத்தினரும் மாண்டோருக்குரிய ஈமக்கிரியைகளைச் சரிவரச்செய்தாலொழிய அவர்களது ஆத்மா சாந்தமடையாதென்பதை ஒருங்கே ஒத்துக்கொண்டு அவ்வாறே நடந்து வருகின்றனர். மனிதன் இறந்தபின் அவனது ஆத்மா பிரிந்து மேலுலகம் செல்

கின்றது (Resurrection) என்ற கொள்கையினுலேதான் சரீரத்தை அடக்கம் செய்யும் விதங்களில் பலவித விவகாரங்கள் கிறிஸ்துவ நாடுகளில் கிளம்பியிருக்கின்றன. உயிரோடிருக்கும் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க எத்தனையோ கோடி பொன் சமாதிகளிலும், இறந்தவர்களின் ஞாபகார்த்தமாகக்கட்டும் கோபுரங்களிலும் வீணுகச்செலவிடப்பட்டு வருகின்றது. ஜனங்கள் குடியிருக்கவே இடம் கிடைக்காத ஊர்களிலும் சமாதிகளுக்காக எவ்வளவோ விஸ்தீரணமான இடங்கள் விடப்பட்டு வீணே கிடக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க ஏராளமான பணவிரயம் ஆவதோடு அவ்வித மயானங்களால் மக்களின் ஆரோக்கியத்திற்கே கெடுதியும் ஏற்படுகின்றது. முகமதிய நாடுகளில் பிணங்களின் மேல் எத்தனையோ பெரிய சிங்காரமான கோரிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன; அவைகள் மிகத் தேர்ந்த சிற்பவேலைத்திறனைக் காண்பிப்பதாயினும், எத்தனை கோடி ம்க்களின் இரத்தத்தின் சத்தை வீணுக்கியிருக்கின்றனவென்பது கவனிக்கத்தக்கதாகும். ஈஜிப்ட் தேசத்திலுள்ள சமாதிகள், கோபுரங்கள் முதலியவற்றை அமைக்க எத்தனை அடிமை (Slaves) களின் நெற்றிக்கண்ணீர் நிலத்தில் பாய்ந்திருக்கவேண்டும்! ஈமச்சடங்குகள் செய்வதாலும், கருமாதி சமாராதனைக் கிரியாதிகள் நடத்துவதாலும் எத்தனை இந்தியக் குடும்பங்கள் குடிக்கக்கஞ்சியில்லாமல் அலைகின்றன? செத்தவர்களால் ஏற்படும் சகியாத் துயரத்தைவிட, அவர்களின் கருமாதிகளுக்காகக் கடன்பட்டுப்பின் உயிருள்ள அளவும் மீளாத்துன்பத்திலழுந்தும் துயரம் பெரிதாகத்தோன்றுகின்றது. ஹிந்துக்கள் செய்யும் கருமாதிச்சடங்குகளை நேரில் காணுதவர்களுக்கு அவைகளைப்பற்றி விரித்துக்கூறின்

அது சிறிதும் நம்பத்தகாத ஆபாசமாகவே தோன்றும். பிணத்திற்குத் தீ மூட்டுவதற்குமுன், அதன் ஆத்மா கஷ்ட மின்றிப் பிரிந்துபோக வேண்டிய வசதிகள் முதலில் செய்யப் படுகின்றன. ஆத்ம சாந்திக்காக வாய்க்கரிசி சமைத்துப் படைக்கப்படுகின்றது. தவிர "கோடி வஸ்திரம்" என்பதாக நல்ல வஸ்திரமாவது, இல்லாவிடின் ஏதோ ஒரு புதிய மஞ்சள் துணியாவது அப்பிணத்திற்குக் கட்டப்படுகின்றது. மீண்டு ஆத்மாவிற்குப் பாலமுதளிக்கப்பசுக்களைக்கோதானமாகக்கொ டுக்கப்படுகின்றது. ஆதியில் "சககமனம்" என்ற பெயரால் இறந்த கணவனோடு அவனது உயிருள்ள மனைவியையும், அவன் தனிமையைத் தீர்த்து அவனுக்கு எங்கும் சுகமளிக்குமாறு ஒருங்கே வைத்துக்கொளுத்தப்பட்டுச் சித்ரவதையும் செய்யப் பட்டது! தற்காலத்தில்ஆண்மக்களனைவரும் மீசையை எடுத்து விடவேண்டும்! மனைவியர் தலை மொட்டையடிக்கப்படவேண் டும்; அவ்வாறு செய்வதற்குக்காரணம் அவனது மனைவிமார் அழகைக்குறைத்துக்கற்புக்குப்பங்கம் வராமற்காப்பதொன்று, இரண்டாவதாக அவனது ஆத்மாசிரமமன்னியில் சுவர்க்கலோ கம் சேர்வதற்கு ஒரு மயிர் ஏணிஏற்படுத்துவதற்கும் ஆம்!

அந்த ஜீவாத்மா சில நாட்கள் வரையிலும் பூமியில் சஞ் சரித்த முக்கியமான இடங்களுக்கு வந்து செல்கிறதாம்; அதன் நிமித்தம் பலவித படைப்புகள் போட்டு அதன் சாந் திக்காக பூஜை செய்யவேண்டுமாம்! கருமாதி வருஷாந்திர பூஜா காலங்களில் படைக்கப்படும் போஜனத்தின் ஒரு கைப் பிடிச்சாதத்தை காகம் சாப்பிடவேண்டியது அத்யாவசியம். அவ்வாறு அந்த நாளில் காகம், சாதம் எடுக்கத் தவறினால் அந்த ஜீவன் தன்னால் அனுபவிக்கக்கொடுத்து வைக்காத

ஏதோ ஒன்றை நினைத்துத் துக்க சாகரத்தில் ஆழ்ந்து கிடப்பதாகவும் கருதப்படுகின்றது. உடனே அவனது சுற்றத்தினர் அவ்வித அபேக்ஷை என்னவென உத்தேசித்து அதனை நிறைவேற்றுவதாக நிருமாணித்தபடி அநேக மணி நேரம் காத்துச் சலிப்பார்கள். அப்பொழுதும் வராதிருப்பின் தர்ப்பைப் புல்லை முடிச்சுப் போட்டுக் காகமாகப்பாவனை செய்து அந்தச் சாதத்தைத் தொட்டாகிலும் தங்கள் மூடமனத்தைத் தேற்றுவார்கள்! அவ்வித சாஸ்திரப்பிராயச் சித்தம் செய்தபோதிலும் அவர்களது கோழைமனம் மாண்டவரின் ஜீவன் சாந்தமடையாததால் தங்களுக்கு என்னென்ன துன்பம் எப்படியெப்படி வருமோ வென அந்தோ! ஏங்கிப்பரிதவிக்கும்.

கருமாதி கைங்கரியங்கள், உயிரிழந்த நாள்முதல் பன்னிரண்டு நாட்கள்வரை ஒவ்வொன்றாக நடைபெறும். முதல் வருஷாந்திர நாளானது மிக்க சிறப்பாகக்கொண்டாடப்படும்; அன்றையதினம் சுற்றத்தாரனைவருக்கும் மேலும் ஏராளமான பிராமணர்களுக்கும் போஜனம் அளிக்கப்படும். மகனானவன் இவ்வித வருஷாந்திர சிரார்த்தத்தை ஒவ்வோராண்டும் தவறாது நடத்தவேண்டும். அந்தக்குடும்பத்தினர் விவசாயிகளாக இருப்பின் இவ்வித திதிநாட்களில் அவர்களது கால்நடைகள் ஒன்றாகிலும் வேலைசெய்யக்கூடாது; ஏனெனில் மாண்டவனின் ஜீவன் அந்தப்பிராணிகள் ஏதாவதொன்றில் புனர்ஜனனமெடுத்திருக்கக் கூடுமன்றோ!

இவ்வித மௌடீகப்புராணக் (Anthroporphic) கொள்கைகள் ஹிந்துமக்களிடத்தே மாத்திரம்தான் காணப்படுகின்றன வென்று நினைக்கவேண்டாம். அவைகள் மனித

சமூகம் உள்ள இடங்களிலெல்லாம் பொதுவாகவே குடிகொண்டிருக்கின்றன; ஆனால் ஒவ்வோரிடங்களிலும் சடங்குகள் மாத்திரம் கால தேசவர்த்தமானங்களுக்கேற்ப வெவ்வேறு விதமாகக் கையாளப்படுகின்றன. பேய்ன்டன் (Paignton) என்ற இங்கிலாந்தின் கடற்கரையிலிருந்த ஒரு ஊரில் வசித்து வந்த—சர்வகலாசாலையில் பட்டம்பெற்ற ஓர்மாது, தனது தாயின் சமாதிக்குத்தூபமிட்டு, அன்னம்படைத்த விஷயமாக நேர்ந்த ஒருவிவகாரம் நீதிமன்றம் வரைவந்த விஷயம்மிக்க ஆச்சரியமாகவே நமக்குப்புலப்படுகின்றது. சமாதியைஅழிப்பதும், பிணத்தை அடக்கம்செய்யும் விஷயத்தில் பிறர்தலையிடுவதும் மிக்கதுவேஷத்தை மூட்டுவதாக எல்லாஜனசமூகங்களாலும் கருதிப் போற்றப்படுகின்றது. சென்ற ஜெர்மனியுத்தத்தில், உயிரிழந்த மக்களின் உடலினின்றும் கொழுப்பை ஜெர்மனியர் சேகரித்தனர் என்பதாக யாரோகட்டி விட்டதாலே ஏற்பட்ட எதிர்ப்பே அவர்களின் அழிவிற்குப் பிரபலகாரணமாக இருந்தது.

மாண்டமக்களின் ஆத்மாக்களுக்காக மனிதர் மேற்கொள்ளும் சிரமத்தை, உயிருடன் இருக்கும் மக்களின் நன்மைக்காக உபயோகிப்பார்களெனின் ஜனசமூகம் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருத்தல் கூடும் என்பதை யோசிப்பீர்களாக! ஒவ்வொரு மனிதனுடைய செயல்களும் அவைபிறர்பால் எத்தன்மையில் பிரயோஜன கரமாகப் பிரதிபலிக்கின்றதென்பதிலேயே வேரூன்றி நிலைபெறுகின்றன. ஒவ்வொருவரும் பகுத்தறிவுச்சுடரைக்கொளுத்தி அதன்வெளிச்சத்தில் மரணத்தைப்பற்றி ஆராய்ந்துபார்ப்போமாயின் அதனைப்பற்றி மௌடீக நோக்கங்களெல்லாம் சூரியன்முன் பனிப்படைகளே

போல் பறந்தோடும்; அன்றியும் மதப்பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மரணத்தைப்பற்றிய பயப்பேய் மாய்ந்து, மாந்தர் மரணத்தைத் திரணமாகப்பாவித்து, ஆனந்தவாழ்வெய்துவர் என்பது திண்ணம். மாண்டவனுக்குக் கோடித்துணியையும் அறுவகையுண்டியையும் படைத்துப்புதைப்பதைக்காட்டிலும் அவைகளை மக்களுக்குக் கொடுப்பது பலவகையிலும் சிறந்த தாகும். சிற்பவேலைப்பாடுகளமைந்த மசூதிகளையும் ஸ்தூபிகளையும் இவ்வுலக இன்பங்களை என்றும்வேண்டாத மாண்ட பிரேதங்களின் மேலமைத்து அழகு பார்ப்பதைவிட ஏழைகளுக்கு உதவும்படி சத்திரம், சாவடிகளைக்கட்டுவித்தல் மிகவும் தகுதியான செய்கையாகும்.

இதனால் ஓர் அறிவாளி (Rationalist) என்பவன் மேலான இலட்சியங்களில்லாதவனென்று எண்ணவேண்டாம். அவனது இலட்சியங்களெல்லாம் நமதுகண்முன் உயிருடன் நடமாடும் மக்களை மேலோங்கச்செய்வதிலேயே செலுத்தப்படுகின்றன. ஏதோ மாண்டவர்களின் ஆத்மசொரூபங்கள் (Spirits) என்பனவற்றைக்கரைசேர்ப்பதில் இவன்தனது இலட்சியங்களைச்செலுத்துவதில்லை. இந்த ஒரேகாரணத்தினால் தான் அவ்வித அறிவாளிகளே இலட்சியத்தை நிருமாணித்துக்காட்ட முடியும் என்பதும், அவர்களே மக்களுடைய முன்னேற்றத்தையும் இன்பத்தையும் மேலோங்கச்செய்வரென்பதும் உண்மையாக ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்.

——:0:——

# மதமும் ஒழுக்கமும்.

—:0:—

வேத சாஸ்திரங்கள், கடவுள் என்ற வார்த்தையையோ, அல்லது கர்மா என்ற வார்த்தையையோ காரணகாரியங்களோடு மெய்ப்பிக்க முடியாவிட்டாலும், தாங்கள் கொண்டுள்ள சித்தாந்தங்களை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்றும், இல்லையேல் உலகில் ஒழுக்க ஈனம் மலிந்து பெருங்குழப்பத்தை உண்டாக்கி விடுமென்றும் சாதிக்கின்றன. மனிதர்களது எண்ணத்தில் மத நம்பிக்கையானது பெருந்துணைபுரிகிறது. முதலில் எல்லோரும் உண்மையாகவே மதக்கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் சமூகம் எவ்வகை இடையூறுமில்லாமல் வாழ்ந்துகொண்டேயிருக்குமென்பது உண்மைதானா? மதத்திலோ அல்லது கோட்பாடுகளிலோ அறிவற்ற நம்பிக்கை வைப்பதால் துன்பம், கஷ்டம், ஒழுக்க ஈனம், சுயநலம் இவற்றை உண்டாக்குகிறதல்லவா? அறிவற்ற நம்பிக்கை வைப்பவர்கள் முன்னேற வழியில்லாது தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்களா இல்லையா? பற்பல தேசங்களிலும் மதவெறி அதிகமுள்ள காலங்களில் அடிமை வாழ்வே ஸ்தாபனங்களாகச் செழித்தோங்க வில்லையா? மதத்தைக்காரணமாகக் கொண்டு பயங்கரமான யுத்தங்கள் நடைபெறவில்லையா? முஸ்லீம்களையோ, அல்லது ஹிந்துக்களையோ போன்ற மதப்பற்றுடைய ஜனங்களிடையே பெண்மக்கள் நிலை திருப்திகரமாயிருக்கிறதா?

"தெய்வீகம்" என்ற சித்தாந்தத்தினால் புதுவிதமான துன்பங்கள் ஒழுக்கத்திற்கும் சரீரத்திற்கும் ஏற்படுகிறதா

இல்லையா? கடவுள், பேய் பிசாசு முதலியவற்றின் மீது நம்பிக்கை வைப்பதினால் எத்தகைய கஷ்டங்களை மக்கள் அனுபவிக்கிறார்கள்? அதனால் அடையும் ஒழுக்கக்கேடுகள் எத்தனை? துறவறத்தின் அவசியத்தை வற்புறுத்துவதால் ஏற்படும் தூஷணைகள் எவ்வளவு? மதநம்பிக்கையிலிருந்து உண்டாகிற சதி, நரபலி, விரதங்கள், கசையடி, கடுந்தண்டனை, குருக்கள்மார்களது பிரமசரியம் முதலியவைகள் மனிதவர்க்கத்தின் துயரத்திற்கே ஆஸ்பதமாயிருக்கின்றனவா இல்லையா? கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், சமாதிகள் முதலியன கட்டுவதற்காகச்செலவிடப்படும் பெருவாரியான பணத்தை வேறு வகையில் அறிவோடு செலவு செய்தால் ஜனசமூகம் நன்மையடையாதா? இந்தியாவில் அடிக்கடி ஏற்படுகின்ற சமூகச் சண்டைகளுக்கு மதநம்பிக்கை முக்கிய காரணமல்லவா? மதநம்பிக்கை ஜனசமூகத்தின் சந்தோஷ வாழ்க்கையை அதிகரிக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அதற்கு நேர்விரோதமான உண்மைகள் இந்தியாவில் காணப்படுறதா இல்லையா?

ஒரு சாதாரண மனிதன் ஒழுக்கச்சட்டத்திற்கும், சமூக நடத்தைக்கும் சில அநுமதிகள் பெறத்தக்கவன் என வற்புறுத்தப்படுகிறது. அதற்காகவே "கடவுள்," "கர்மா" போன்ற பல மத சித்தாந்தங்கள் வழங்கப்படுகின்றது. இத்தகைய அனுமதிகள் அவனிடமிருந்து எடுக்கப் படுமேயானால் அதேமனிதன் ஒழுக்க ஈனனாகிவிடுவான் என வாதிக்கப்படுகிறது. ஒழுக்க சம்பந்தமான சட்ட திட்டங்களுக்கு இத்தகைய உத்தேசமான அனுமதிகள் வேண்டற்பாலதெனச் சொல்லப்படுவதற்கு நாம் சம்மதிக்க முடியாது. ஒழுக்கவரம்

திற்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டு • மென்ற ஓர் உணர்ச்சி ஜனசமூகத்தினிடையே இயற்கையாக இருக்கின்றன.

பரந்த நோக்கத்துடன் பார்ப்பவர்கள், ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஜனசமூகம் அடைந்த அனுபவங்களால், உண்மை, தயாளம், அன்பு முதலிய நற்குணங்கள் பொதுவாக நன்மையையே உண்டாக்கி இருக்கின்றன வென்பதையும், இதற்கு மாறான குணங்கள், தீமையையும், அதிருப்தியையும் உண்டாக்கி யிருக்கின்றன வென்பதையும் கண்டு கொள்ளுவார்கள். தவிரவும் உண்மைக்கும், அறிவுக்கும் ஒவ்வாத தான சித்தாந்தங்களின் ஆதாரத்தின் மீது நமது சரியான நடத்தையை உபயோகிப்போமேயானால், இத்தகைய சித்தாந்தங்களில் நம்பிக்கை இழக்க வேண்டி வருங்கால் அப்போது நமது நடத்தையும் நம்பிக்கை யற்றுப்போக இடமேற்படுகிறது. உதாரணமாக மதுவிலக்கை எடுத்துக் கொள்ளுங்கள். மதுவிலக்குப் பிரசாரங்கள் அநேகமாக மத சித்தாந்தத்திற்கு விரோதமான குடியை ஒழிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்வதால் வைதீகரும் மதப்பற்றுள்ள வர்களுமான ஹிந்துக்களும் முகமதியர்களும் குடியை வெறுக்கிறார்கள். ஆங்கிலக் கல்வி இந்நாட்டில் புகுத்தப்பட்ட ஆரம்பகாலத்தில் வைதீகமதத்தில் அநேகர் நம்பிக்கை இழந்தனர். அதுசமயம் தாங்கள் மதவிடுதலை பெற்றதற் கறிகுறியாக அபரிமிதமான குடிவகைகளை உபயோகிக்கத் தொடங்கினர். ஆனால் முதலிலேயே அறிவிற்குப் பொருத்தமான முறையில் சரீராரோக்கியத்திற்குக் கெடுதி விளைவிப்பது குடியே என்பதாகப்பிரசாரம் செய்யப் பட்டிருக்கு மேயாயின் பின்னால் அதிகமாகக் குடிக்க

வேண்டுமென்று தூண்டிய உணர்ச்சி உண்டாயிருக்குமா என்று கேட்கிறோம்.

மனிதன் பொதுவாகவே, கண்டுபழகும் மிருகமேயாவான். சமூகசம்பந்தமான நடத்தைகள் ஏதோ சில சித்தாந்தங்களின் மீது தான் உண்டானவை என்பதை விட்டு ஏனையோர் செய்கிறார்களே, நடக்கிறார்களே, ஆகையால் நாமும் அப்படியேதான் நடக்கவேண்டும், செய்ய வேண்டும் என்று கருதுகிறவனாயிருக்கிறான். தன்னைப்பற்றி அக்கம் பக்கத்தார்கள் கண்ணியமாக நினைக்கவேண்டுமென்று கருதுகிறான். பாரம்பரியமாய் வந்த தன்னறிவும், சிறுவயதிலிருந்து அனுஷ்டித்துவந்த பழக்க வழக்கங்களும் இதற்குத்துணைபுரிகின்றன. மத ஆதிக்கம் தேய்ந்து வருகிற மற்றய தேசங்களிலும் இத்தகைய முடிவான சம்பவங்களே நிகழ்ந்துவருகின்றன. இங்கிலாந்து பிரான்ஸ், ஜெர்மனி போன்ற தேசங்களில் கிறிஸ்துவ மதப்பற்றுள்ளவர்களும் நம்பிக்கையுள்ளவர்களும் மிகவும் சொற்பமே. ஆனால் அவர்கள் ஒழுக்க வரம்பிற்கு மாறுபட்டு நடப்பதே கிடையாது. இதற்கு மாறாக அவர்களிடம் "தேசபக்தி" "பொதுஜன சேவை" "உண்மை" "தயாள சிந்தை" "பொறுமை" "சமூக ஊழியம்" முதலிய அருங்குணங்கள் செழித்து வளர்ந்தே வருகின்றன. அதேபோல இந்தியாவிலும் மதப்பற்றும் நம்பிக்கையும் தேய்ந்து போனாலும், அல்லது அறவே ஒழிந்து போனாலும் மேற்கூறிய மற்ற தேயத்தினரைப் போலவே ஒழுக்கக்குறை வில்லாதும், அவர்களிடமுள்ள சிறந்த குணங்களோடும் விளங்குவார்கள் என்பது நிச்சயம். சிலர் காரண

வாதமானதும், கொடியதும், லோகாயுதமானதும் ஆகுமென்றும், ஜன சமூகத்தின் இயற்கையையோ, அல்லது இயற்கையின் நுட்பங்களையோ, அழகு, அன்பு முதலியவற்றையோ மதிப்பதில்லையென்றும் வாதிக்கிறார்கள். இஃது உண்மையில் ஒரு பொய்க்குற்றம் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. ஏனெனில் காரணவாதிகள் (Rationalists) இத்தியாதி குணங்களையெல்லாம் சீர் தூக்கிப்பார்த்த பின்பே எவ்விஷயத்தின் மீதும் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். மனோவிகார எண்ணங்களுக்கும், ரசஞ்ஞானத்திற்கும், போதிய கவனம் செலுத்தப்படுகிறது. இத்தகைய உபகருவிகளினாலே ஜன சமூகத்தின் வாழ்க்கையை செழிப்பாக்கவே அவர்கள் எண்ணுகிறார்கள். தவிரவும், மிகமுக்கியமானதாக, உலகத்தில் எவ்வித தெய்வாதீனமான, அல்லது, இயல்புக்கு மாறான சம்பவங்கள் நடைபெறுவது கிடையாதென்பதும், எல்லாம் ஒரே விதமான இயற்கைச்சட்டங்களாலேயே நடைபெறுகின்றனவென்பதும் அவர்களது திடமான நம்பிக்கையாகும். படைப்பாளன் என்று சொல்லப்பட்ட ஒருவனால் சூரியன் சலனமின்றி ஓரிடத்திலேயே நிற்கச்செய்யப்பட்டால், வானசாஸ்திரம் பொய்யாவதோடு அதன் உண்மையோ அல்லது புகழோ மதிப்பிழந்து விடுகின்றதன்றோ? உலகத்தில் இயற்கை ஒழுங்கு மறைந்து விடுகிறதன்றோ? கண் இமைக்கக்கூடிய நேரத்தில் புது வகையான ஜீவவர்க்கங்கள் உண்டாக்கப்படுமேயானால் ஒரு பரம்பரை சந்ததி வர்க்கம் என்ற சாஸ்திரமும், தாவர வர்க்கம் ஜீவவர்க்கம் இவற்றின் ஒழுக்க வளர்ச்சியும் என்னாவது? இவைகளையெல்லாம் காரண காரியங்களோடு தீரயோசித்துக் கடவுள் வணக்கத்தாலோ, அன்றி வழிபாட்டாலோ

ஒரு முடிவுக்கு வரயத்தனிக்காமல், தன் சுய முயற்சியாலும் எண்ணத்தாலும், ஆராய்ச்சியாலும், உழைப்பினாலுமே ஒரு பகுத்தறிவாளன் (Rationalist) எத்தகைய முடிவுக்கும் வருகிறான்.

———:0:———

# சோதிடமும் சகுனமும்.

——:0:——

மத சித்தாந்தங்களிலுள்ள நம்பிக்கையே மாந்தரின் பகுத்தறிவைச் சிதைத்து, அவர்களை ஜோதிட தீர்க்க தெரிசிகள் என்று சொல்லப்படுகின்றவர்களின் மாயவலைகளில் எளிதில் அகப்படுமாறு செய்கின்றது.

மறைவாக உள்ள இடத்தைக்காணவேண்டுமென்பதில் மனிதனுக்கு ஆவல் அதிகம்; அதனால் இனி வரப்போகும் எதிர்கால சம்பவங்களை முன்னமே உணர்ந்து, அவைகளால் தனக்கு, தற்காலத்திலிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் ஒழிவதற்கு ஏதாவது வழியுண்டா வென்பதுபற்றி அளவு கடந்த ஆசையோடும் விசாரிக்கத்தொடங்குகின்றான்.

பூசாரிகளும் மத குருக்களும் எதிர்காலத்தைப்பற்றி முன்னமே அறிந்து கொண்டிருப்பதாக எப்பொழுதும் கூறிக்கொண்டிருக்கின்றனர். தேவதைகளுக்குப் பலியிடப்படும் பிராணிகளின் தும்மல், துடித்தல் முதலிய நடவடிக்கைகளைக் கவனித்தல்; பறவைகள் பறந்துபோகும் திசைகளைப்பார்த்தல்; அந்நாட்டினருக்கு ஏற்பட்ட யுத்தம் முதலிய சம்பவங்களை வேத (Silylline books) பாராயணம் பண்ணுதல்; கஸாண்டிரா (Cassandra) வின் கதை; முதலிய இவைகள் கிரேக்கர், உரோமர் என்பவர்கள் எதிர்கால சம்பவங்களை அறிவதற்கு அடையாளங்களாக மேற்கொண்டார்களென்பது நன்கு விளங்குகின்றன. இன்னும் மந்திரவாதிகளென்ன, மையிட்டுக் குறிபார்க்கின்றவர்ளென்ன, சோதிட ரேகை சாஸ்திரக்காரர்களென்ன; தீர்க்கதரிசிகளெனப்

படுவோரென்ன—இவர்களெல்லாம் சட்ட விரோதமான பல செய்கைகளை மேற்கொண்டு ஒன்றுமறியாத பாமர மக்களைத் தங்களிஷ்டம் போல் ஆட்டி வருகின்றனர். இந்தியாவிலே மேற் கூறியோர் தங்களுடைய அட்டகாசங்களைப் பாமரமக்களிடத்தில் மாத்திரம் இன்றி, படித்தவர்கள் என்று சொல்லப் படுகின்றவர்களிடத்திலும் சுலபமாகச் செலுத்தி வருகின்றனர். பூசாரிகள், மனிதர்களின் வாழ்நாளின் நிலைமையைக் காட்டுவதற்கென்று ஜாதகங்களைக் கணித்து வருகின்றனர்; அதோடு வாழ்நாளில் நிகழவிருக்கும் தீமைகளைப் போக்கும் பொருட்டுப் "பிராயச்சித்தம்" என்னும் பெயரால் பல வகையான மந்திர தந்திரங்களையும், சடங்குகளையும் கைக்கொண்டு ஜன சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர்.

அற்ப சம்பவங்களிலிருந் தெல்லாம் நற்சகுனமென்றும் துற்சகுனமென்றும் ஏற்படுத்திக்கொண்டு, தொடங்கிய காரியங்களுக்கெல்லாம் அவைகளைப் பார்க்கின்றனர். தெருவில் நடக்கும் போது ஒரு பூனை வலமாதலையும் இடமாதலையும் கண்டு, அதனால் நல்லது கெட்டது உண்டாகும் என்று கருதப்படுகின்றது. ஒரு காரியத்தை உத்தேசித்துப்போகும் போது ஒரு கைம்பெண் எதிரேவரின் கெட்ட சகுனமாம்; அதனால் உத்தேசித்துச்செல்லும் காரியம் கைகூடாதாம்; ஆனால் ஒரு கட்டுக்கழுத்தி, அதுவும் நிறைந்த நீர்க்குடத்துடன் எதிர்ப்படுவாளானால் அது மிகவும் மேலான நற்சகுனமாம்: அதனால் உத்தேசித்துச் செல்லும் காரியம் கடியின் முட்டின்றி நிறைவேறிவிடுமாம்! வாரத்தில் ஒரு சில நாட்கள் தாம் நல்ல நாட்களாம்; ஏனையவை சூலம் கொண்ட கொடிய நாட்களாம்!

இம்மாதிரியான மூடத்தனமுள்ள சகுன நம்பிக்கைகள் எண்ணிக்கையில்லாமல் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் இந்தியர்களுக்கு, அவர்கள் அறிந்திருந்தாலும் அறியாதிருந்தாலும் கூட வருத்தத்தையும் பயத்தையும் உண்டாக்குகின்றன. இம்மாதிரியான மூடக்கொள்கைகளாகிய வித்துக்களை இளைஞர்களின் மனத்தில் சிறுவயதிலே விதைத்துவிடுவதால் அவைகள் அவர்களிடத்தில் நன்முக வேரூன்றிச் செழித்துக்கிளைத்து வளர்ந்து வருகின்றன; அவர்கள் பெரியவர்களான பிறகு அவைகளை அகற்றுவதென்றால் முடியாத காரியமாகி விடுகிறது.

மனிதனின் வாழ்நாளில் நிகழப்போகும் சம்பவங்களை முன்னரே தெரிவிக்கும் சாஸ்திரங்களிலெல்லாம், ஏதோ நக்ஷத்திரங்களின் இருப்பைக்கொண்டு கணிக்கப்படுவதாகக்கூறும் சோதிட சாஸ்திரமே மிகச் சாதாரணமாகவும் அதிமுக்கியமானதாகவும் கருதப்படுகின்றது. அதிகக்கல்வி கற்று தேர்ச்சி பெற்ற மேனாட்டு அறிஞர்களிலும்கூட அநேகர் இந்தச்சோதிடத்தில் அதிக நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் அந்த வருஷத்தில் நிகழப்போகும் முக்கியமான சம்பவங்கள் என்னவென்பதையும், எவரெவர் சாகப்போகின்றனர், பருவகாலங்கள் என்ன நிலைமையிலிருக்கப்போகின்றன வென்பனபோன்ற விஷயங்களையும் பிரபலமாகப் புஸ்தகங்களில் அச்சிட்டு வெளியிடுகின்றனர். சோதிடத்தின் மூலமாகப் பொருள்பறிப்போரைத் தண்டிக்க இங்கிலாந்து தேசத்தில் சட்டம் இருந்தபோதிலும் அந்நாட்டில் உள்ள அநேகர் இன்னும் சோதிடத்தைக் கையாடிவருவதைக் காணலாம். அநேக நாவல்கள்—

என்—ஸ்காட் (Scott) எனும் பேர்பெற்ற நாவலர் எழுதிய "கை—மேனரிங்" (Guymannering) "க்வெண்டின்—டர்வார்ட்" (Quentin Durward) எனப்படும் நாவல்களில் கூட இந்தச் சோதிட விஷயம் கையாளப்பட்டிருக்கின்றது. ஆகாயத்தில் ஆகர்ஷண சக்தியால் பல்வேறுகதிகளில் செல்லா நின்ற இந்த நக்ஷத்திர கூட்டங்களுக்கும், ஓர் மனிதனுடைய வாழ் நாளின் சம்பவங்களுக்கும், எப்படிச்சம்பந்தம் ஏற்பட்டதென்பதும், அவற்றை இவர்கள் எவ்வாறு அறிந்து இத்தனை நம்பிக்கையோடு கையாளுகின்றனர் என்பதும், அறிவிற்கே எட்டாததாக இருக்கின்றது. ஆனால் இந்தச் சோதிட கணித சாஸ்திரம் எல்லாத்தேசங்களிலும் கையாளப்படுவதோடு, அந்த விஷயத்தைத்தவிர மற்ற விஷயங்களில் மிக்க திறமையும், புத்திநுட்பமும் உள்ள பலரால் நம்பப்பட்டு வருகின்றதென்பதும் உண்மையேயாகும்.

எந்த அறிவாளியும் ஒரு விஷயம், ஏறக்குறைய சற்றேனும் தனது பகுத்தறிவிற்கு எட்டக்கூடியதாக இருந்தால் அவ்விஷயத்தை "முற்றிலும நம்பத்தகாதது" எனக் கூற மாட்டான் என்பது உண்மை. இதனால் தான் வெளிக்கு மாத்திரம் மூட சித்தாந்தங்களாக விருந்த பல கொள்கைகள் பின்னால் அறிஞர்களால் நன்கு ஆராய்ந்துணரப்பட்டு அவற்றிலுள்ள உண்மைத்தத்துவங்கள் வெளியாக்கப்பட்டன. உதாரணமாகச் சூரியப்பிரவேசத்துள் காணப்படும் பலவித மங்குல்புள்ளிகளுக்கும் (Sunspots) பருவக் காற்றுகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்ட சித்தாந்தத்தைப் பின்னால் பௌதீக வானசாஸ்திரிகள் நன்கு பரிசோதனை செய்து அதன் உண்மைத்தத்துவத்தை விளக்கினார்கள்.

"சூரிய வெளிச்சம் நமது தேகத்தில் நேராகப்படாவிடினும் அதனல் நமது இரத்தத்தில் மாறுதல் ஏற்படுகின்றது" என்ற விஷயமும் சாதாரணமாக நம்பத்தக்கதாக இல்லை. ஆனல் தேக சாஸ்திர விற்பன்னர்கள் சில வியாதிகளுக்கு மூல காரணமாக இருக்கும் கிருமிகள், இரத்தத்தை இரவில்பரிசோதிக்கும்போதுதான்புலப்படுகின்றதென்பதையும்,பகலில்அவை காணப்படுவதில்லையென்பதையும் தங்களுடைய ஆராய்ச்சியினல்நிரூபித்திருக்கின்றனர். இருந்த போதிலும் இம்மாதிரியான, வெளிக்கு நம்பத்தகாத விஷயங்களையும், விஞ்ஞான தத்துவ முறைப்படி ஆராய்ந்தறியப்படும்வரை, நம்பாமலிருத்தல் சால ஏற்புடைத்தாம்.

சோதிடத்திற்கும், முற்கூறியவாறு ஏதாவது அடிப்படையான உண்மைத்தத்துவங்களிருப்பின், அவற்றிற்குள்ள சம்பந்தங்களை விஞ்ஞானமுறையாக எடுத்துக்காட்டினலன்றே அது உண்மையென்று கொள்ளப்படும்? முதலாவதாக அவ்வித அடிப்படையான தத்துவங்களிருக்கின்றனவென்பதற்குச்சரியான—அதாவது இவைகள்தான் என்ற குறிப்பான—இதுவோ அதுவோ, வென்ற சந்தேகங்களுக்கு இடம் இல்லாத—ஆதாரங்கள் இன்னவைதான், என்று நமக்குத்தெரிய வேண்டும். பார்க்கப்போனல் இந்தச்சோதிடர்கள், இரண்டு மூன்று விதமாகப்பொருளைத் திரித்தும் மறித்தும் கூறும்புரட்டு மொழிகளை முதன்மையாகக்கையாளுவதோடு, அவர்கள் கூறும்சோதிடமானது பலபொருள்படும்மிக்கசாமர்த்தியமான வாக்கியங்களினலேயே அமைக்கப்பட்டிருப்பதும் வெளிப்படையாகத்தெரியும். இன்னும் இந்தச்சோதிடர்கள் குறிப்பாக வெளியிடும் ஆதாரமுள்ள விஷயங்களில், உண்மையாக

நடப்பவை எத்தனை? பொய்யாகப்போகின்றவை யெத்தனை? என்பவைகளையும் கணக்கிட்டு, எவை அதிகமாக இருக்கின்றன என்பதைக்கண்டு தெரியவேண்டும். தவிர—அவ்வளவு முக்கியமன்றெனினும்—எந்தெந்த நக்ஷத்திரங்கள் எவ்வெவ் விதமாக மனிதர்களுக்கு நன்மை தீமைகளைத் தருகின்றன வென்ற சித்தாந்தம் விளக்கமாகத்தெரிய வேண்டும். மேலும் அவற்றிற்கு மாறுபாடாகக்கூறப்படும் எதிர்ப்புகளுக்கேற்ற சமாதானங்களும் அளிக்கப்படவேண்டும். இந்தப்பூலோகத்தில் வாழும்மாந்தரை ஒன்ருக எடுத்துக்கொண்டோமாணுல், சாதாரணமாக ஒரு விநாடி (Second) யில் இருபது அல்லது முப்பது [30] குழந்தைகள் ஜனனமெடுக்கின்றன. அவைகள் யாவும் சோதிட சாஸ்திரப்பிரகாரம் ஒரே நக்ஷத்திர பாதத்தில் தான் பிறந்ததாகக்கொள்ளவேண்டியிருப்பதால், அவைகள் ஓரேமாதிரி உருவத்தோடு பிறந்து, ஓரேதன்மையில் வாழ்ந்து ஓரேகாலத்தில் இறக்கவும் வேண்டுமன்றே! உலகவழக்கில் அவ்வாறு இருக்கின்றதா? தவிர, அநேகவிஷயங்கள் புதிது புதிதாகக்கண்டு பிடித்துவருகின்றனர். ஏன், மரணத்தைத் தருவதான அநேக நவீனமுறைகளும் தற்காலத்தில் சாதாரணமாகக் கையாளப்படுகின்றன. இவைகளையெல்லாம் முறை தவருமல் ஆகாயத்தில் விரைந்தேகும் நக்ஷத்திரங்களுடன் சம்பந்தப்படுத்துதல் பொருத்தமுடைத்தல்ல என்பது வெளிப்படை.

மேற்குறித்தவைகளைத்தவிர, ஏனையகாரணங்களால், தக்க அத்தாட்சிகள் இல்லாத சோதிடசாஸ்திரத்தை இன்னும் மறுக்க முடியாத ஆதாரங்கள் இருந்தாலொழிய, அறிவாளிகள் நம்பமாட்டார்கள் என்பது திண்ணம். இந்தச்சோதிடத்

தை இத்தனைகாலமாக எவ்வளவோ மக்கள் நம்பிக்கையோடு கையாண்டு வருகின்றார்கள் என்பது, சோதிட சாஸ்திரத்தி லுள்ள உண்மைத்தத்துவத்தை ஒருசிறிதும் விளக்குவதா காது; அதுமக்களின் அறிவு, இன்னும் பரந்த நோக்கம் பெறா மல் குழந்தைப்பருவத்திலேயே இருக்கின்ற தென்பதையே உணர்த்துவதாகும்.

சோதிடத்திலுள்ள உண்மைத்தத்துவத்தை, உள்ளபடி ஒருமோசடியான சாஸ்திரமென்றே, கூறவேண்டியிருக்கிறது. அதில் நம்பிக்கை வைப்பது அநேகக்ஷ்டங்களையும், மனக்கிலே சத்தையுமே உண்டு பண்ணுவதாயிருக்கின்றது. இதனால் மக்கள், பூசாரிகளுக்கும் மந்திரவாதிகளுக்கும், நக்ஷத்திர அதி தேவதைகளைத்திருப்தி செய்வதற்கென மணிமந்திர பூஜாகைங் கரியங்களுக்காக, ஏராளமான பொருளைப்பறிகொடுக்கின்றனர் சோதிடமே உண்மையென ஏற்றுக்கொண்ட போதிலும் இவர்கள் பூமியில் செய்யும் இந்த மந்திர யந்திர தந்திர பூஜை கள், பரந்த ஆகாயத்தில் எத்தனையோ கோடிமைல்தூரத்திற் கப்பாலிருந்துகொண்டு அதிகவேகமாகச்சதா சுழன்று கொண் டிருக்கும் நக்ஷத்திரங்களை, எவ்வாறு திருப்திசெய்கின்றதோ அறியோம்!

ஒரு சோதிடன் ஆரூடம்பார்த்து, "காலம் போதாததா கவிருக்கிறது" என்றுசொல்லிவிட்டால் போதும், அது எவ்வளவு அத்யாவசியமான காரியமாக இருந்தபோதிலும் உடனே அதனைக்கைநழுவும்படி விட்டுவிடத்தயாராக இருக் கும் எத்தனையோ மனிதர்களை இப்பொழுதும் காணலாம். நல்ல அழகும், சம்பத்துகளும் நிறைந்த ஒருவாலிபனோ அல் லது கன்னிகையோமூல நக்ஷத்திரம் (**Mars**) போன்ற இன்

னும் சில நக்ஷத்திர நாட்களில் பிறந்திருந்தால் அவர்களுக்குக் கலியாணம்ஆவது மிகவும் கஷ்டமாம்! இந்தமாதிரியான இளைஞர்களின் மணவிஷயமாகத்தினசரிப்பத்திரிகைகளில் விளம்பரங்கள்மும்முரமாக வந்துவிடும்; ஏனெனில் அந்தக்கெட்ட நக்ஷத்திரத்தில் பிறந்த ஒருவனுக்கும் அதேமாதிரியான நக்ஷத்திர தோஷ முள்ள ஒருத்திக்கும் மணம் நடைபெறுது; வேறுவிதமாக நடைபெற்றுவிடின், புருஷனோ, மனைவியோ, மாமனாரோ, அன்றி மாமியாரோ கட்டாயம் மாண்டே தீருவார்களாம்! கலியாணமானபின்னர் எதோகாரணத்தால் கணவன் கண்ணுறங்கிவிடின், அப்பொழுது அவ்வித இளம் விதவைகள் மிக்க துர்அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்பட்டு அவர்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றார்கள். பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் குதிரைப் பந்தயம் முதலியவற்றிற்கு, மேல் பணம் கட்டுபவர்கள், அவ்வாறு செய்வதற்குமுன், ஒரு சோதிடனிடம் ஆருடம் கேட்டே பணம் கட்டுகின்றனர். சோதிடன் சொன்ன மாதிரியே அநேக மந்திரதந்திரங்களுடன் நடந்த போதிலும், அவர்களில் அநேகர் பல தடவைகளில், கட்டிய பணத்தை இழக்கின்றனர். எத்தனை தடவைகளில் அவ்வாறு மோசம் போன போதிலும், அவர்களிடம், இந்த மாயா சோதிடத்தின்பால் வைத்துள்ள மூட நம்பிக்கை குறையாமலிருப்பதை இன்னும் காணலாம். வியாபார நிமித்தமாகத் தங்கள் மூலதனத்தைப் போட்டுச் சரக்குகளைச் சேகரித்து வைத்திருப்பவர்களில் அநேகர், சோதிடனை நம்பி நல்ல காலத்திற்காகக்காத்திருந்து மோசம் போகின்றார்கள். சோதிடத்தை விடுத்துத் தங்கள் சுயமதியை நம்பி நடந்திருப்பார்களானால், மிக்க நலமாகவேபி

ருக்குமென்பதை அவர்கள் அறிகின்றார்கள் இல்லை. ஒரு அறிவாளிக்கு விஞ்ஞான தத்துவங்களெல்லாம் [Scientific truths] வெளிப்படையானவைகளாகவேயிருக்கவேண்டும்; அவற்றுள் ஏதாவது ஒரு சித்தாந்தம் தப்பிதம் என்பதாக நிரூபிக்கப்பட்டு விட்டால் அதனால் என்ன நன்மை நேரிடுவதானாலும் அது தள்ளிவிடப்படுகின்றது. சோதிடமானது வெளிப்படையாக உண்மையானதென்று நிரூபித்துக் காட்டப்பட்டது அல்லவாயினும் அதன் கொள்கைளின் பிரகாரம் நமது எதிர்காலத்தை முதலிலேயே அறிவதால் நமக்கு இப்போதிருக்கும் நன்மை தீமைகளைவிட ஏதாது அதிகமான நன்மை ஏற்படப் போகிறதா என்பதை நாம் கேட்டுத்தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றோம். இனி என்ன ஏற்படப்போகின்றதோ என்பது நிச்சயிக்க முடியாததாக இருப்பதனால், எதிர்காலத்தைக் கூடிய மட்டும் தனது மனோவலிமையாலும், சமய சாமர்த்தியத்தாலும் வென்று சமாளிப்பதில் தான், வாழ்நாளில் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஒருவன் தனது ஜாதகத்தைக் கொண்டு தனது ஆயுட்காலத்தில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு சம்பவங்களையும் முதலிலேயே உணர்ந்து கொள்ளுவானாயின் அவன் தனது நடத்தைகளில் ஒரு சிறிதும் கவனம் செலுத்தாமல், தானாக வேறு எந்தக் காரியத்தையும் செய்யமனம் இல்லாதவனாய், சமுதாய வாழ்விற்கோர் முட்டுக்கட்டையாகவே இருப்பான் என்பது திண்ணம்.

சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொள்வதானது, உயிருக்குயிராய் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் காத்தளிப்பதாகக்கூறும் ஒரு அழியாத கடவுளின் மேல் வைக்

கும் நம்பிக்கைக்கு முற்றும் மாறுனதேயாம். மதத்திலே மா றுதபக்தி கொண்டு தங்கள் இஷ்டகாரியாதிகளுக்காக அந்த சாவவல்லமையுள்ள கடவுளையே அடிபணிந்து பிரார்த்தித்து, எண்ணிய எண்ணியாங் கெய்துவதாக க்கூறும் பல மத பக்தர்கள்கூட தங்கள் கொள் கைகளுக்கு மாறாக விளங்கும், "நட்சத்திரங்களின் நியதிப் பிரகாரம் விதித்த விதி மாருது நடக்கின்றது" எனக் கூறும் அந்தச்சோதிடத்திலும் குறையாத நம்பிக்கையோடிருப்பது எதற்காகவோ அறியோம்.

இம்மாதிரியான ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மை யுடையவைகளை நம்பி நடப்பது அவர்கள் தங்களுடைய அறிவை நேர்வழியில் செலுத்தாமையையே விளக்குகின்றது. மதப்பற்று மிக்குள்ளோருக்கும் பகுத்தறிவிற்கும் வெகு தூரம் போலும்!

நாம் இவ்வளவு அதிகமாகச்சோதிடத்தைப்பற்றி வலி யுறுத்தவேண்டியேற்பட்டது எதனுலெனில், இரசாயனம், பூகோளம் முதலிய சாஸ்திரங்களேபோல் இதனையும் ஓர் உண் மைச் சாஸ்திரமாகக்கருதி வருவதாலும், இதனை முற்றும், நம்பி மோசம் போகும் மாந்தர்கள் இந்தியாவில் மாத்திரம் அன்றி இன்னும் பிறநாடுகளிலும் ஏராளமாக இருக்கின்றார் கள் என்பதனுலுமே யாகும். மேற்குறித்த எதிர்ப்புகள் சோதிடம் போன்ற இன்னும் பல போலி சாஸ்த்திரங்களு க்கும் பொருத்தமானவைகளே. உதாரணமாக மிக்க பிரக் யாதிபெற்றுள்ள இரேகை சாஸ்திரமும் போலியேயாகும். அறிவைக்கையாளுவோருக்கு எதிர் காலத்தையறிவிக்கும் ஓர் குறுக்குவழி இல்லையென்று கூறலாம்.

நாம் அதைப்பற்றி நம் அனுபவத்திற்கேற்ப ஏதோ உத்தேசித்தல் கூடும்; எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான சமாச்சாரங்கள் நமக்கு எட்டுகின்றனவோ அவைகளுக்கேற்ப நமது உத்தேசமும் உண்மையாக அமைவதைக்காணலாம். மானச தத்துவங்களின் விவரங்கள் நமக்கு அதிகமாக விளக்க முறு திருத்தலின் தற்காலத்தில் "மனிதன் எதிர்காலத்தை அறிதல் என்பது குதிரைக் கொம்பே"யாம்; ஏனெனில் எல்லாவித மனிதமுயற்சிகளிலும், எதிர் பாராத சந்தர்ப்பங்களைத்தனது புத்தி சாதுர்யத்தாலும், விடாமுயற்சியாலும் கூடுமானவரையிலும் அடக்கி ஆளலாம். அறிவாளியாக இருக்கின்ற ஒருமனிதன் தனக்கு எதிர்பாராத விஷயங்கள் சேர்ந்து அவை மனித முயற்சிகளுக்கு மேற்பட்டுவிடின் அவைகளுக்காகக்கடவுளையும் காலத்தையும் நோகாமல் "ஆனது ஆகட்டும்" என அதன் போக்கிலே எதிர்த்துநின்று தனது திடசித்தத்தால் சந்தோஷமடைகின்றான்.

———:0:———

# மதப் பாதுகாப்பாளர்கள்.

——:0:——

மதமானது பரிசோதித்தறியக்கூடாத சித்தாந்தங்களை டங்கியதாக மட்டும் இருந்திருக்குமானல் அதனைப்பற்றிய பரிசீலனைகளைத் தத்துவ ஞானிகளிடத்திலாவது, மெய்ஞானிகளென்போரிடத்திலாவது விட்டுவிடலாம். ஆனல் ஒவ்வொரு மதத்திலும்—மிக்க பரிசுத்தமானதென்றும், உயர்ந்த தத்துவ ரீதியானதென்றும், ஆதியில் போதிக்கப்பட்டதென்றும் கூறப்படும், மதத்திலும் கூட—அம்மதத்தைக்காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்டுள்ள ஒரு தனித்த கூட்டத்தார் இருக்கின்றனரென்பதைச் சாதாரண மனிதரும் அறிந்து கொள்ளலாம். அந்தக் கூட்டத்தார் ஒரு தொழிலும் செய்யாத சோம்பேரிகளாகவும், ஜனசமூகத்தின் பொருளாதாரத்திற்கொரு சிறிதும் பிரயோஜனமற்றவர்களாகவும் இருப்பதோடு; மாந்தரின் முன்னேற்றத்தைத் தடுத்து, அவர்களுடைய மனோகாயங்களுக்கு விலங்கிட்டு விட்டார்கள்.

இவ்விதமாக ஒரு பெரிய கூட்டத்தார் ஒவ்வொரு மதத்திலும் பெருகி; அவ்வவற்றின் சட்டதிட்டங்களையே பெருத்த பேராசையோடு கண்காணித்து வருகின்றனர். கிறிஸ்தவ மதத்திலே போப்பு, பிஷப்பு, பாதிரிகள், கன்னிகாஸ்திரீகளெனப் படுவோரும்; இஸ்லாமிய மதத்திலே, உயர்ந்த குருக்கள், மௌல்வி, காஜி, பக்கிரிகளெனப்படுவோரும், இந்து மதத்திலே சங்கராச்சாரியார்கள், மகந்துக்கள், குருமார்கள், சாதுக்கள், சந்நியாசிகள், இன்னும் பல்வேறு பிக்ஷாடன

மூர்த்திகளாகத் திரியும் பக்தர்களும் இருக்கின்றனர். இவர்களைத்தவிர வேறு மதத்தில் உள்ள திருக்கூட்டத்தார்களும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஜனசமூகத்திலும் இருந்து கொண்டு, அவரவர் முன்னேற்றத்தையே முதன்மையாகக் கொண்ட சுயநலப்புலிகளாக விளங்குவதோடு, அதற்காக அவர்களைப் பின்பற்றுவோர்களின் மனோ புத்திகளை விலங்கிட்டாற் போல் தடுப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து காலங்கழித்து வருகின்றார்கள்.

அந்த மதத்தை ஆதியில் ஸ்தாபித்த அவதார புருஷர்கள், பொருளைச் சேகரித்தல் கூடாதென்றும், லௌகீக ஆபாசங்களில் மூழ்காமலிருக்கவேண்டுமென்றும், ஐயந்திரிபறப்படிப்படியாகப் பறைசாற்றிச் சென்றிருக்கின்றனர்; இருந்தும், அவர்கள் மறைந்த சில வருடங்களுக்குள்ளாகவே, அந்தந்த மதப்பாது காப்பாளர்கள், மேற்கூறிய கோட்பாடுகளை முற்றிலும் மறந்து, அவ்விதப் புருஷ சிரேஷ்டர்களின் பெயர்களை நாவினால் சதா உச்சரித்துக்கொண்டிருந்த போதிலும், மௌடீகமாய் அவர்களின் நோக்கங்களுக்கு முற்றிலும் மாறாக நடப்பதையே முதன்மையாகக்கொண்ட தங்கள் கூட்டத்தாரை ஸ்தாபித்துக்கொண்டிருக்கின்றனர்.

எல்லாத் தேசங்களிலும், இவ்வித மத குருக்கள் அடங்கிய திருக்கூட்டத்தார், இருந்துகொண்டு மனிதர்களைத் தங்கள் வசப்படுத்தி, அவர்களைத் தங்களிஷ்டப்படி நடத்துவதற்கான சகல தந்திரங்களையும் உபயோகிப்பதையே கடமையாகக்கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துநாதரானவர்,—தனவந்தர்களைவிட ஏழைகளே எளிதில் தேவலோகம் சேரமுடியுமா

தலின்,—தரித்திரதசையே பிரதானமென முடிவு கட்டிச்சென்றிருக்கையில், அவரைப்பின்பற்றும் திருக்கூட்டத்தார் மதத்தின் பெயரால், ஏராளமான சொத்தை சேகரித்து வருகின்றனர்!

ஸ்பெயின் (Spain) தேசத்தின் மூன்றிலொரு பாகம் கிறிஸ்துவ மாதா கோவிலின் (Church) பங்கிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவை எடுத்துக்கொண்டோமானால் ஆதிசங்கராச்சாரியார் ஒரு ஏழையே; ஆனால் அவருடைய சித்தாந்தங்களைக் கடைப்பிடித்தொழுகும், அவருக்குப் பின்னால் வந்த மடாதிபதிகள்—சொத்து விஷயமாகவும், மடங்களின் பெயருக்குப் பிறரால் தானமாக (மான்யமாக) விடப்பட்ட பொருள்களுக்காகவும், ஒருவருக்கொருவர் சதா கோர்ட்டு விவகாரங்களில் போராடிக்கொண்டேயிருக்கின்றனர். இம்மாதிரியான விவகாரங்கள் இந்தியாவிலே உள்ள மற்ற மதப்பிரதிநிதிகளிடையேயுமிருக்கக்காணலாம். சொத்தைப்பற்றிய சச்சரவுகளுக்காக மதத்தின் பெயரால், மதத்தலைவர்களுடைய மண்டைகள் உருளுவதும் இல்லாமலில்லை.

மதங்களை ஆதியில் ஏற்படுத்தியோர் மிகவும் சாதாரண எளிய வாழ்க்கையையே நடத்திக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தற்காலத்தில் உள்ள, அந்த மதத்தலைவர்களோ, தங்களிடத்தில் அகப்பட்ட திரவியங்களை விலைமதிக்கப்பெற்ற உடைகளிலும், தங்கச் சிலுவைகளிலும், இரத்தினங்களிழைக்கப்பெற்ற நகைகளிலும் செலவு செய்து வேஷதாரிகளாக நடித்துக்கொண்டிருக்கின்றனர்.

மதத்தலைவர்கள் தங்கள் வசப்பட்ட பக்தர்களிடமிருந்து பணத்தை எவ்வாறு கறக்கின்றனரென்பதை ஒரு சாதாரணமான உதாரணத்தால் விளக்கிக்காட்டுகிறேன். எனது கிராமத்திற்குப் பக்கத்தில் உள்ள ஓர் கிராமத்திற்கு, ஒரு சங்கராச்சாரியமடாதிபதி கிருபை பாலித்து விஜயம் செய்திருந்தனர். அவர் தனது சிஷ்யர்களில் சிலரை என்னிடம் அனுப்பி, அவருடைய பாதங்களைக் கழுவிப்பாத பூசை செய்யும் புண்ணிய கைங்கரியம் செய்வதற்கு ஓர் சந்தர்ப்பமளிப்பதற்காக, எனது ஊருக்கு வரத்திருவுளமிரங்குவதால், அதற்காக என்னுடைய அனுமதியைக் கேட்டனர். அதன் பொருட்டு என்ன செலவாகுமென நான் கேட்டபோது, ஒரு நீண்ட செலவுப்பட்டியைக் காண்பித்ததோடு—பல்லக்கில் வந்தால், ஒரு கட்டணமும்; யானையே காணாத அக்கிராமத்தின் பொருட்டு யானை மீதூர்ந்துவரின், அதற்காக அதிகக் கட்டணமும்—செலுத்தவேண்டுமெனக் கூறினர். அவ்விதமான, அதிகிருபையோடு திருவுளமிரங்கிய, ஸ்வாமிகளின் விஜயத்தை நான் மறுத்தேன் என்பதைக்கூற வேண்டியதில்லை.

மேனாடுகளில், கடவுள் பிரார்த்தனை செய்து பிரசாதம் பெறுவதற்குக்கூட, கட்டணம் விதிக்கப்பட்டது என்ற விஷயம் ஐரோப்பிய சரித்திரம் வாசித்தவர்களுக்கு நன்கு தெரியும். கத்தோலிக்க மதம் பரவியுள்ள நாடுகளில் இறந்தவர்களுக்குச் செய்யப்படும் பூஜை (Masses) களுக்காக கக்கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே, புண்ய க்ஷேத்திரமெனும்காசி,கயா (Gaya] வுக்குச் சென்று கங்கா நதியில் ஏதோ சில சடங்குகள் செய்வதால் இறந்தோரின் ஆத்மா நற்கதியடைவதாக ஹிந்துக்களால் கருதப்படு

கின்றது. அங்குள்ள பூசகந்துக்கள் அல்லது பிரதம குருக்கள் எனப்படும் குட்டித்தேவதைகள் அவ்விடத்திற்கு வருகின்ற மூடாத்துமாக்களின் மூடபக்தியையே ஆதாரமாகக்கொண்டு, சில சமயங்களில் அவர்களுடைய நிலைமையைக் கூடச்சிந்தித்துப்பாராமல்,—குரு சந்நிதானம் அந்த இடத்திற்கு தனது டாம்பீக விருதுகளோடு பிரசன்னமாகி, "உனது பாட்டன், பூட்டன்களெனும் சகல பிதுர்க்களும் தேவலோகம் செல்வார்களாக" எனத்திருவாய் மலர்ந்தருளுவதற்கு முன்பே—பெருத்த தொகையை ரொக்கமாகப் பகற்கொள்ளையடித்து விடுகின்றனர்!

தங்களைப் பின்பற்றுவோர்களுடைய நம்பிக்கை பிறழாதிருக்கும் பொருட்டு, அந்தந்த மத குருக்களால் கையாளப்படும் எண்ணிறந்த தந்திரங்களிலே,—மாண்டுபோன அல்லது தற்காலத்தில் உலக வழக்கிலில்லாத, ஏதோ ஒரு பாஷையை அவர்கள் பிரயோகிப்பதும் ஒன்றாகும். அவ்வித பரிபாஷைகளில், அர்த்த சத்தைத்தவிர அவற்றின் உச்சரிப்பிலேயே ஏதோ ஓர் தெய்வ சக்தியிருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். ஒரு காலத்திலே, இந்தியாவில் வேதங்களெனப்படும் புத்தகங்கள் மிக்க புனிதமாகவும், அதனைப் பார்ப்பனனொருவன் பாராயணம் பண்ணும் போது, தாழ்ந்த சாதிகளில் பிறந்த ஒருவன் கேட்கவும் அருகனல்லவென்பதாகவும்; தப்பித்தவறிக்கேட்டு விட்டாலோ அவனது காதுகளில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்றவேண்டுமென்றதாக [மனுதர்ம] நியதிகள் ஏற்பட்டிருந்தன. ரோமன் கத்தோலிக்க (கிறிஸ்துவ) நாடுகளிலே, சாதாரண ஜனங்களால் அறிந்துணர முடியாத லத்தீன் (Latin) பாஷையிலேயே அம்மதத்தினர்

தோத்திரங்களை ஜபித்து வருகின்றனர். கிரீஸ் நாட்டிலே புதிய ஏற்பாடு (New Testament) இப்போதும், பழைய கிரேக்க பாஷையிலேயே ஓதப்படுகின்றதே ஒழிய, தற்கால வழக்கத்திலிருக்கும் கிரேக்க (Greek) பாஷையில் கையாளப் படுவதில்லை, ஏனெனில் அது மத சம்பிரதாயத்திற்கு விரோதமாம். இன்னும் இங்கிலாந்து தேசத்திலே பிராட்டெஸ்டன்ட் [Protestant] கிறிஸ்தவர்கள், சுமார் மூன்னூறு வருஷங்களுக்கு முன்னர் பேசப்பட்டு, தற்கால வழக்கிலிருக்கும் மொழிகளுக்கு அநேக விதங்களில் மாறுதலாக இருக்கும்—கர்நாடக இங்கிலீஷிலுள்ள [Bible] வேதத்தின் நடையின் [Style] போக்கை வியந்து பாராட்டுகின்றனர்! குரான் வேதமானது, இந்நாளிலுங்கூட பழைய அராபி பாஷையிலேயே ஓதப்படுகின்றது; ஆனால் இந்தியாவிலும் பெர்ஷியாவிலுமுள்ள மகமதியர் பெரும்பான்மையோருக்கு அராபி பாஷையே தெரியாது!

இந்தியாவிலே, வித்யாபிவிருத்தி யங்கத்தினர்,—எளிய மகமதிய சமூகத்தினருடைய கல்வியை வளர்ப்பதற்காக—பெரு முயற்சிகள் செய்தும், பயன் படாமல் மயங்குவதற்கான காரணங்கள் பலவற்றுள்,—அம்மதத்திய சிறுவர்கள் முதலில் இந்தக் குரான் வேதம் முழுவதையும், பாராமல் பாராயணம் செய்தாக வேண்டியிருத்தலையே, முதன்மையானதாகக்கூறலாம். இந்து தேசத்தினர், படிப்பு விஷயத்தில் மத சம்பந்தமான எதிர்ப்புகள் உண்டாகாமலிருப்பதற்காக—முல்லாக்களையும், கிராம மதப்பாதுகாப்பாளர்களையுமே, கலாசாலைகளைக் காப்பாற்றுமாறு பாது காவலராக அமைத்திருக்

கின்றனர்; அப்படிப்பட்ட முல்லாக்களால் சமுதாய முன்னேற்ற சம்பந்தமான விஷயங்களைக் கற்பிக்க முடியாதென்பது வெளிப்படை.

ஹிந்துக்களுடைய மத சம்பந்தமான வேத நூற்களெல்லாம், சாதாரண மனிதர்களால் படித்துணர முடியாத சமஸ்கிருத பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. ஈஸ்வர பிரார்த்தனைகளும், ஏனைய வைதீக சடங்குகளும், இந்தச் சமஸ்கிருத மந்திரங்களைக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. இதில் இன்னொரு சிக்கலும் உண்டு. அதாவது, வேதங்கள் எனப்படும் பழைய காலத்திய மத நூற்கள், மிக்க புராதன சமஸ்கிருத நடையில் எழுதப்பட்டிருப்பதால்,—பிரபல மதத் தலைவர்கள் பண்டிதர்கள் எனப்படும்—இவர்களுக்குள்ளேயே அவற்றின் அர்த்த சம்பந்தமான பாஷ்யங்களிலேயே ஒன்றுக்கொன்று மாறுபட்ட அர்த்தங்கள் காணப்படுகின்றன. பிராமண க்ஷத்திரிய வைசியர் எனப்படும் இருபிறப்பாளர் களாகிய மேல் மூன்று வருணத்தவர்கள் செய்யும் பூஜா கைங்கரியங்களில் வேத மந்திரங்களும்; சூத்திர வருணத்தைச் சேர்ந்தவர் செய்யும் வைதீக சடங்குகளில்—புராண இதிகாசங்களின் நடையைத்தழுவியதும், ஏறக்குறைய தற்கால சமஸ்கிருதத்தை ஒத்ததுமான—புராணமந்திரங்களும், ஓதப்படுகின்றன. ஏதோ சிலராவது அர்த்தம் கண்டு பிடிக்கக்கூடியதாயிருப்பதால் அவ்வித புராண மந்திரந்தான் பலராலும் போற்றப்படும் என்று பிறர் நினைக்கலாம். ஆனால் உண்மை அப்படியன்று. அந்தந்த ஜாதியின் மேன்மை தாழ்மை அவரவர் கையாளும் மந்திரங்களில் தானிருக்கின்றன! புராண மந்திரங்

களிலேயே பிறந்து மணந்து இறந்த சில ஜாதிகள் சென்ற ஐம்பது வருடங்களுக்குள்ளாக வேத மந்திரங்களைக் கையாளும் உரிமை எவ்வாறோ பெற்றுவிட்டதால் அவைகள் தாமாகவே உயர்ந்த ஜாதிகளாக மாறிவிட்டன!

பிராமணர், பிராமணரல்லாதார்களுக்குள் இருக்கும் கலகங்களுக்கு வித்து ஆதியில் பம்பாயிலேயேதான் ஊன்றப்பட்டது. சிவாஜி வம்சத்தைச்சேர்ந்த கோல்பூர் மஹாராஜாவானவர் வேதத்தில் குறிக்கப்பட்ட சடங்குகளில் தனக்கும் பாத்யதை உண்டு என்பதாகத்தனது உரிமையைப் பாராட்டினதே அந்த வித்தாகும். உடனே அந்த மஹாராஜாவுடைய குல குருவானவர் அதனை ஆங்கீகரிக்க மறுத்ததால் அவருடைய பரம்பரைச் சொத்துக்கள், கட்டளைகள் முதலிய வேதனங்கள் பலவும் பறிமுதல் கொள்ளப்பட்டன. அன்று ஊன்றப்பட்ட அந்தக் கலக வித்தே இன்று இவ்வித இருண்ட துவேஷமாகக் கிளம்பி முதல்தரமான தேசியப் போராட்டங்களாக எங்கும் பரிணமித்துப்பரந்து காண்கின்றது!

சொற்ப தொகையில் சகலவேத சாஸ்திரங்களையும் வாங்கி அவற்றிலுள்ள அதி இரகசிய மந்திரங்களையெல்லாம் —ஹிந்துக்களல்லாதார் உட்பட—எவர்வேண்டுமானாலும் எங்கும் படிக்கும் நிலைமைக்கு வந்துள்ள இக்காலத்திலும் கூட மேற்கூறிய வேதம் புராணம் இவைகள் சம்பந்தமான மந்திரச் சடங்கு களைப்பற்றிய விவகாரங்கள் ஒழிந்த பாடில்லையே! வைதீகர்களுக்கும் பகுத்தறிவிற்கும் வெகுதூரம் போலும்!!

பாரசீகர் (Parsees) களை எடுத்துக்கொண்டால், அவர்கள் இந்தியாவிற்குள் பிரவேசித்து சுமார் பதின் மூன்று நூற்றாண்டுகளாகியும் இப்போதுங்கூட தங்கள் கடவுளைப் பழைய இரானிய பாஷையிலேயே துதிக்கின்றனர். பேர் போன பண்டிதர்களுங்கூட் அந்தப் பாஷையிலுள்ள தாத்பரி யங்களில் மாறுபாடுடையவர்களாக இருப்பதுந்தவிர, அந்தப் பாஷை இப்போதைய ஜனங்கள் ஒரு சிலருக்காவது விளங்கு வதும் இல்லை!

பம்பாய்க்குச் சற்று தெற்கே வசித்து, இப்போது பல இடங்களிலும் பரவியுள்ள ஒரு கூட்டத்தாரைப் பல நூற்றாண்டுகளாக, ஹிந்துக்களென்றே பலரும் எண்ணியிருந் தார்கள். அவர்கள் எண்ணெய் ஆட்டி விற்று ஜீவித்து வந்த தால் தெலிங்கா (Telis) என்னும் வாணிகர்களாக அழைக் கப்பட்டார்கள். ஆனால் அவர்களிடம் ஒரு புதுமை விளங் கியது.

அவர்களால் செய்யப்படும் பூஜைகளிலும், வைதீகச் சடங்குகளிலும் அவர்கள் ஒரு நூதன பாஷையை உபயோ கித்து வந்தனர். சுமார் நூறுவருடங்களுக்கு முன்னர்தான் டாக்டர் வில்சன் (Dr. Wilson) என்ற ஒரு கிறிஸ்துவப் பாதிரியார் அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பரிசீலனை செய்து வருகையில் அவர்களுடைய பாஷை ஹீப்ரு (Hebrew) பாஷையின் மருஉமொழி யென்பதாகக்கண்டு பிடித்தார். பென்-இ-இஸ்ரேயல் (Ben-i-Israels) என்று வழங்கப்படும் மேற்குறித்த கூட்டத்தார், அநேக நூற்றாண்டு களுக்கு முன் கிறிஸ்துவ மதம் ஏகாதி பத்யம் செலுத்திய

அந்நாளிலே, இந்தியாவிற்குக் குடியேறிய சில யூதர் (Jews) களின் சந்ததிகளென இப்போதுதான் அறிகின்றோம். இந்த ஜனங்கள் சகல காரியங்களுக்கும், சர்வ சாதாரணமாக வழங்கும் மராத்தி பாஷையையே கையாண்ட போதிலும் வைதீக சடங்குகளில் மாத்திரம் ஹீப்ரு பாஷையையே இன்றும் உபயோகிக்கின்றனர்.

தங்களைப்பின்பற்றும் ஜனங்களிடத்து . மத நம்பிக்கையை நிலை நாட்டவும், அவர்களுடைய மனத்தில் (பக்தி எனும்] ஓர் வித மயக்கத்தை வேரூன்றவும், முன்னால் கூறப்பட்ட குலகுருக்களும் மதப்பாதுகாப்பாளர்களும் பிரயோகிக்கும் கருவி கரணங்களில்—புத்திக்கே விளங்காத பலவிதமான சாஸ்திர சடங்குகளே எல்லா மதங்களிலும் பிரதானமாக இருக்கின்றன.

இவ்விதச்சடங்குகள் எல்லா வகுப்பாளர்களுக்கும் பொதுவாகவும், வெவ்வேறு விதமாகவும் இருக்கின்றன. உதாரணமாக, மிகநீண்ட கோட்டுகளும், ஒருவிதப்பாதிரிக்காலர்களும், சாதாரண மனிதர்களுக்கும் கிறிஸ்தவப்பாதிரிகளுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிப்பதாக இருக்கின்றன. விலைமதிப்புள்ள அநேக சாமான்களை அதிபக்தியோடு பூசைகளுக்கெனப் பூட்டி வைக்கப்பட்டு, அவைகளைப் பற்றிய விஷயங்களில் பிறர் தலையிடுவதானது, பெரிய அபராதமாகவும், அவைகளைத் தடுக்க மிகக்கொடிய தண்டனைகளையும் நியமித்துப் பாதுகாக்கப்படுகின்றன. கோவில்களிலே சுவாமிகள் என்னும் விக்கிரகங்களைப் பொழுதொருவண்ணமாகப் பராமரிப்பது, அதற்கு அபிஷேகம் செய்வது, தூபதீபபுஷ்பங்க

ளால நறுமணமூட்டுவிது—ஆகிய இவைகள் பூசாரிகளின் முக்கிய கடமைகள். ஒரு மானிடனுக்குத்தேக மனோ உத்சாகத்திற்கு வேண்டிய, அன்னபானாதிகளாகிய சகல சாதனங்களும் அந்த விக்கிரக (கல்) சாமிகளுக்கும் வேண்டும் என்பதாக மேற்கூறிய புரோகிதப்பூசாரிகள் கருதி, அவைகள் ஒவ்வொன்றையும் முறையே அவற்றிற்கு எதிரே ஒவ்வொன்றாக நிவேதனம் செய்வதையே கடமையெனக்கங்கணம் கட்டிக்கொண்டு சேவிக்கின்றனர்! பக்தகோடிகள் அவைகளுக்குக் கோடிக்கணக்கான நிதிகளைக்காணிக்கைகளாகச் செலுத்துகின்றனர்!! அவைகள், சாமிகளின் தரகர்களாகிய மேற்கூறிய பூசாரிச்சன்னிதிளால் கொள்ளையடிக்கப்பட்டு, அதன் நிமித்தம் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு, அதற்காக சர்க்காரையும் சமாதானம் செய்விக்க அழைக்கின்றனர். மேற்குறித்த கடவுள்களுக்கும், மனிதர்களுக்கு வருவது போல எல்லாவித நோய்களும் வருகின்றதுந்தவிர, வருஷந்தோறும் குறித்த ஒரு மாதத்தில் வியாதிவாய்ப்பட்டுக் குறிப்பிட்ட நாட்களில் உயிரும் இழக்கின்றன! சிலகோவில்களிலுள்ள சாமிகளுக்கு ஒன்றோ அல்லது பலவோ மனைவிகளும் வேண்டுமாம்; அதற்காக அறிவில்லாத ஜனங்கள் தங்கள் இளமங்கையரைச் சாமிக்குத்தொண்டாற்றி நற்கதியடையுமாறு பொட்டுக்கட்டித்தத்தம் செய்துவிடுகின்றனர். தேவதாசிகளான அம்மங்கையர், உண்மையில் கோவில் பூசாரிகளுக்கும், அவர்களது நண்பர்களுக்கும் பெண்டாகி, எங்கும் பரதாசிகளாகப் பரிணமிப்பது வெளிப்படை! சில வருஷங்களுக்கு முன்னர், கோவில்களுக்குத் தேவதாசிகளைப்பொட்டுக்கட்டி விடும் வழக்கத்தைத் தடுப்பதற்காகச்

சில சீர்திருத்தக்காரர்கள் முன் வந்தபோது, வைதீகக் கோஷ்டியார் "ஐயோ மதமே போய்விடுமே" என்பதாகப் பெருத்த கூக்குரல் எழுப்பினார்கள். பம்பாய் அரசாங்கத்தாருங்கூட இவ்விதச்சீர்திருத்தத்திற்கு விரோதமாக எழுந்தார்கள்! ஆனால் நல்ல காலமாக சென்னை அரசாங்கத்தார் அதன் சட்ட சபையில் அங்கத்தினராகவிருந்த ஒரு மாது சிரோன்மணியின் பிடிவாத நன் முயற்சியால் சட்ட பூர்வமாகப் பொட்டுக்கட்டுவதை தடுத்தனர்.

வைதீகச் சடங்குகளெல்லாம் அதிகச் சிக்கல்களாக இருக்கின்றனவாயினும் புரோகிதர் அவற்றை ஒரு சிறிதும் தவறாது செய்வதிலேயே நோக்கமாய் இருக்கின்றனர். மணை போடுவதற்குப் புற்று மண், ஹோமம் வளர்ப்பதற்கு சம்ஹிதைகளெனப்படும் ஒருசில மரங்களுடைய குச்சிகள் விசேஷம் என்பதாகக்கருதப்படும். சில மரஞ்செடிகளுடைய புஷ்பங்கள் பச்சரிசி, நெய்—இவைகள் வைதீகச்சடங்குகளுக்கு அதிமுக்கியம். வைதீகச்சடங்கைச் செய்யும் ஒரு பிராமணன்,-தனது புரோகிதன் மேற்குறித்த பூஜாபாத்திரங்களுக்கிடையில் தக்க ஆசனத்திலமர்ந்து, சமஸ்கிருத பாஷையில் மந்திரங்களை ஓதும் போது (அந்தமந்திரங்களைத் தானே உச்சரிப்பதென்ற பாவனைக்காக, முக்கிய சந்தர்ப்பங்களில் என் அல்லது எனது எனும் பொருள் படும்படியான "மம" என்ற சொல்லைச் சொல்லிக் கொண்டு) தனது பூணூலைச் சில சந்தர்ப்பங்களில் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கும், சில வேளைகளில் அதற்கு மாறாகவும் மாற்றிப் போட்டுக்கொண்டு, மூக்கையும் காதையும் பிடிப்பதுமாக, ஏதேதோ புரோகிதன் சொன்னமா

திரியெல்லாம் ஆடுகின்றான். இத்தகைய வைதீகச்சடங்குகளில் ஒன்றையேனும் விவரிக்க வேண்டுமானால் ஒரு பெரிய புஸ்தகமாகவே எழுதலாம்.

இந்தமாதிரியான இன்னும் மிகச்சிக்கலான பெரியசடங்குகளை எல்லாநாடுகளிலும் காணலாம். செர்விஸ் [Service] களென்னும் பூஜைகளை ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் [மாதா] கோவில்களில் செய்வதைப் பிறர் பார்த்தால், ஏதோ குருட்டுப் பாடமாகச் செய்யும் கிரிகைகள் என்பதாகத்தெரியுமே ஒழிய, வைதீகக்கிறிஸ்தவர்கள் அவைகள் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு அந்தரங்கத் தாத்பரியத்தைக்கற்பித்துக் கொண்டு மனமுருகுவதாகத் தென்படாது. மதப்பாதுகாப்பாளர்கள், கடவுளை நினைப்பதற்காக உபயோகப்படுத்தும் மந்திர தோத்திரங்களை ஒருவிதப் புதிய நாதத்தோடு உச்சரிக்கும்படியாக ஏற்படுத்தியிருப்பதை,—கிறிஸ்தவ, பாரசீக, யூத, ஹிந்து மகமதியம் எனப்படும்—ஒவ்வொரு மதங்களிலும் காணலாம்.

மனிதர்களுடைய ஹிருதயத்தில் கடவுளைப்பற்றிய ஓர்வித பயத்தை யுண்டாக்குவதற்காகவே அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கின்றன. தவிர, கிறிஸ்து நாதருடைய பிரசாதமாகச் சாராயத்தைக் கோப்பைகளில் ஊற்றிப்பூஜா [Communion] காலங்களில், பாதிரிகள் பருகுவது, ஹிந்துக்களுக்கு எவ்வளவு வெறுப்பாய் தோன்றுகின்றதோ அதேபோல், வைதீகச்சடங்குகளுக்காகத் தங்களுடைய திரிகரணங்களையும் புனித மாக்குவதற்கு மிகச்சிலாக்கியம் என்பதாக

[பசுவின் சாணம், நீர், பால், தயிர், நெய்கலந்த] பஞ்ச கோமயத்தை நமது ஹிந்து பக்தர்கள் பருகுவதை ஐரோப்பியர் பார்த்தால் எள்ளி நகையாடுவர் என்பதும் வாஸ்தவமே!

இம்மாதிரியான முட்டாள் தனம் விஷயமுணர்ந்தோரிடத்தும் சாதாரணமாகப் பரவியிருக்கும் போது; விஷய ஞானமேயில்லாத பாமரஜனங்களுக்கு இவ்விதச்சடங்குகளால் நேரக்கக்கூடிய தீமைகள் எத்தகைய தென்பதை நாம்கூறவும் வேண்டுமோ? இத்தகைய அட்டூழியங்களெல்லாம் மதத்தைப் பாதுகாக்க நியமிக்கப்பட்ட புரோகிதக்கோஷ்டிகளால்,—மதத்தின் பெயராலும், வருணாச்சிரம தர்மங்களின் பெயராலும், சிவலோக வைகுந்த சுவர்க்க புவனங்களின் பெயராலும்—கண்ணே போல் போற்றப்படுகின்றன!!

"ஆவலோடு ஜனங்கள் எதிர்பார்க்கின்ற வகையில் நமது புரோகிதக்குருக்கள் இல்லை, ஆனல் நம்முடைய மனப்பான்மையின் மௌடீகமே அவர்களை எல்லாமுணர்ந்தோராக்கி வருகிறது" என்பதாக வால்டேயர் [Voltaire] என்ற ஒரு பெரியார் கூறியவாக்கு முற்றிலும் உண்மையே.

ஆபாசங்கள் அறவே யொழிந்த பாரமார்த்திக வாழ்க்கையையே இலக்ஷியமாகக் கொண்டுழைக்கும் இந்த புரோகிதக் குருமூர்த்திகளை—பொது ஜனங்களைவிட மேலானவர்கள்; சுயநலமற்றவர்கள்; தூயவழியில் நடப்பவர்கள்; என்பதாக ஒருசிலர் நினைத்தலும் கூடும். அவ்வாறு

அவர்கள் நினைத்தல் முற்றிலும் தவறேயாம்! மத்திய காலத்தில் (Middle Ages) கிறிஸ்துவப்பாதிரிகள் மதத்தின் பெயரால் செய்த அட்டூழியங்கள் யாவும் நமக்குத்தெரிந்ததேயாகும்.

மேனாடுகளிலே பிராடஸ்டெண்ட் கிறிஸ்துவப்பாதிரிகள், நினைத்தற்கே முடியாத பெரிய பெரிய குற்றங்களைச் செய்ததனால், அதற்கென விதிக்கப்பெற்ற தண்டனைகளைப் பத்திரிகைகளில் இக்காலத்தும் நாம் படிக்கின்றோம்! பாதிரிகளின் பிரமச்சரிய விரதம் பலவிதங்களிலும் அவர்களைக் கெட்ட வழிகளில் வீழ்த்துவதோடு, அந்த விரதத்தால் விளையக்கூடிய ஏதோ "புனிதம்" என்ற நிலைமையிக்க கேவலமானதாகவே விளங்குகின்றது.

இந்தியாவிலே குலகுருக்கள் எனப்படுவோருடைய உண்மை ஊழல்கள் பம்பாயில் மஹாராஜாகேஸ் (Maharaj Libel Case) சம்பந்தமாக வெளிவந்த, பாடியா [Bhatia] என்போரைப்பற்றிய அவதூறான விஷயங்களால் நன்கு வெளியாயிருக்கின்றன. உண்மையைக் கூறவேண்டுமானால், ஒரே அந்தஸ்தும் படிப்பும் உள்ள ஒருசாதாரண மனிதனுக்கும், பரம்பரையாக [புரோகித] குரு பதவிகளில் இருக்கும் ஒருவருக்கும் நடத்தையில் மேம்பாடிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. அறிவின் சம்பந்தமான அத்தாட்சிகள் ஒரு புறமிருக்க, ஒழுக்கத்தையும் நடத்தையையும் பொறுத்த மட்டிலும் அவற்றின் முன்னேற்றத்திற்கு மதம் என்ற ஒருகோட்பாடு அத்யாவசியமா? இல்லையா?

என்ற கேள்விக்குப் போதிய கண்கண்ட சாட்சியாக இந்த மதப் பாதுகாப்பாளர்களாகிய புரோகித குரு சன்னிதானங்களுடைய நடவடிக்கைகளே எடுத்துக்காட்டாக நிற்கின்றன.

——:o:——

# முடிவுரை.

—:0:—

இந்தியா முன்னேற்றமடைய தடையாய் இருக்கும் சில முக்கியமான குறைகளை எடுத்துக்காட்ட வேண்டும் என்கின்ற எண்ணத்தின்மீதே இந்த புத்தகம் எழுதப்பட்டது என்பதை இப்புத்தகத்தை படித்துப்பார்த்தவர்களுக்கு விளக்கவேண்டிய அவசியமில்லை.

"மனிதனுக்கு மனிதனே விரோதியாய் இருக்கின்றான்" என்கின்ற ஓர்பழமொழிக்கு ஏற்ப ஒவ்வொரு மனிதனும் தன்தன் குறைபாடுகளை உணர்ந்தால் தான் மனிதன், மனிதனுக்கு சினேகிதனாக இருக்கமுடியும். இதன் ஆசிரியராக இருக்கும் நான் தேசாபிமானத்தில் வேறு எவருக்கும் குறைந்தவனல்ல என்பதோடு, அவ்வித தேசாபிமானம் சமூக ஊழல்களையும் பகுத்தறிவுக்குறைவுகளையும் தாராளமாய் வெளியில் எடுத்துக்காட்டும் விஷயத்தில் சிறிதும் பின்னடையக் கூடிய தேசாபிமானமல்ல. ஆனால் சமூகத்துறையில் உள்ள குறைபாடுகளையெல்லாம் மறைத்துக்கொண்டு "எல்லாம் சரியாய் இருக்கின்றது" என்று சொல்லிக்கொள்ளப்படுவதான ஒருவகைத்தேசாபிமானம் நமது நாட்டில் மலிவாயிருக்கிறது. இம்மாதிரி நமது முக்கிய குறைகளை மறைத்துப்பேசுவதாலேயே அக்குறைபாடுகள் எல்லாம் மறைந்துபோய்விடாது என்பதோடு அக்குறைபாடுகள் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று கேட்டிற்குமேல் கேடாய் முடியும் என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் இருத்தவேண்டும்.

குறைபாடுகள் நீங்கவேண்டும் என்பவர்கள் அவற்றைப் பற்றி மேலெழுந்த வாரியாகவே பார்த்துக்கொண்டும் பேசிக் கொண்டும் போவதானால் அதன் மூலம் எவ்வித பயனும் ஏற்பட்டுவிடாது. குறைபாடுகள் ஒழிக்கப்படவேண்டு மானால் அதன் காரணங்களை ஊன்றிக்கவனித்துப் பார்த்து அவைகள் மறுபடியும் தலையெடுக்காதபடி அடியோடு—வேறு டன் ஒழிக்கப் பார்க்கவேண்டும். நான் ஆழ்ந்து யோசித்த வரை எனக்குப் புலப்படும் முக்கிய குறைபாடுகள் எவையென் றால் அவை பெரிதும் அறிவைப்பயன் படுத்தாமல் பழைய ஆதாரங்கள் என்பவைகளுக்கு அளவு மீறியமதிப்பும் மேன்மை யும்கொடுப்பதையும், அவரவர்கள் பகுத்தறிவுக்குத்தோன்றும் முடிவும் செய்கையும் சமூக அமைப்புக்குத் தடையாக இருப் பதாய் கருதுவதையும், மனிதனுக்கு இவ்வுலக வாழ்க்கையை விட மேல் உலக வாழ்க்கை முக்கியமானதென்று கருதுவதை யும் பொருத்த குற்றங்களாகவேயிருந்துவருகின்றன. அரசியல் அல்லது பொருளாதார முன்னேற்றத்தைப்பற்றி நாம் பேசும் போது மனிதனின் அறிவானது சுதந்திரமாயில்லாமல் பழக்க வழக்கத்திற்கும், மூட நம்பிக்கைக்கும அடிமைப்பட்டிருக்கு மானால் எவ்வித முன்னேற்றமும் அடைய முடியாது என்ப தை மறந்துவிடக் கூடாது.

நமது உயர்ந்த லட்சியத்தின் தத்துவங்களை உணரவேண் டுமானால் மதத்தலைவர்கள், குருமார்கள் என்பவர்களின் உப தேசங்களுக்கும், பழக்க வழக்கம் என்கின்ற அடிமைத்தன்மை க்கும் சிறிதும் கட்டுப்படாமல் தங்களது பகுத்தறிவைத்தாரா ளமாய் உபயோகப்படுத்தவும், அதன் பயனைக் கண்ட முடி

வின்படி காரியங்களை அநுபவத்தில் நடத்திச்செல்லவும் தாராளமாய் மக்கள் அனுமதிக்கப்படவேண்டும்.

முடிவாக உண்மையான தேச நலம் என்பது ஒவ்வொரு தனிப்பட்ட நபரினுடையவும் அறிவு வளர்ச்சியையும் முயற்சியையும் பொருத்தே இருக்கிறது.

ஒவ்வொரு தனிமனிதனும் மற்றவர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் வேண்டும் என்று கருதுகின்றானோ அவ்வளவுக்குத் தான், தானும்சுதந்திர புருஷன் என்கின்ற உணர்ச்சியுடையவனாக இருக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள நாம்அரசியல்விடுதலையையும்,பொருளாதார சுதந்தரத்தையும் பற்றிப் பிரமாதமாய்ப் பேசுகிறோம். ஆனால் அதைப்போலவே, ஏன், அதைவிட அத்தியாவசியமானசமூக சுதந்தரம், அறிவு சுதந்தரம், ஒழுக்க சுதந்தரம், முதலியன இல்லாதிருக்கிறோம். இதற்கு நாமே காரணஸ்தர்களும் பொறுப்பாளிகளுமாவோமே யன்றி அந்நியர்மீது குறைகூறுவதில் என்னபயன்? இத்தகைய சுதந்தரத்தை ஒவ்வொருவரும் பெற்றுவிட்டால் மற்றெவ்வித சுதந்தரமும் தானே வந்தடையுமென்பதில் சிறிதும் சந்தேக மில்லை.

சர்க்கார் நடத்தையும், சட்டங்களும் பெரிய தடைகள் என்று பேசுகிறோம். பொருளாதாரக் கொள்ளையையும், ஜாதிப்பாகுபாட்டையும் பற்றிக் குறை கூறுகிறோம். இத்தகைய பிரஸ்தாபம் உண்மையில் கவனிக்கத்தக்கதுதான். ஆனால் மக்கள்மீது சமூகம் ஏற்படுத்தும் தடைகள் எவ்வளவு? வகுப்புப் பிரிவினையில் உண்டாகும் ஜாதிப் பாகுபாடு எத்தகை

யதா? தங்கள் தங்கள் பரம்பரைத் தொழிலையே ஒவ்வொரு வரும் மேற்கொள்ள வேண்டுமென்று கற்பிப்பதால் ஏற்படும் பொருளாதாரக் கஷ்டமெவ்வளவு? உத்தியோகங்கள் அளிப்பதில் எவ்வித வகுப்பு வித்தியாசமும் காட்டலாகாதெனச்சட்ட சபைகளில் முழக்கம் செய்கிறோம். ஆனால் தாழ்த்தப்பட்டோர் என்று சொல்லப்படும் ஒரு கூட்டத்தாருக்குக் கிராமக் கிணற்றில் தண்ணீர் மொள்ளவோ, கோவிலுக்கு வரவோ, அல்லது பொதுச்சவுகரியங்கள் அளிக்கவோ சம்மதிக்கிறோமா? அல்லது அவர்களது கஷ்ட நிலையைக்கண்டு அநுதாபப் படுகிறோமா? ரெயில்வேக்களில் ஐரோப்பியருக்கும், ஆங்கிலோ இந்தியருக்கும் தனியிடம் ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு கோபிக்கிறோம். ஆனால் நமது தென்னிந்தியப்பிராம்மண சகோதரர்கள் கிராமத்திலுள்ள சில குறிப்பிட்ட தெருக்களை மற்றவர்கள் நடமாடாதபடி சுவாதீனம் செய்து கொண்டிருக்கிறார்களே அது இதைப்போல் அவ்வளவு கொடுமையாய் நம்மனதிற்படுகிறதா?

ஒரு குற்றத்திற்கு பதில் மற்றொருகுற்றம் செய்து விட்டதாலேயே ஒரு விஷயம் குற்றமற்றதாகி விடாது. ஒரு விஷயத்தைப்பற்றி எவ்வளவுகடுமையாகப்பேசுகின்றோமோ அந்த அளவுக்கே மற்ற விஷயத்தைப் பற்றியும் பேசாவிட்டால் கடுமையின் வேகம் குறைந்து போகும். ஓர் உண்மையான பகுத்தறிவாளன் தனது அபிப்பிராயத்திற்கும் நடவடிக்கைகளுக்கும் எவ்விதவித்தியாசமும்இருக்கக்கூடாது என்பதை கண்டிப்பாய் உணருவதோடு, தனது அறிவையும் ஒழுக்கத்தையும் வெவ்வேறாகப் பிரித்துக்கொள்ளுவதற்கு இடம் கொடுக்கவுமாட்டான். அதோடு தனது அரசியல் சுதந்திர

அபிப்பிராயத்திற்கும், சமூகதத்துவமதசம்பந்தமான சுதந்திர அபிப்பிராயங்களுக்கும் ஒருசிறிது மாறுபாடுகள் இருந்தாலும் திருப்தியடையமாட்டான். ஏனெனில் ஒரு விஷயத்தில் எவ் வித சுதந்திரம் விரும்புகிறுனோ அதே சுதந்திரம்தான் மற்ற விஷயங்களிலும் விரும்பப்படவேண்டியதாகும் என்பதை நன்றாய் உணர்வான்.

இந்தியாவில் மட்டும் அல்லாமல் பிறநாடுகளிலும் அனேகர் பரிபூரணமானபகுத்தறிவுக்கொள்கையையுடையவர்களாக இருந்தும் ஆங்காங்கு நடப்பில் இருந்துவரும் மத சம்பந்தமான அபிப்பிராயங்களை தாங்களும் தழுவிவருவதாக பிறர்நினைக்கும்படி நடந்து வருகிறார்கள். சமூக வாழ்க்கை நிலைத்திருப்பதற்கு மதம் அவசியம் என்பதாக உண்மையாகவே கருதும் சில பகுத்தறிவு வாதிகளைப்பற்றி முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஆனல் வேண்டுமென்றே கோழைத்தனத்தினால் நாஸ்திகர் என்ற பட்டம் நிந்தனையானது என்று நினைத்து தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடப்பயப்படுகின்றவர்களும் பலர் இருக்கிறார்கள்.

கடவுள் ஒருவர் உண்டு என்று ருஜுச்செய்யப் போதிய சான்றுகள் இல்லாத காரணத்தால் மட்டுமே கடவுள் இல்லை என்று எந்தப்பகுத்தறிவுவாதியும் சொல்லுவதாக நாம் நினைக்கவில்லை. மேலும் கடவுள் என்கின்ற வார்த்தைக்கு அநேகமான மதப்பிரிவுகள் இருப்பதுபோலவே பல அர்த்தங்களும் இருக்கின்றன. ஆனல்உலகநடவடிக்கைகள் சகலத்தையும் நடத்திக்கொண்டும் வணக்கத்திற்கும், பிரார்த்தனைகளுக்கும் பிரதிபயன் அளித்துக்கொண்டும் இருக்கும்படி

யான ஒரு —வுளே நம்பவில்லே என்று சொல்லுவது நாஸ்திக மானல் அ ; நாஸ்திகப்பட்டத்தை ஏற்றுக்கொள்ள எந்தப் பகுத்தறி ாதியும் வெட்கப்படமாட்டான். அன்றியும் அப்படிப்ப ட கடவுளே நம்பாதவன் மனிதசமூகத்தின் நன் மைக்கும், ்த்திற்கும், சந்தோஷத்திற்கும் உழைத்து தனது உழைப்புக வேறு உலகில் எவ்வித பிரதி உபகாரம் பெற லாம் என் ்ற எண்ணமில்லாமல் இருப்பதினல் அவன் ஒரு வைதீக—அ வுள் நம்பிக்கை உடையவனேவிட பலமடங்கு மேலானவ னயாவன்.

கடை யாகப்பார்ப்போமானல் மனிதனுக்கு, உலகில் ஜனசமூக ற்போக்குக்கேற்ற அறிவு வளர்ச்சிக்கும், வாழ் க்கை மே ாட்டுக்கேற்ற ஒழுக்கத்திற்கும் தன்னல் முடிந்த சேவை அ வளவையும் செய்தாய்விட்டது என்கின்ற திருப் தியை கா —லும் வேறு பெரிய சன்மானம் என்ன இருக் கிறது?

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

———:0:———

1. கைவல்யம் அல்லது கலைக்கியானம். 0—8—0
2. இராமாயண ஆராய்ச்சி.
   முதற்பாகம் பாலகாண்டம் 0—4—0
   இரண்டாம்பாகம் அயோத்தியா காண்டம் 0—8—0
3. ஞானசூரியன். 0—4—0
4. மநுநீதி மருமம். 0—2—0
5. இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு 0—2—0
6. சுயமரியாதைத் தாலாட்டு. 0—2—0
7. சோதிடப் புரட்டு. 0—2—
8. ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு. 0—2—0
9. சுயமரியாதைப்பாடல். 0—2—0
10. தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம். 0—3—0
11. பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை. 0—4—0
12. மேயோகூற்று மெய்யா? பொய்யா? 0—3—0
13. அகத்தியர் ஆராய்ச்சி. 0—2—0
14. கடவுளை நிந்திக்கும கயவர்கள் யார்? 0—2—0
15. கதர்-மூடநம்பிக்கை [இங்கிலீஷ்] 0—2—0
16. கடவுளும் பிரபஞ்சமும் 0—4—0
17. இந்தியாவின் குறைபாடுகள் 0—8—0
18. இராமசாமியின் லங்கைசொற்பொழிவு 0—0—6
19. சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா? 0—0—3
20. காந்தியின் உண்மைத்தோற்றம். 0—c—3

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

——:0:——

1. இயற்கைமதம் ... 0—8—
2. சிதம்பர ரகசியம் ... 0—8—
3. சுதந்தரப்போர் அல்லது முற்றுகை ... 0—4—
4. மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை ... 0—8—
5. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—
6. சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... 0—4—
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—
8. மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் [50 படங்களுடன் 200 பக்கங்கம் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும் ... 2—0—
9. சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—
10. சாமிகளின் அடிமை ... 0—12—
11. **The Crux of the Indian Problem (in English)** லண்டன் பதிப்பு 1—0—
    குடி அரசு சந்தாதாரர்களுக்கு 0—8—

மானேஜர்,
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---

உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.